# வினோபாவின் குரல்

2 AUG 1956

ஆசிரியர் :

நெரூர் சு. சிவசுப்பிரமணியன்

சர்வோதயப் பிரசுராலயம்

(அகில பாரத சர்வசேவா சங்கம்)

தஞ்சாவூர்

முதற் பதிப்பு—ஏப். '56—3000

விலை அணா 8

beer Printing Works, Madras (3170)

2 - AUG 19
MADRAS

# முகவுரை

இச்சிறு நூல் பூஜ்ய விநோபா அவர்களின் சரிதம், சர்வோதய இயக்கம், பூதான இயக்கம் இவைகளைப் பொருளாகக் கொண்டு எழுதப்படுவது. ஆங்கிலத்தில் ஸ்ரீ சுரேசராமபாய் அவர்கள் Vinoba and his Mission என்ற நூலை வெளியிட்டுள்ளார். இதற்கு அது முதல் நூலாயமைவதை வெளியிடுதல் என் கடமை.

அன்பும் அறனுமே துணைகொண்டு காந்தியடிகள் பெற்ற சுயராஜ்யம் மேலும் என்ன செய்யப் போகின்றதென்று உலகம் கவனிக்கும்பொழுது அவரது பிரதம சீடர் விநோபாவடிகள் தாமும் அவைகளையே துணை கொண்டு சுதந்திர நாடுகளில் தலைவிரித்தாடும் பிரச்னைகளைத் தீர்க்க முயலுகின்றார். அனைவரும் உய்யும் சர்வோதயமே அவர் இலட்சியம். அதை நிலைக்கச் செய்ய கிராமத் தொழில்கள், பூதானம், கிராம சுயவாட்சி இவை சாதனங்கள். தற்செயலாகத் தோன்றி பெரியதோர் இயக்கமாக வளர்ந்துவிட்டது பூதான இயக்கம். உலகம் அடிகளையும் இவ்வியக்கத்தையும் கூர்ந்து கவனித்து நிற்கின்றது.

சர்வோதயம், பூதானம் என்ற சொற்களும் இயக்கங்களும் உலகில் அறத்தை நிலைநாட்டத் தோன்றியு... என்பதை உணரும்பொழுது இச்சிறு நூல் அவைகளைச் செவ்வனே விளக்கிவிடும் என்று மகிழ்ச்சி கொள்வதற்கில்லை. அவைகளை அறிய இது அரிச்சுவடி போலமையின் சாலும். பரந்த படிப்பும் அறிவும் அநுபவமுமே பெரு நூ...லையாக்கும் திறம் பெற்றவை.

சர்வோதயப் பிரசுராலயத்தார் இதை வெளியிட ...ற்றுக் கொண்டதற்கு அவர்களுக்கு என் கடப்பாடு.

நெ. சு. சிவசுப்பிரமணியன்

நெரூர்,
10–1–56

2-AUG 1956
MADRAS

# பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| I | அடிகளின் சரிதம் | ... | 1 |
| II | சர்வோதய இயக்கத்தின் தோற்றம் | ... | 13 |
| III | பூதான இயக்கத்தின் தோற்றம் | ... | 20 |
| IV | டில்லி யாத்திரை | ... | 28 |
| V | உத்தரப் பிரதேச யாத்திரை | ... | 41 |
| VI | பீஹார் சுற்றுப் பிரயாணம் | ... | 58 |
| VII | பீஹாருக்குப் பிறகு | ... | 68 |
| VIII | சம்பத்து–ச்ரம–ஜீவன் தானங்கள் | ... | 80 |
| IX | நில விநியோகம் | ... | 84 |
| X | தண்ட சக்தியும் லோக சக்தியும் | ... | 88 |
| XI | தமிழரின் பணி | ... | 97 |
| | அநுபந்தம் : | ... | 98 |

2-AUG
MADRAS

# விநோபாவின் குரல்

## I

## அடிகளின் சரிதம்

### அடிகளின் பிறப்பு

1895-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 11-ம் தேதியன்று ககோடே என்ற கிராமத்தில் அடிகள் பிறந்தார். அவர் தாயார் ருக்மிணி தேவி; அவர் தந்தையார் நரஹரி சம்புராவ் பாவே. தந்தை நெசவு நிபுணராக பரோடா வில் வேலை செய்து வந்ததினால், பாட்டனார் சம்புராவ் பாவேயுடன் ககோடே கிராமத்தில் விநோபா குழந்தைப் பருவத்தைக் கழித்தார். அவருடன் பிறந்த இரு சகோ தரிகளும் காலமானார்கள். இரு சகோதரர்களில் ஒருவ ரான பால்கோபா பாவே உருளிகாஞ்சனில் இயற்கைச் சிகிச்சைசாலை நடத்தி வருகிறார். மற்றவரான சிவாஜி மொழி நூல் வல்லுநர், சிறந்த பண்டிதர்.

விநோபா ககோடே கிராமத்தை விட்டு தாயாருடன் பரோடா சென்று தகப்பனாருடன் வாழ ஆரம்பித்தார். யோதனைசக்தி மிகுந்த தகப்பனார் அவருக்கு ஆங்கிலம், கணிதம் முதலிய பாடங்களைச் சொல்லிக் கொடுத்து 1910-ம் வருஷம் ஆங்கில நான்காம் பாரத்தில் சேர்த்தார். அவர் பள்ளிப்பாடங்களை அக்கறையுடன் படித்துப் பரீக்ஷைகள் தேறியதுடன் மகாராஷ்டிரப் பெரியார் களின் பாசுரங்களையும் நூல்களையும் வெகு சிரத்தை யுடன் படித்துவந்தார். அப்பொழுதே அவருக்கு தேசீய இலக்கியத்தில் பற்று அதிகம். கணிதத்திலும் அவருக்கு

ஆர்வம் உண்டு. 1911-ல் மெட்ரிகுலேஷன் பரீக்ஷை தேறி இன்டர் வகுப்பில் சேர்ந்தார். இரண்டாம் வருஷம் கலாசாலையில் படிக்கும்பொழுது அவருக்கு சிந்தனைப் புரட்சி உண்டாகி விட்டது; மனதில் அமைதியை நிலைக்கச் செய்யும் பரிசீலனையில் அப்பொழுதே இறங்கி விட்டார். அவருக்கு பள்ளிப்படிப்பு உலக வாழ்க்கை ஆகிய இரண்டுமே பயனற்றவையாகப் பட்டன.

1916-ம் வருஷம் ஒருநாள் தம் நற்சாட்சிப் பத்திரங்களையெல்லாம் கொளுத்திவிட்டு தாம் இனிப் பள்ளியில் படிப்பதில்லை என்று தம் தாயிடம் சொன்னார். அவ் வருஷம் மார்ச்சு மாதம் பரீக்ஷை எழுத பம்பாய்க்குப் புறப்பட்டு பம்பாய் செல்லாது நேரே காசியை நோக்கிச் சென்றார். அவர் ஆன்ம அறிவையும் சாந்தியையும் அடைவதிலன்றி பிறவற்றில் தமக்கு அக்கறை உண்டாகவில்லை யென்று நண்பர்களிடம் சொல்லி வந்தார்.

காசியில் அவர் சமஸ்கிருத மொழி பயின்று வந்தார். அச்சமயம் காசி சர்வகலாசாலை விழாவில் திரண்டிருந்த இந்திய மன்னர்களுக்கு காந்தியடிகள் ஒரு துணிகரமான பிரசங்கம் செய்தார்; பெண்டிரணியும் ஆபரணங்களை அவர்கள் அவ்வளவு பாராட்டுவதேன் என்று கேட்டார். அப்பிரசங்கத்தைப் பத்திரிக்கைகளில் படித்தவுடன் வினோபா காந்தியடிகளுக்கு, அரசியல் ஆன்மீகம் முதலிய பிரச்னைகளைக் குறித்து ஒரு கடிதம் எழுதினார். காந்தியடிகள் பதிலெழுதினார். கடிதங்கள் இருவரையும் கூட்டுவிக்கப் போதாவென்றும், கோசரப் ஆச்ரமத்திற்கு வரும்படியும் காந்தியடிகள் கோரினார். 1916, ஜுன் 7-ம் தேதியன்று ஆச்ரமத்தில் காந்தியடிகளை வினோபா சந்தித்தார். சீடனின் பக்தியும் குருவின் அருளும் ஒன்றுபட்டு உயரவேண்டி வினோபா ஆச்ரமத்தின் அங்கத்தினரானார்.

'நான்' என்னும் அகந்தையை அகற்றும் முயற்

சிக்குக் களஞக ஆச்ரமத்தை ஏற்ற அவர் தம்மை ஜட பரதனைப் போன்று பழக்கி வந்தார். இட்ட வேலையைப் பணிவுடன் செய்து சத்தமில்லாமல் வாழ்ந்து வந்தார். தினம் மாலையில் வாதவிவாதங்கள் நடைபெறும். அவர் அதில் கலந்து கொண்டாலும் பல கேள்விகள் கேட்க மாட்டார். அவர் தனிப் பிறவி, அவர் நோக்கு வேறு; அவர் பிறரினும் எவ்வளவோ உயர்ந்து நின்ருர் என்பது அணித்தே புலஞகிவிட்டது.

விஞேபா தம் பெற்ருேருக்குத் தம் யோகக்ஷேமத்தை எழுதவில்லையென்பதை அறிந்த காந்தியடிகள், "உங்கள் குமாரன் என்னுடன் இருக்கிருர். பல்லாண்டுகள் முயன்று நான் பெற்றுள்ள அடக்கத்தையும் உணர்ச்சியையும் சிறு வயதிலேயே அவர் பெற்றிருக்கிருர்" என்று அவர்களுக்கு எழுதினர்.

## ஆச்ரமத்தினின்று விடுமுறை

ஆச்ரம வாழ்க்கை விஞேபாவின் மெய்நலத்தைச் சிதைக்கவே அவர் ஒரு வருஷ விடுமுறை வேண்டினர். காந்தியடிகளும் அவருக்கு விடுமுறை அளித்தார். விஞேபா ஸ்ரீ நாராயண சாஸ்திரி மராதே என்பவரிடம் பிரம்ம சூத்திரத்தின் சங்கர பாஷ்யத்தைப் பாடம் கேட்டார். விடுமுறையின் பாதிப் பொழுதை கிராமங்களில் சுற்றிக் கழித்தார். அச்சமயம் அவர் உபநிஷத்துகள், பகவத்கீதை, பதஞ்சலி யோக சூத்திரம், நியாய சூத்திரம், வைசேஷிக சூத்திரம், மநுஸ்மிருதி, யாக்ஞவல்க்யஸ்மிருதி இவைகளைப் பயின்ருர். பள்ளி மாணவர்களை ஒரு வகுப்பாகத் திரட்டி ஒரு பட்டினம் படிக்கு அரையணு கூலியாக ஊர்க்காரர்களுக்கு மாவு அரைத்துக் கொடுத்தார். அவ்விதம் சேர்ந்த பணத்தைக் கொண்டு வாசகசாலைக்குப் புத்தகங்கள் வாங்கிக் கொண்டார்.

தாம் படிப்பதையும் செய்வதையும் காந்தி அடிகளுக்கு எழுதிவிட்டு, "நான் கூடியவரை ஆச்ரம விதி

களை அநுசரிக்கிறேன். நான் என்ன சொல்வது? இறைவன் என்னைத் தொண்டனாக ஏற்பானா என்ற ஒன்றே என்னைக் கனவிலும் வாட்டுகிறது. தங்களைத் தந்தையாகக் கொள்ளும் வினோபா தாங்கள் கையாலேயே பதிலெழுத வேண்டுகிறான்" என்று எழுதினார்.

குருவையும் சீடன் விஞ்சிவிட்டான் என்ற பூரிப்புடன் காந்தியடிகள், "உனக்கு என்ன அடைமொழி கொடுப்பதென்பது தெரியவில்லை. உன் சீலமும் அன்பும் என்னை முறியடிக்கின்றன. நான் உன்னை அளந்தறிய இயலாது. நீயே பரீக்ஷித்துச் சொல்லும் முடிவை என்னுடையதாக நான் கொள்வேன். உனது தந்தை ஆக நான் இசைந்துவிட்டேன். உன்னிடம் எதிர்பார்த்தது எனக்குக் கிடைத்துவிட்டது. நற்றந்தை தன்னிலும் தனயனிடம் நன்மைகளைப் பெறுகிறான். தந்தையின் பணியை மேற்கொண்டு செய்வதே மகன் கடமை. தந்தை உண்மை, அன்பு, துணிபு இவைகளைப் பெற்றிருந்தால் மகன் அவைகளை அதிகமாகப் பெற்றுவிடுகிறான். நீ அவ்விதமே ஆகிவிட்டாய்; இதில் என் முயற்சி எதுவுமில்லை. அன்பின் கொடையாக எனக்கு நீ தந்தையின் உரிமையை அளிப்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன். நான் இதற்குத் தகுதி பெற வேண்டும். நான் ஹிரணியனானாலும் நீ பிரஹலாதனாக வேண்டும். நீ சொல்லுவது சரி. ஆச்ரமத்திற்கு வெளியிலும் நீ ஆச்ரம விதிகளை ஏற்றுக் கொண்டுள்ளாய். இறைவன் உனக்கு நீண்ட ஆயுளைக் கொடுக்கட்டும். இறைவன் உன்னை இந்நாட்டின் தொண்டனாக்கட்டும். அதுவே என் பிரார்த்தனை" என்று கைப்பட பதிலெழுதினார்.

விடுமுறை தீர்ந்த அன்றே, அந்நிமிஷத்திலேயே வினோபா மீண்டும் ஆச்ரமத்தில் திரும்பப் புகுந்தார். அனைவரும் அவர் வருகையைப் பாராட்டினார்கள்.

காந்தியடிகள் ஒருசமயம் அப்படிக் கணக்காக வந்ததைக் குறிப்பிட்டு அது உண்மையில் உள்ள பற்று என்று சொல்ல, விநோபா கணிதத்திற்குத் தாம் கொடுக்கும் மரியாதை என்று பதிலளித்தார்.

1918-ல் விநோபாவின் தாய் காலமானார். அது சமயம் காந்தியடிகள் விநோபாவை தாய்க்குத் தொண்டு செய்ய ஊருக்கு அனுப்பி வைத்தார். அவரது தாய் மிகவும் தெய்வ பக்தியும் உபகார சிந்தையும் உள்ளவர். அவர் தந்த பயிற்சியே விநோபாவுக்கு சிறந்த போதனையாக அமைந்தது. விநோபா ஆன்மிக சிந்தனையும் தவமும் பெற்றது தம் தாயிடமிருந்தே என்று சொல்லலாம். அவர் எதைச் செய்தாலும் ஈச்வரார்ப் பணமாகச் செய்வார், பிறருக்கு உதவுவதைத் தம் கடமையாகக் கொள்வார்.

வர்தாவில் 1921 ஜனவரி, 14-ம் தேதியன்று சபர்மதி ஆச்ரமத்தின் கிளை ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. அதற்குத் தலைமை வகித்த ரமண்ஜிலால் தேக அசௌக்கியத்தால் அதைக்கொண்டு செலுத்த முடியாமல் போகவும் காந்தியடிகள் விநோபாவை அதை நிர்வகிக்க அனுப்பினார். அவர் நண்பர் தோத்ரேயும் அவர் சீடர்கள் ஸ்ரீ வல்லபஸ்வாமி முதலியோரும் அவருடன் சென்றார்கள். அப்பொழுது ஆச்ரமம் மகன்வாடியிலிருந்தது; பிறகு பஜாஜ்வாடிக்கு மாற்றப்பட்டது. அச்சமயம் விநோபா 'மகாராஷ்டிர தர்மம்' என்ற மாதப் பத்திரிக்கை நடத்தி வந்தார். பிறகு அது வாரந்தோறும் வெளிவரலாயிற்று. 1923-ம் ஆண்டு நாகபுரி கொடி சத்தியாக்கிரகத்தின் பொழுது விநோபா அவர்கள் சிறைக்கு அனுப்பப்பட்டார். நண்பர்கள் அவரைப் பார்க்கச் சிறைக்குச் சென்றார்கள். அச்சமயம் சிறையதிகாரிகளும் அங்கு இருந்தார்கள். அவர் சிறையைப் பற்றி, "சர்க்கஸில் மிருகங்களை மனிதர்கள் ஆட்டுகிறார்கள். இங்கு சிறையில் அதற்கு நேர்மாறாக மிருகங்கள் மனிதர்களை ஆட்டி

வைக்கின்றன ” என்று சொன்னர். அவர் அகோலா சிறைக்கு மாற்றப்பட்ட பொழுது அங்கிருந்த சாதாரண தண்டனையடைந்த அரசியல் கைதிகள் உடற்பாடுபட மறுத்தார்கள். விநோபா உடற்பாடின்றி உண்ணுவது பாபம் என்பதை விளக்கவும், அவர்கள் பாட்டை ஏற்றுக்கொண்டார்கள்.

1923-ல் காந்தியடிகள் விநோபாவை தென்னட்டில் நடந்த வைக்கம் சத்தியாக்கிரகத்தில் கலந்துகொள்ள அனுப்பி வைத்தார். அப்பொழுது வல்லபஸ்வாமியும் அவருடன் சென்ருர். அங்கிருந்து திரும்பியதும் விநோபா தம் கிராம சேவைத் திட்டத்தை ஆரம்பிக்கலானுர். முன்னூறு கிராமங்களில் சேவையை மேற்கொள்ளும் திட்டம் தொடங்கப்பட்டது. 1932-ல் இரண்டாவது வட்ட மேஜை மகாநாட்டினின்று காந்தியடிகள் திரும்பியதும் நாட்டிலுள்ள பீதியையும் ஏமாற்றத்தையும் கண்டு விநோபா ஜல்கானில் ஒரு துணிகரமான பிரசங்கம் செய்தார். அதற்கு அவருக்கு ஆறுமாத தண்டனை கிடைத்தது. தூலியா சிறையில் ஒருநாள், “மக்கள் ஆங்கில ராஜ்யத்தை இராவண ராஜ்யமாகவும், காந்தியடிகளை இராமராகவும், வல்லபாய் அவர்களை ஹநுமனுகவும், ஜவாஹர்லாலை அங்கதனுகவும் உவமித்துப் பேசுவது வழக்கமாகிவிட்டது. என்னை எவருடன் உவமிப்பது என்ற எண்ணம் எனக்கு வருவதுண்டு. கல்லான அகலிகையுடன்தான் நான் என்னை ஒப்பிட்டுக் கொள்ள வேண்டும். அவ்விதம் முழுதும் ஆனல் என் வாழ்க்கை பயனுடையதாகும்” என்று நண்பர்களிடம் சொல்லிக் கொண்டார். அவர் அரசியல் தொண்டும் பிறவும் ஏற்றது ‘நான்’ என்பதை முற்றிலும் அழித்துக் கொள்ளவே தான். ஆசையற்ற பேராசை அதனினும் வேறேது? விநோபா எழுதிய கடிதத்திற்கு பதில் எழுதுங்கால் காந்தியடிகள் அவரை ‘கிருத யுக விநோபா’ என்று அழைத்து, “நான் ஏதாவது சொல்ல வேண்டுவதுள

தாயின், நீ கொள்ளும் கடுந்தவம் விண்ணுலகை மண்ணுலகிற்குக் கொணரப் போதியதாகும் என்பதுதான். இன்னும் உளதாயின் பிறகு எழுதுகிறேன்'' என்று எழுதினார்.

பிறகு நால்வாடியில் அமர்ந்து தம் குருவுக்கு எழுதிய கடிதத்தில் "வர்தா ஆச்ரமம் ஆரம்பித்துப் பன்னிரண்டாண்டுகள் ஆகின்றன. சரியான நல்ல அநுபவங்கள் கிடைத்துள்ளன. அகந்தை அகன்று விட்டது. 'அவனன்றி எதுவு மில்லை' யென்பதும் உறுதியாகின்றது. நீங்கள் சொல்லாவிட்டால் நான் இவ்வளவு காலம் இங்கு தங்கி யிருக்கமாட்டேன். இவ்வுலகில் உங்கள் ஆசிகளையன்றி யான் எதையும் பொருட்படுத்தேன். ஆச்ரம விரதங்களை அநுஷ்டிப்பதையே கடமையாகக் கொண்டுள்ளேன். என்னிடம் பல குற்றங்களிருப்பதையும் உணருகின்றேன். என் பக்திக்கு அதிகமாகவே இறைவன் எனக்கு அநுக்ரகம் செய்துள்ளார்.......தங்கள் ஆசிகள் என் குறைகளை நிறைத்துவிடும் என்ற நம்பிக்கையுடன் செல்லுகின்றேன். இருந்தாலும் அவைகளைக் கோரி இதை எழுதவும் செய்கிறேன். இந்த எளிய தொண்டனையும் தங்கள் பாதுகாப்பில் வைத்துக் கொள்ளுங்கள். உங்கள் பெருவேள்வியில் சிறந்த ஆகுதியாகும் தகுதியை அவனுக்குப் பெற்றுத் தாருங்கள்; பணிக்க உள்ளவைகளைப் பணியுங்கள்'' என்று எழுதினார். இம்முறையில் குருவை ஏற்றுக்கொண்ட சீடன் வேறு யார்? அத்தகைய சீடனுக்கு பதிலெழுதிய காந்தியடிகள், "சிரஞ்ஜீவி வினோபா'' என்று வாழ்த்தி "உன் அன்பையும் நம்பிக்கையையும் கண்டு என் கண்கள் ஆனந்தக் கண்ணீர் சொரிகின்றன. அவைகளைப் பெற எனக்குத் தகுதி உண்டோ இல்லையோ! ஆயின் அவைகள் உனக்கு நிச்சயமாக நன்மை செய்யும். அரும் பெரும் பணிக்கு நீ ஆளாகப் போகின்றாய்'' என்று எழுதினார். இத்தகைய

குருசீடர்கள் இந்த இருபதாவது நூற்ருண்டில் வேறெங்கு காணக் கிடைப்பார்கள்?

1947-ல் விநோபாவின் உடல் நலம் குறைய, அவரை மலைவாசம் செய்யுமாறு மருத்துவர்கள் சொன்ஞர்கள். விநோபா அருகாமையிலுள்ள பவஞர் குன்றிற்குச் சென்று அதுவே தமக்கு மலைவாசம் எனக் கொண்டார். அங்கு பணமின்றி பாட்டாலே வாழ்க்கைத் தேவைகளைப் பெறும் பெரு முயற்சியில் பரிசீலனைகள் செய்து கொண்டும், சுகாதாரத்தைக் காக்கும் தோட்டியாகத் தம்மை அமர்த்திக்கொண்டும் இருக்கும் சமயம் இரண்டாவது உலக மகாயுத்தம் தோன்றியது. காந்தியடிகள் தனி நபர் சத்தியாக்கிரகத்தைத் தொடங்கி அதற்கு முதல் களபலியாக விநோபாவைத் தேர்ந்தெடுத்தார். அது சமயம் விநோபா யார் என்பதை உலகிற்கு அறிவிக்கும் முறையில் அவர் எழுதியதாவது :

" நான் 1916-ல் இந்தியாவுக்குத் திரும்பியபொழுது கலாசாலைப் படிப்பை இடையே விட்டவர் விநோபா ; பெரிய சமஸ்கிருத பண்டிதர் ; ஆச்ரமம் ஆரம்பித்த பொழுதே அதில் சேர்ந்தவர் ; சமஸ்கிருதப் பயிற்சி அதிகம் பெற்றுத் தகுதியுடன் வேலை செய்ய ஒரு வருஷ விடுமுறை பெற்றுச் சென்று, ஓர் ஆண்டிற்குப் பிறகு சரியாக அதே மணிக்குத் திரும்பி வந்தவர். நான் அவர் அன்று திரும்பவேண்டியவர் என்பதை மறந்துவிட்டேன். ஆச்ரமத்தில் மலஜல சுத்தி, சமையல் முதலிய எல்லா வேலைகளையும் செய்தவர். அவரது ஞாபக சக்தி அபாரம். இயற்கையாகவே கற்பதில் நோக்குடையவர். எவரும் பெற்றிராத நிபுணத்துவத்தை நூற்பதில் அவர் பெற்றிருக்கிருர். அனைவரும், நூல் நூற்பதை ஏற்றுக்கொள்ளுதலே நாட்டின் வறுமையைப் போக்கக் கூடியதென்ற துணிபுள்ளவர். கைத்தொழில் மூலம் கல்வி புகட்டும் ஆதாரக் கல்வி முறையை அமைக்க ஸ்ரீமதி ஆசா தேவிக்கு மிகவும் உதவி புரிந்தவர். அவர்

நூற்பைத் துணையாகக் கொள்ள உதவும் பாட புத்தகம் எழுதியுள்ளார். அது ஒரு தனிச் சிறப்பு வாய்ந்தது. ஏளனம் செய்பவர்களையும் நூற்பைத் துணை கொள்ளும் ஆதாரக் கல்விமுறை சிறந்தது என்று ஏற்றுக் கொள்ளச் செய்துள்ளார். தக்ளியால் நூற்பதை அவர் ஒரு கலையாக்கி, அதன் பயனை விளக்கி உள்ளார். அவருக்கு நிகராக நூற்கக் கூடியவர் இந்தியாவில் இல்லையென்றால் அது மிகையாகாது.

" இருதய பூர்வமாக தீண்டாமையை அவர் அகற்றியுள்ளார். என்னைப் போன்றே சமுதாய ஒற்றுமையில் பிடிவாதமாக நம்பிக்கையுள்ளவர். இஸ்லாம் தர்மத்தை அறிய ஒரு வருஷம் பாடுபட்டு அரபிமொழியையும் குர்ரானையும் பயின்றார். அண்டை அயலாரான முகம்மதியர்களுடன் உறவாட அது அவசியமென அவருக்குப் பட்டது.

" அவர் கட்டளையை சிரமேலேற்று எத்தகைய தியாகத்திற்கும் தயாராக உள்ள பல சீடர்கள் அவருக்குண்டு. அவர் ஓர் இளைஞனை குஷ்ட ரோகிகளுக்குத் தொண்டு செய்யத் தயாரித்துள்ளார். அவருக்கு மருத்துவம் தெரியாதிருந்தும் அக்கறையினால் அவர்களுக்குச் சிகிச்சை செய்ய நன்றாகக் கற்றுக் கொண்டுள்ளார். அவர் பல இடங்களில் சிகிச்சை சாலைகளை ஏற்படுத்தி நடத்தவும் சக்தி பெற்றுவிட்டார். வர்தாவில் மஹிளாச்ரமத்தை விநோபா நிர்வகித்து வந்திருக்கிறார். தரித்திர நாராயணனை என்றும் வழிபடுபவர். அவர் முதலில் வர்தாவுக்கு அருகாமையிலிருந்தவர் இப்பொழுது பவநார் என்ற கிராமத்தில் கிராம மக்களுக்குச் சேவை செய்து கொண்டிருக்கிறார்.

" அவர் இந்தியா அரசியல் விடுதலைபெற வேண்டுமென்று நம்புபவர். அவர் சரித்திரம் படித்தவர். அவர் கைத்தொழில்கள் நிலைபெறாவிடில் கிராமங்களுக்குச் சுதந்திரம் கிட்டாது என்று நம்புகிறார். அவர் கைராட்டை

அஹிம்சையின் சின்னம் என்ற கொள்கையினர். அவர் பல சத்தியாக்கிரக இயக்கங்களில் பங்கு கொண்டவர். அவர் என்றும் அரசியல் விளம்பரம் பெற்றவரல்ல. சத்த மில்லாத நிர்மாண வேலை, போட்டியுள்ள அரசியல் வேலையினும் சிறந்தது என்ற திட நம்பிக்கை கொண்ட வர். நிர்மாண வேலையில் இருதயபூர்வமான நம்பிக்கை யில்லாதவர்களுக்கு சாத்விக எதிர்ப்பு கூடுவதல்ல என்ற துணிபு கொண்டவர்.'' காந்தியடிகளே இவ்வாறு கூற அடிகள் பெற்ற தகுதியை என்னென்பது! அவர் அச்சமயம் சத்தியாக்கிரகம் செய்யு முன்பே கைது செய்யப்பட்டு நான்கு வருஷ தண்டனை விதிக்கப் பட்டார்.

1942-ம் வருஷ இயக்கத்தின்பொழுது இவர் கைது செய்யப்பட்டு மூன்று வருஷங்களுக்குக் காவலில் வைக் கப்பட்டார். அச்சமயம் அவர் தென்னாட்டு வேலூர் சிறையிலும் சிறிது காலம் வைக்கப்பட்டிருந்தார். காந்தி யடிகளின் மறைவுக்குப் பிறகு இவர் நாடு முழுதும் சுற்றி வந்தார். டில்லிக்கருகாமையிலுள்ள மியோக்கள், பாகிஸ்தானிலிருந்து திரும்பிய அகதிகள் ஆகியோர் நிவா ரண வேலையைச் சிறிதுகாலம் கவனித்து வந்தார். பவ நார் திரும்பியதும் காஞ்சன் முக்தி (பொன்னாசையி னின்றும் விடுபடும்) முயற்சியில் இறங்கினர். அறிவுடன் கூடிய மனிதப் பாட்டைக் கொண்டே மனிதன் வாழ வேண்டுவதல்லது பணத்தில் உதவியைக் கொண்டல்ல என்ற துணிவெய்தினர். அவர் 1953-ம் வருஷம் வரை அங்கு அப்பரிசீலனையில் ஈடுபட்டிருந்தார்.

1921-லிருந்து 47 வரை அவர் தம் ஆத்ம பரிசீலனை யிலும் கிராம முன்னேற்ற வேலை, குடிசைத் தொழில் கள் இவைகளின் பரிசீலனையிலும் ஈடுபட்டிருந்தார். அவர் ஆன்ம பக்குவமும் ஞானமும் முன்பு குறிக்கப் பட்டுள்ளது. அவர் கை நூற்பு, ஆதாரக் கல்வி, கிராம சுத்தி இவைகளிலும் பல ஆராய்ச்சிகளைச் செய்து

வந்தார். அவரது ஆச்ரமத்தின் பெயர் பரந்தாம ஆச்ரமம். அதுவே அவர் வாழ்க்கையையும் நோக்கத்தையும் விளக்கப் போதும்.

அவர் சமஸ்கிருதப் பயிற்சியைச் சொல்லியாகி விட்டது. அவர் தாய்மொழி மராத்தியைப் போன்று அதிலும் பாண்டித்தியம் பெற்றவர். அவருக்கு ஹிந்தி, குஜராத்தி, வங்காளி, உரியா, உருது முதலிய மொழிகளும் தெரியும். தென்னாட்டில் சிறையிலிருந்த பொழுது தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலிய பாஷைகளையும் கற்றார். அவருக்கு ஆங்கிலத்துடன் பிரெஞ்சு பாஷையிலும் பயிற்சி உண்டு. நாற்பத்தாறு வயதிற்கு மேல் அவர் குர்ரான் படிப்பதற்காக அரபி மொழியைக் கற்றுக் கொண்டுள்ளார்.

அவர் முதலில் மராத்தியில் பத்திரிகை நடத்தி வந்தார். அவர் தாம் படித்த ஞான நூல்களைப் பிறரும் அறிந்து பயன்பெற பகவத் கீதையை மராத்தியில் மொழி பெயர்த்துள்ளார். அந்நூலை 'கீதாயி' என்று அழைக்கிறார். அதுவே அவர் தாய். "அதுவே என் தாய்; நான் அதன் ஒன்றுமறியாச் சிசு; எனக்குக் காலிடறும் பொழுதெல்லாம் வாறியெடுத்துக் கொள்ளும் என் தாய் அதுவே" என்று சொல்லுகிறார். 1932-ம் வருஷம் தூலியா சிறையில் தம்முடன் இருந்த துணைவர்களுக்கு கீதையின் சாரத்தை பல பிரசங்கங்களில் சொன்னார். அவைகள் 'கீதா பிரவசன'மாகத் திரட்டப்பட்டுள்ளன. அது இன்று ஹிந்தி, குஜராத்தி, உரியா, சிந்தி, கன்னடம், தெலுங்கு, தமிழ் * மலையாளம் முதலிய பாஷைகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இலட்சக்கணக்கான பிரதிகளை மக்கள் வாங்கிப் பயன் பெறுகின்றார்கள். 'மூலத்தொழில் நூற்பு' என்ற ஆதாரக் கல்வி நூலும் மிகவும் சிறந்ததொன்று. ஆரம்பமுதல்

---

* கீதைப் பேருரைகள்

ஆதாரக் கல்வி இயக்கத்துடன் அவர் தொடர்பு பெற்றிருப்பவர்.

காலஞ்சென்ற ஸ்ரீ மகாதேவ தேசாய் அவர்கள் விநோபாவைப் பற்றி, "பிறரிடமில்லாத சில விசேஷங்கள் அவரிடமுள்ளன. அவர் ஒன்றைத் துணிந்தவுடனே அதைச் செய்து முடிப்பார். இது அவரது முதல் குணம். இரண்டாவது, அவர் வளர்ந்து கொண்டே செல்கின்றார். காந்தியடிகளிடமும் இவரிடமுமே இத்தகைய வளர்ச்சி காணப்படுகிறது" என்று சொல்லுகின்றார். பல்லாண்டுகளுக்கு முன்பு தேசாய் அவர்கள் சொன்னது முற்றிலும் பொருத்தமானது என்று இன்று விநோபா மெய்ப்பிக்கிறார்.

அகந்தையும் ஆசையும் தலைவிரித்தாடும் இன்று 'தான்' என்பதை முற்றிலும் அழித்துக்கொள்ள உதவ இறைவனை வேண்டும் பெரியார் ஒரு சிலருளராயின் விநோபாவடிகள் அவர்களுள் முதல்வர். மண், பொருள், அதிகாரம், விஞ்ஞானம் இவைகளெல்லாம் மனித சமுதாயத்தை எங்கோ பற்றியிழுத்துப் போகையில் இன்று மனிதனை மனிதனாக்க, அவனுக்கு ஆன்ம அறிவையூட்ட, முற்படும் முனிவர் வேறு எவரும் தோற்றம் அளிக்கவில்லை. நம் நாட்டுப் பண்பாடு இது. நம் ஆன்றோர் இத்தகையோர். ஆயின் வேறுவழி செல்வதே சிறப்பெனக் கொள்ளும் மேனாடும் இன்று இவர் தத்துவத்தை ஆராயவும், அதன் விளைவை எதிர்பார்த்து நிற்கவும் செய்வது இவருடைய சிறப்பை விளக்குகின்றது.

# II

# சர்வோதய இயக்கத்தின் தோற்றம்

1947, ஆகஸ்டு 15-ம் தேதியன்று ஆங்கிலேயர் இந் நாட்டைத் துண்டாக்கி இரண்டு துண்டுகளுக்கும் அரசியல் சுதந்திரம் அளித்தார்கள். அன்று ஒரு நூற்றுண்டுப் போராட்டத்தின் பயனுக நாடு சுதந்திரம் பெற்றது. காந்தியடிகளின் அஹிம்ஸை சாதனம் பிறவற்றினும் சக்தி வாய்ந்தது என்பது உலகிற்கு விளக்கமாயிற்று. நாட்டு மக்களின் வாழ்க்கை சிறப்பதற்கு அரசியல் சுதந்திரம் மட்டும் போதாதென்பதும் தெளிவாயிற்று. பராதீனத்தால் நாடு அடைந்த சீர்கேட்டை உலகச் சூழ்நிலையுடன் பொருந்தச் சரி செய்வது மிகவும் சிக்கலாகப் பட்டது. அப்பொழுது காந்தியடிகள் இனி செய்யப் படவேண்டிய வேலைகளைச் சிந்தித்து நின்றுர். சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களில் சிலர் அரசியல் வேலையை ஏற்றுக்கொண்டு அதில் மூழ்கிவிட்டார்கள். ஆங்கிலேயர் விட்டகன்றதை அப்படியே கொண்டு செலுத்துவது சுயராஜ்யமுமன்று, மக்களுக்கு நன்மை பயப்பதுமன்று என்பதை அனைவரும் அறிந்திருந்தார்கள். காந்தியடிகள் தாம் மறைவதற்குச் சின்னுட்களுக்கு முன்பு வர்தாவில் நிர்மாண ஊழியர்களைக் கூட்டி அனைவரும் உய்யும் சூழ்நிலையையும் அரசியல் சுதந்திரத்தால் சாதிக்கவேண்டிய காரியங்களையும் வகுக்கவிருந்தார். ஆயின் இறைவன் அருள் வேருகவே அவர் மண்ணுடல் யமுனைக் கரையில் மண்ணெடு கலந்துவிட்டது. சின்னுட்களுக்குப் பிறகு வர்தாவில் அவர் சீடர்கள் அனைவரும் கூடினுர்கள். காந்தியடிகளின் நிர்மாணத் திட்டத்தை முற்றிலும் கொண்டு செலுத்தி நாட்டைச் சீரமைப்பது என்று முடிவு செய்தார்கள்.

**சர்வோதய சமாஜம்**

அம்மகாநாட்டில் கலந்துகொண்ட விநோபாவடிகள் அனைவரும் உய்யத் தொண்டை ஏற்கும் ஒரு தொண்டர் குழாத்தை நிறுவும் பிரேரணையைக் கொணர்ந்தார். உண்மை, சாத்விகம் என்பவைகளைச் சாதனங்களாகக் கொண்டு அனைவரும் உய்யும் வழியில் தொண்டாற்ற விரதம் பூணுபவர்களின் சகோதரத்வமென அதை அவர் விளக்கினர். அது ஓர் ஆதர்சத்தை ஏற்கும் கூட்டமாக நின்றதன்றி ஓர் அமைப்பாக நிறுவப்பட வில்லை. அத்தொண்டர்களை ஒன்று கூட்டுவிக்க ஒரு நிர்வாக சமிதியும் உண்டாக்கப்பட்டது. அடுத்த மார்ச்சில் இந்தூருக்கருகாமையில் ராவ் என்ற இடத்தில் சர்வோதய மகாநாடு கூடிற்று. அச்சமயம் சர்வ சேவா சங்கம் நிறுவப்பட்டது. அதில் நிர்மாண அமைப்புக்களான கதர் சங்கம், ஆதாரக் கல்விச் சங்கம், கிராமக் கைத்தொழில் சங்கம், கோசேவா சங்கம், ஹரிஜன சேவா சங்கம் ஆகிய பலவும் இணைவ தென முடிவு செய்யப்பட்டது.

மாகாணந் தோறும் காந்தியடிகளின் நிர்மாண வேலையில் நம்பிக்கை கொண்டவர்கள் சமாஜத்தின் தொண்டர்களாகத் தங்களைப் பதிவு செய்துகொண்டார் கள். அரசியல் ஆதிக்கத்தால் அரசாங்கச் சிப்பந்திகளைக் கொண்டு நிர்மாண வேலைகளைச் செய்வதினும் தாமே நேரடியாக அவைகளை ஏற்பதே தொண்டர்களுக்கு முறை யாயிற்று. அரசாங்க உதவி கிட்டினாலும் கிட்டாவிட்டா லும் தம் தொண்டைத் தாம் செய்துகொண்டு அவர்கள் முன்செல்வது வழியாயிற்று. அன்னியரை விரட்டுவதி னும் நாட்டு மக்களிடையேயுள்ள சுயநலம், சுரண்டல், ஏற்றத் தாழ்வு இவைகளை அகற்றுவது கடினமான பாடா யிற்று. ஜனநாயக ரீதியில் சமத்துவம் பேசப்படுவதைப் போன்று அதை நிலைநிறுத்துவது சாத்தியமன்று என் பதும் அறியப்பட்டது. எனினும் வேறு நாடுகள்

ஏற்கும் பிற வழிகளினும் நாட்டிற்கு அரசியல் விடுதலை பெற்றுக் கொடுத்த அந்த அஹிம்ஸா வழியே சீரமைப்பு வேலைக்கும் உகந்தது, பிற சாதனங்கள் பயனற்றவை என்பதும் துணியப்பட்டது.

நாட்டின் நிலை முன்னிலும் சிக்கலுள்ளதாகத் தோற்றமளித்தது. ஆங்கிலேயர் அரசியல் ஆதிக்கத்தை விட்டாலும் பொருளாதிக்கத்தை விடவில்லை. அமெரிக்கர் களும் அது இது என்று சொல்லிக்கொண்டு பொருளா திக்கத்தை நிலைநாட்டி வந்தார்கள். உள்நாட்டில் பொருள் படைத்தோர் அவர்களது கூட்டுறவைப் பாராட்டி அவர்களுடன் சேர்ந்து தம் வளத்தைப் பெருக்கலாயினர். பழைய அரசியல் சிப்பந்திகளும் அவர்களது பழைய முறைகளும் நாட்டைச் சரியான வழியில் முன்னேற்ற உதவுவனவாயில்லை. இந்நிலையில் சீடர்களுக்கு ஒரு சமாஜமாகத் தங்களைத் திரட்டிக் கொள்ள யோசனை கூறி அவர்களை நிர்மாண வேலையில் ஊக்கியவர் விநோபாவடிகளே.

மூன்றுவது சர்வோதய மகாநாடு அங்குலில் கூடிற்று. அதில் விநோபாவடிகள் கலந்துகொள்ளக் கூடவில்லை. ஆயின் பவநார் பரந்தாம ஆச்ரமத்தில் இருந்துகொண்டு நாட்டிலுள்ள நிர்மாணத் தொண்டர் களுக்கு ஊக்கம் அளித்து வந்தார். 1951-ல் சர்வோதய மகாநாடு ஹைதராபாத்திற்கடுத்த சிவராமபள்ளியில் கூட ஏற்பாடுகள் செய்யப்பட்டன. விநோபாவடிகள் அதற்கும் வருவதாக இல்லை. எனினும், ஸ்ரீ சங்கர ராவ் தேவ் அவர்கள் அவரை வற்புறுத்தி வரச் செய்தார்.

## சிவராமபள்ளிக்கு கால்நடைப் பயணம்

மார்ச்சு 7-ம் தேதியன்று தான் நடந்து சிவராமபள் ளிக்குச் செல்வதாக பிரார்த்தனைக் கூட்டத்தில் விநோபா சொன்னர். நண்பர் மஷ்ருவாலாவுடன் கலந்துகொண் டார். வர்தா சென்றர். அங்கு அவருக்கு நல்வர

வேற்பு அளிக்கப்பட்டது. தினம் பத்து, பன்னிரண்டு மைல் நடந்தபின் ஒரு கிராமத்தில் தங்குவார். கிராமத்தைச் சுற்றிப் பார்த்துவிட்டு பிறகு ஓய்வு எடுத்துக் கொள்வார். மாலையில் பஜனையை முடித்த பின்னர் கூடியுள்ள மக்களுக்கு தர்மோபதேசம் செய்வார். பாட்டையும் அன்பையும் வற்புறுத்திப் போதிப்பார். அவர் நாட்டிற்கு சுயராஜ்யம் வந்தது அவ்வளவு பயனுள்ளதாகாது; கிராமத்திற்கும் சுயராஜ்யம் வரவேண்டுமென்பதை மக்களுக்கு விளக்கினர். அவர் ஓரிடத்தில், "நீங்கள் ஆடவரும் பெண்டிரும் தினசரி வாழ்க்கைத் தேவைகளை உற்பத்தி செய்துகொள்ளப் பாடுபடுவீர்களாயின் நீங்கள் உங்கள் ஆட்சியை அமைத்துவிடலாம். அதுதான் கிராம ராஜ்யம். சுய தேவையைப் பூர்த்தி செய்துகொள்ளச் சக்தி வாய்ந்த உங்களுக்கு கிராம ராஜ்யம் வந்துவிடும. நமக்கு சுயராஜ்யம் வந்துள்ளதன்றி கிராம ராஜ்யம் வரவில்லை. அதைப் பெற நாம் மிகவும் சிரமமேற்றுப் பாடுபடவேண்டும். அது ஒரு பெரும் போராட்டமும் ஆகலாம்" என்று கூறி மேலும், "சுயராஜ்யப் போராட்டம் முடிந்துவிட்டது. ஆயின் அதனினும் கடுமையான கிராம ராஜ்யப் போராட்டம் ஒன்று காத்து நிற்கிறது. நாம் சாத்விகமாகப் போராடினோம். அதேபோல் இந்தப் போராட்டமும் சாத்விகமாகவே நடக்கும். இப்போராட்டத்தைத் தள்ளிப் போடவும் வழியில்லை. சகோதர சகோதரிகளாகிய நீங்கள் அதில் வீரர்களாக அணி வகுத்து நிற்பீர்கள். நம் ஆயுதங்களோ கைராட்டையும் ஏர்முனையுமே. நம் போராட்டத்திற்கு நமக்குத் துப்பாக்கிகளும், அணுகுண்டுகளும் வேண்டியதில்லை. நமக்குப் பாட்டிற்கு வேண்டிய சாதனங்களே தேவை" என்று முடித்தார்.

உப்பு சத்தியாக்கிரகத்தின்பொழுது காந்தியடிகளும் மற்றத் தலைவர்களும் ஆங்காங்கு கால்நடை யாத்திரைகளை மேற்கொண்டார்கள். அப்பொழுது கிராம மக்கள்

அனைவரும் விழிப்புப் பெற்றனர். வினோபாவடிகள் கிரா மந்தோறும் சென்று அவர்களுக்கு கிராம ராஜ்ய தத்து வத்தை விளக்கும்பொழுது அவர்களுக்கு மகத்தான நம்பிக்கையும் ஆர்வமும் உண்டாயின. அடிகளுக்கும் சுதந்திரம் பெற்ற பிறகு நாட்டுப்புற மக்கள் உள்ள நிலை தெளிவாகப் புலனாயிற்று. அவர்கள் அடிகளிடம் தங்கள் குறைகளை மனம் விட்டுக் கூறிப் பரிகாரம் தேடலானார்கள். அடிகள் அவர்களுக்கு தன்னம்பிக் கையை ஊட்டும் வகையில் போதனைகள் செய்துகொண்டு சென்றார். இவ்விதம் 317 மைல் நடந்து சென்று 7-ந்தேதி யன்று சர்வோதய மகா நாட்டில் பிரசன்னமானார்.

## மகாநாட்டில் சொற்பொழிவுகள்

முதல் நாள் அவர்கள் விவசாயம் போன்ற உட லுழைப்பைத் தொண்டர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டு மென்றும், எட்டு மாதங்களுக்குப் பிறகு பணத்தைக் கையாளாமல் வாழ்க்கையை நடத்த வேண்டுமென்றும் சொன்னார். தம் அநுபவத்தைக்கொண்டே தாம் பண மின்றி வாழச் சொல்வதாகவும் விளக்கினார். விவசாயத் தைத் தவிர வேறு நான்கு வேலைத் திட்டங்களையும் சொன் னார். சாந்தி சேனை (அமைதிப்படை), காந்தியடிகளின் மறைவு நாளன்று தானாக நூற்ற நூலில் ஒரு சிட்ட நன் கொடை, மலஜல சுத்தியைத் தாமே செய்தல், வாழ்க்கை யைப் புனிதமாக்குதல் என்ற நான்கு திட்டங்களை விவரித் தார். இரண்டாவது, நாள் உணவுப் பிரச்னையைக் குறித்து விவசாயக் கூலிகளுக்கு தான்யக் கூலி கொடுக்க வேண்டுமென்றும், நிலவரியும் தான்ய மாகவே வசூலிக்கப்பட வேண்டுமென்றும், மனிதனுக்குத் தேவையாகும் பதினாறு கஜம் துணியில் இயந்திரங்கள் பதினொரு கஜமே உற்பத்தி செய்வதால் கதர் உற்பத் தியை அரசாங்கமே ஏற்று நடத்த வேண்டுமென்றும் சொன்னார். மூன்றாம் நாள் பொளாதார சமத்துவத்தைப்

பற்றிப் பேசுகையில் மனித சமுதாயம் நீண்ட காலப் பயிற்சியினாலேயே தயையென்னும் பெருங்குணத்தைப் பெற்றுள்ளதென்றும், இந்தியாவில் பூர்வத்திலேயே சமத்துவம் போதிக்கப்பட்டதென்றும் சொன்னார். பல நூற்றாண்டுகளாகப் பேசப்படும் சமத்துவத்தை நிலைக்கச் செய்ய தயையைக் கைவிடுதல் கூடாதென்றும், தயையின் மூலமே சமத்துவத்தை நிலைநாட்ட வேண்டுமென்றும் விளக்கினார். சிறந்த சமத்துவம்—பிரம்ம நிர்வாணம்—தனி நபர்களே அடையக்கூடிய நிலையென்றும், அறிவுடனும் ஜாக்கிரதையுடனும் சமத்துவத்தை அடைய முயலவேண்டுமென்றும் கூறிமுடித்தார்; உலகில் தனதென்று ஒன்றைப் பெறாதவரும் இவ்வுயர்ந்த சமத்துவத்தை அடைவதில்லை யென்று விளக்கினார்.

நான்காவது நாள் அரசியலுக்கும் நிர்மாண வேலைக்கும் உள்ள தொடர்பை விவரித்தார். மக்களுக்கு விஷயங்களை விளக்கி அவர்கள் வேலைகளை அவர்களே செய்து கொள்ள ஊக்க வேண்டுமென்றார். மக்களை அதிகாரத்தால் கட்டுப்படுத்தி ஆட்டி வைப்பது பயனற்றது என்பது அடிகள் துணிபு. அகத்தூய்மை, புறத்தூய்மை உடற்பாடு, அமைதி, சமர்ப்பணம் என்னும் ஐந்து திட்டங்களையும் ஏற்றுக்கொள்ள தொண்டர்களை வேண்டினார். தாம் வர்தாவுக்குத் திரும்பும்பொழுது கம்யூனிஸ்டு வட்டாரம் வழியாக நடந்து செல்லப்போவதாகவும், நிகழப்போவதை இறைவனே அறிவாரென்றும் தன் போதத்தை முடித்தார்.

சர்வோதய இயக்கமும், அதன் அடிப்படையும் நாட்டில் நன்கு அறியப்படுகின்றன. உண்மை சுயராஜ்யத்தைப் பெற மக்களுக்கு ஆர்வம் உண்டாகிவிட்டது. இந்நிலையில் அடிகள் தேசப் புனர்நிர்மாணத்திற்குதவும் நிர்மாண வேலைத் திட்டங்களை வகுத்துவந்தார். பணத்தைக் கையாளாமலே வாழ்க்கை நடத்தக் கூடுமென்பதை விளக்கி அனைவரையும் அப்பரிசீலனையில்

ஈடுபட வேண்டினர். ஆங்கிலேய அதிகாரிகளுக்குப் பதிலாக இந்திய அதிகாரிகள் பழைய முறையில் நம்மை ஆளுவது சுயராஜ்யமாகாதென்பதைத் தெளிவுபடுத்தினர். மேனாட்டார் செல்லும் வழியே நாமும் சென்று ஜன நாயகமென்றும், மேம்பாடென்றும், க்ஷேமலாபமென்றும் பேசுவதெல்லாம் வீணென்றும், நம் இலட்சியத்தை இவ்வாறு அடைய இயலாதென்றும் தெளிவு படுத்தினர். மக்களின் நாட்டமும் காந்தியடிகளின் நிர்மாண வேலைவழி செல்கின்றது. சுயநலமோ, மக்களின் விழிப்பை அறிந்துகொண்டு பல வேஷங்கள் கொள்ள ஆரம்பிக்கிறது. ஆயின் அவைகளை ஊடுருவிப் பார்த்து அவைகளின் போலித்தன்மையை அவ்வப்பொழுது மக்களுக்குத் தெளிவாக்கி வருகின்றனர் அடிகள்.

அரசியலமைப்பு, பொருளாதார அமைப்பு, சமூக அமைப்பு ஆகியவைகள் இன்று உள்ள விசித்திர நிலையில் அனைவரும் உய்யவுள்ள சர்வோதயம் சாத்தியமல்ல என்பது விளக்கம் பெறுகிறது. பல கோடி மக்களை ஒரு கேந்திர ஸ்தானத்திலிருந்து ஆளுதலும், மனிதன் தன் வாழ்க்கைத் தேவைகளைத் தானாகத் தயாரித்துக் கொள்ளாமல் பிறரிடமிருந்தும், பிற நாடுகளிலிருந்தும் பெறுதலும், அவ்வழி சிலரிடம் பண்டங்கள் மிகுதலும், பலரிடம் அவையில்லாதிருத்தலும், இன்றைய சமூகச் சீர்கேட்டிற்குக் காரணமென்பது மக்களுக்குப் புலனாகிறது. பெரும்போட்டி உற்பத்திமுறை, உலக வியாபாரம், இலாபம், அரசியல் ஆதிக்கம், குடியேற்றம் இவைகளைக் கைவிட்டு தனி நபரும் தனி நாடும் தம் தேவைகளைத் தாமே தயாரித்துக் கொள்ளவும், தன்னடக்கம் பெறவும் வசதியாக நிலைமாறும்பொழுதே தனிமனிதனும் நாடும் உலகமும் அமைதி பெறுதல் கூடுமென்பது உணரப்படுகிறது. உடற்பாட்டை உதறித்தள்ளுவது பிழை யென்பது அறியப்படுகின்றது. வாழ்க்கை நிறைவிற்கு பண்டங்களின் குவியலன்று, திறம்பட அவைகளை

உண்டாக்கித் துய்த்தலே வழியென்பது ஓரளவுக்கு அறியப்படுகிறது. எளிய வாழ்க்கையும் உயர்ந்த சீலமுமே மனிதனை உய்விக்க, மற்றவை அவனை ஒழிப்பது தெளிவாகிறது.

## III

## பூதான இயக்கத்தின் தோற்றம்

சிவராமபள்ளி மகாநாடு முடிந்ததும் ஸ்ரீ ராமநவமியன்று (15-4-51) விநோபாவடிகள் தம் தெலுங்கானா யாத்திரையை ஆரம்பித்தார். புறப்படும் பொழுது, "நான் சாந்தியின் தொண்டனாக, அமைதியைப் போதிக்கச் செல்லுகின்றேன். பல காரணங்களால் நான் நீண்ட காலமாகக் கொண்டிருந்த எண்ணங்களை நிறைவேற்றாது இருந்தேன். இராமனுடைய அருளுடன் இன்று அதைச் செய்கின்றேன்" என்று சொன்னார். "தெலுங்கானாவில் சிலருக்கு ஊசி குத்தவும் இடமில்லாத பொழுது, சிலரிடம் ஆயிரக்கணக்கான ஏகர் நிலம் இருக்கிறது. பாலே பள்ளி கிராமத்தின் ஜனத்தொகை மூவாயிரம், சாகுபடியாகும் நிலம் மூவாயிரம் ஏகர். ஆயின் தொண்ணூறு குடும்பத்தார் நிலத்தையெல்லாம் பெற்றிருக்க, பிறர் நிலமற்றிருந்தனர். நிலமற்றவர் அறுநூறு குடும்பத்தினர். அந்தக் கிராமத்தில் எந்தக் குடிசைத் தொழிலுமில்லை. உள்ள நெசவாளருக்குப் போதிய நூல் கிடைப்பதில்லை. நிலத்தை அனைவரும் சமமாகப் பெறுவதுடன் அனைவரும் ஏதாவது கைத்தொழிலும் செய்ய வேண்டும். விவசாயிகள் வியாபாரப் பண்டங்களை உற்பத்தி செய்யாமல் உணவு தானியங்களையும் பருத்தியையுமே விளைவிக்க வேண்டும். புகையிலை, நிலக்கடலை போன்ற வியாபாரப் பொருள்களை தெலுங்கானாவில் அதிகம் விளைவிப்பதால் அங்கு சிக்கல் அதிகமாகிறது. அந்நிலையிலே

தான் தெலுங்கானுவில் கலவரம் தோன்றியது. பொருளாதார ஏற்றத்தாழ்வு கம்யூனிஸ அட்டூழியத்திற்கு வழி செய்தது'' என்று சொன்னர். அடிகள் பணக்காரர்களே கம்யூனிஸ்டுகளை உண்டாக்குகிருர்கள் என்று கூறுகிருர். அந்தப் பிரச்னை பட்டாளமும் போலீசும் தீர்க்க கூடியதன்று; இந்த ஏற்றத் தாழ்வை அகற்றுவதால் அந்த அட்டூழியம் அற்றுப்போகும் என்பது அடிகளின் கருத்து.

அடிகள் 16-ம் தேதியன்று ஹயாத் நகருக்குச் சென்ருர். படசிங்காரம் என்ற ஊரை அடைந்தார். அடுத்த நாள் அவர் போச்சம்பள்ளிக்கு வந்து சேர்ந்தார். ஊரைச் சுற்றிவிட்டு ஹரிஜனச்சேரியின் ஒரு குடிசைக்குள் நுழைந்தார். அதிலிருந்த நான்கு நாள் குழந்தை ஒன்றை எடுத்து ஆசி கூறித் தாயிடம் அதைக் கொடுத்தார். தாய் அடிகளின் பாதங்களில் வீழ்ந்தாள். அவளை ஆசீர்வதித்து அடிகள் வெளியேறும் சமயம் ஊரார்கள் அங்கு திரண்டு தங்கள் குறைகளைச் சொல்லிக் கொண்டார்கள். பிற்பகலில் தம்மைச் சந்திக்கச் சொல்லி அடிகள் அகன்றுவிட்டார். அடிகளின் தபால் வேலை முடிந்ததும் ஹரிஜனங்களும் பிறரும் சந்திக்கத் திரண்டு நின்ருர்கள் ஹரிஜனங்களின் குறைகளைக் கேட்கவும், அவர்கள் உழ நிலம் கிடைத்தால் பிறவற்றைத் தாமே சமாளித்துக் கொண்டுவிடுவோமென்று சொன்னர்கள். எவ்வளவு நிலம் வேண்டுமென்றதற்கு அவர்கள் மௌனம் சாதிக்க, ஒரு முதியவன் எண்பது ஏகர் கிடைத்தால் போதுமென்ருன். விநோபாவடிகள் கீழ்நோக்கிய வண்ணம் தாம் அவர்களுக்கு நிலம் பெற முயலுவதாகவும் ஒரு மனு எழுதிக் கொணருமாறும் சொன்னர். அடிகள் சிந்தனையில் ஆழவே நிசப்தம் நிலவியது. பின், "கூட்டத்தில் நிலக்காரர்களும் உண்டா?'' என்று கேட்டார். அவர்களும் வந்துள்ளார்கள் என்று சொல்லப்பட்டது. அடிகள், "அரசாங்கம் நிலம் கொடுக்காவிட்டாலும்,

அதைப்பெறக் காலதாமதமானாலும், கிராமஜனங்களே ஹரிஜனங்களுக்கு ஏதாவது செய்யக் கூடாதா?'' என்று அனைவர் காதிலும்படச் சொன்னார். நிலக்காரர் யாராவது தம் நிலத்தை அவர்களுக்குக் கொடுக்க முன்வருவாரா என்பதை அறிய விரும்பினார். மீண்டும் நிசப்தம் நிலவியது. ஒரு நிமிஷத்திற்குப் பிறகு ஒருவர் எழுந்து, "நான் நிலம் தருகிறேன். நான் என்னுடையதில் நூறு ஏகர் நிலம் தானம் கொடுக்கிறேன்" என்று சொன்னார். திரண்டிருந்தவர் அனைவரும் ஆச்சரியம் அடைந்தனர். அடிகள் அவரைக் கூர்ந்து நோக்கி அவர் சொல்லியதை மீண்டும் சொல்ல வேண்டினார். அவர் திடமாக, "நான் ஒரு நூறு ஏகர் நிலம் கொடுக்கிறேன்; நான் சொல்லுவதை ஜனங்கள் நம்பாவிட்டால் இப்பொழுதே இங்கேயே அதை எழுதிக் கொடுக்கிறேன்" என்று பதிலளித்தார். வினோபா அனைவரையும் மாலைப் பிரார்த்தனைக்கு வருமாறு கூறி அனுப்பிவிட்டார். பின் நிலம் கொடுப்பவருடன் தனித்துப் பேசினார். அவர் கொடுப்பது உண்மைதானா என்று கேட்டார். அவர் மீண்டும் தாம் தானம் செய்வதாகச் சொன்னார். அடிகள் அவரையும் பிரார்த்தனைக்கு வரச் சொல்லி அனுப்பிவைத்தார்.

அன்றைய பிரார்த்தனை அமைதி மிகுந்த தாயிருந்தது. பிரார்த்தனைக்குப் பிறகு அன்று நடந்ததைச் சொல்லி ஸ்ரீ வி. ஆர். ரெட்டி அவர்களை எழுந்திருக்க வேண்டினார் வினோபா. அந்த நண்பர் பொய் பேசுவதாயின் உள்ளூர்க்காரர்களே அதை அறிவார்கள் என்று முடித்தார். தம்மிடம் தனித்தும் பஹிரங்கமாகவும் தம் தானத்தை அவர் வெளியிட்டிருப்பதால் அவர் பின்வாங்க மாட்டார் என்றார்.

அன்றிரவு அடிகள் தூங்கவில்லை. அன்றைய நிகழ்ச்சிகளை மீண்டும் மீண்டும் சிந்தித்துக் கொண்டிருந்தார். இரவெல்லாம் இறைவனை வணங்கிய வண்ணமிருந்

தார். அது இறைவன் செயல், இறைவன் இப்பணியில் தம்மைக் கருவியாகப் பயன்படுத்தக் கருதியுள்ளான் என்று முடிவு செய்தார். மறுநாள் காலையில் அவ் விடத்தை விட்டுப் புறப்படுமுன் மீண்டும் ஸ்ரீ ரெட்டி அவர்களை வரவழைத்து அவர் தானம் மெய்தானா என்று கேட்டார். ரெட்டியார் தம் தானத்தை வற்புறுத்தி எழுதிக் கொணர்ந்திருந்த பத்திரத்தையும் கொடுத்தார்.

அடுத்த கிராமத்திற்குச் சென்று ரெட்டியாரின் தானத்தைச் சொல்லி அங்கும் யாராவது நிலம் கொடுப் பார்களா என்று அடிகள் கேட்டார். இறைவன் பிரேரணை யால் போல் அங்கும் ஒருவர் நிலதானம் கொடுத்தார். அவர் தானம் கொடுத்தவுடன் அது இறைவன் கட்டளை யென்றும், அப்பணியை ஏற்கத் தம்மைப் பணித்துள்ளா ரென்றும் அடிகள் கொண்டார்.

இவ்வாறு ஆரம்பமாயது இதுகாறும் உலகங் கண்டிராத பூதான இயக்கம். மனிதன் பொருளை வெளவுபவன், அதைப் பெற்று இறுகப் பிடிப்பவன், பொருளிலும் மண்ணைப் பெரிதாகப் போற்றுபவன். பரம்பரைப் பற்றுடன் அதைப்பற்றி நிற்பவன். அகில உலகையும் பெற்றாலும் அப்பாலும் பெற நினைப்பவன். அத்தகைய மனிதன் அதில்லாது நலியும் ஓர் எளியவ னுக்காக அதைத் தானமாகக் கொடுப்ப தென்றால் அது விந்தையினும் விந்தையாகவே அப்பொழுது பட்டது. கோயிலுக்கும் சத்திரத்திற்கும் சாச்வதமாக நிலத்தை தானம் கொடுத்தவர்கள் உள்ளார்கள்; நம் நாட்டில் அது சகஜம். ஆயின் எளியவனுக்கு உதவ, சமுதாயத்தின் வறுமையை அகற்ற தன்னுடைய சொத்தில் ஒரு பகுதி யைக் கொடுக்க முதன் முதலாக இறைவன் ஸ்ரீமான் வி. ஆர். ரெட்டி அவர்களையே பிரேரேபித்தார். உலகுய்யத் தோன்றிய இப்பேரியக்கத்திற்குப் பிள்ளையார் சுழி போட்ட பெருமை ரெட்டியாரைச் சாரும். அது அவ ருடைய பாக்கியமும், அவர் வழித்தோன்றல்களின் நற்

காலமுமே யாகும். ஆலின் சிறு விதை போன்று அவரது முதல் தானம் இந்நாட்டையும் உலகையுமே மாற்றி, மனித சமுதாயத்தை மேலே எழுப்ப உள்ளது. அவர் அளித்த புஞ்சை நிலதானம் இன்று மனிதன் பற்றும் எந்தச் சொத்தையும் பிறருக்குக் கொடுக்கும் ஊக்கத்தை அவனுக்கு அளிப்பதாய் உள்ளது. விநோபாவடிகள், கம்யூனிஸ்டுகளைக் காணவும் அவர்களுக்கு அன்பு-அறத்தைப் போதிக்கவும் சென்றதும், அவ்வழியே உலகுய்யும் வழி என்பதை நிரூபிப்பதைப் போன்று இறைவன் பூதான இயக்கத்தையும் ஆரம்பித்து வைத்தார். அன்று முதல் பூதான இயக்கம் படிப்படியாக விரிந்து கொண்டே போகின்றது. நிலதானம் கேட்கும் தொண்டர்களின் கூட்டம் நாளுக்கு நாள் பெருத்துவருகின்றது. நாளுக்கு நாள் நிலதானத்தின் பரப்பும் விரிந்து வருகின்றது. நிலமல்லாத பிறவற்றையும், முழுவாழ்க்கையையுமே பிறர் தொண்டிற்கெனச் சமர்ப்பிக்கும் மனப்பான்மையும்பரவி விட்டது.

மனிதனைப் பேயாகவும் கள்வனுகவும் கொண்டவர்கள் இன்று அன்பு மிக்க தாயாக அவன் நடந்துகொள்வதைக் கண்டு வியப்படைகிருர்கள். 'மந்திரத்தால் மாங்கனி விழுவதுண்டோ?' என்று வினவும்பற்றுள்ளம் படைத்தவர்கள் இன்று நெகிழ்ந்து எவ்வளவோ செய்ய ஊக்கம் கொள்கிருர்கள். குதர்க்க வாதங்கள் சோர்ந்து மெலிவடைகின்றன. எள்ளிநகையாடுதல் போய் இன்று அன்பையும் அறனையும் கொண்டு உலகச் சிக்கலைத் தீர்க்க முடியு மென்ற நம்பிக்கை பெருகி வருகிறது. நடந்தே சுற்றும் அடிகளைத் தொடர்ந்து அயல் நாட்டாரும் இவ்வதிசயத்தைக் காண முற்படுகின்ருர்கள்.

அங்கிருந்து நால்கொண்ட-வாரங்கல் ஜில்லாக்களில் அவர் கிராமம் கிராமமாகச் சுற்றி வந்தார். அவர் பூதான இயக்கத்தை ஆரம்பித்தபின் கிராமம் தோறும் நிலம் கேட்டுச் சென்ருர். தனிகெல்லா என்றஊரில், "நம்

முதாதையர் நாட்டில் கலவர நிலேயேற்படும் பொழுது யக்ஞங்கள் செய்வார்கள். நானும் யக்ஞம் செய்ய விரும்பி இந்த பூதான யக்ஞம் (வேள்வி) ஆரம் பித்துள்ளேன். பலரையும் நிலம் கொடுக்கும்படி கேட் கிறேன். மக்களே முன்னேற்ற உதவும் இவ் வேள்வியில் அனேவரும் பங்குகொள்ள வேண்டும். நாம் வேள்வி களுக்குப் பொருள் கொடுப்பதைப் போல நிலமற்றவர் களுக்கு நிலம் கொடுக்க வேண்டும். இந்தக் கலியுகத்தில் யாரும் தானம் கொடுப்பதில்லே யென்று சொல்லப்படு கிறது; ஆனல் கேட்பவருளராயின் கொடுப்பவரும் உள்ளார்கள்; இதுவரை நான் கேட்டு முவ்வாயிரம் ஏகர் நிலம் பெற்றிருக்கிறேன்'' என்று சொன்னர். தெலுங் கானவில் வினேபாவடிகள் நிலம் கேட்டுப் பெறுவதை வெளியே உள்ளவர்கள் நம்பவில்லே. அங்கு மக்களுக்கு நல்லுணர்ச்சி ஏற்பட்டது. பயத்தை விட்டுச் சுதந்திர மாக நடமாடலானர்கள். அங்கு அடிகள் கம்யூனிஸ்டுகளே யும் சந்தித்தார். சிறையிலுள்ள சிலரையும் சென்று பார்த்தார். அவருக்கு கம்யூனிஸ்டுகளிடம் வெறுப்போ பகையோ கிடையாது. ஆனல் அவர்கள் வழி இந்நாட்டிற் குகந்ததல்ல வென்பதுவே அவர் துணிபு. அவர் சந்து பட்டா என்ற இடத்தில் தம் நிலேயை விளக்கி ''கம்யூ னிஸ்டுகள் பலாத்காரத்திலும் கொலேயிலும் இறங்கு கிருர்கள்; இது முற்றிலும் தவறு, அதனலேயே அவர்கள் நற்சேவையும் பாழாகிறது. இந்த கிராமத்தைச் சேர்ந்த டி. வெங்கடேச்வர ராவ் நல்ல மனிதர். அவர் என்னேப் பார்க்கக் கூடுமானல் அவர் வழி தவறென்பதை அவ ருக்கு விளக்குவேன். நான் நால்கொண்டா ஹைதராபாத் சிறைகளில் சில கம்யூனிஸ்டுகளேச் சந்தித்தேன். அமைதி வழியே மக்களுக்குத் தொண்டு செய்யும் வழி யென்பதை அவர்களுக்கு விளக்க நான் ஆவல் கொண் டுள்ளேன்'' என்று முடித்தார்.

மற்ருேரிடத்தில் அவர் அதே விஷயத்தைப் பற்றிப்

பேசும் பொழுது, "ஜனநாயகம் நிலைபெற்ற இன்று ஒவ்வொருவனும் ஒரு வாக்குப் பெற்றிருக்க, துப்பாக்கியில்லாமலே பணக்காரர்களைக் மாற்றலாமாகையால், அவர்களைக் கொல்ல வேண்டுவதில்லை. இனி ஆட்சி சாதாரண மனிதனுடையதாகும். வெளியே வந்து ஒளிவு மறைவின்றி வேலைசெய்யுமாறு நான் கம்யூனிஸ்டுகளை வேண்டுகிறேன். அவர்கள் அப்படிச் செய்வார்களானால் நான் என் உதவியையும் அவர்களுக்கு அளிப்பேன். அவர்கள் பலாத்காரத்தை விட்டுவிட்டால் நல்லோர் எல்லோரும் அவர்களுக்கு உதவி புரிவார்கள். காந்தியடிகளும், 'நானும் கம்யூனிஸ்டுதான், ஆனால் தற்கொலைக்கு வழி செய்யும் பலாத்காரத்தை ஏற்கமாட்டேன்' என்று சொல்லிக் கொண்டிருந்தார்", என்று சொல்லி, "நான் அவர்களை பலாத்காரத்தை விட்டுவிடும்படி வேண்டிக் கொள்கிறேன்; அவர்கள் அப்படிச் செய்வதானால் நானும் அவர்களுடன் சென்று மூலைமுடுக்குகளிலும் அவர்கள் கொள்கையைப் பிரசாரம் செய்வேன்" என்று அவர்களைக் கூவியழைத்தார்.

'அன்பின்வழியது உயிர்நிலை' என்பதைவிளக்கி கொட்டூரில் "இன்று நிலை மாறி வருவதெல்லாம் இறைவன் அருளால்தான். நாமனைவரும் ஈச்வரனை நம்பினால் அவர் நமக்கு நல்வழி காட்டுவார். இறைவன் எல்லோர் உள்ளத்திலும் உள்ளவன். நாம் அவனை வேண்டினால் எவ்வளவோ காரியம் நடைபெறும். நான் அன்புடன் கொடுக்கப்படும் நிலத்தை ஏற்றுக் கொள்கிறேன். நான் அரசாங்க அதிகாரத்துடனோ, துப்பாக்கியுடனோ வரவில்லை. கம்யூனிஸ்டுகள்' தம் வழியில் வேலை செய்கிறார்கள். அரசாங்கம் தன் வழியில் வேலை செய்கிறது. நானும் என் வழியில் வேலை செய்துகொண்டிருக்கிறேன்; என்வழி அன்பின் வழி" என்று சொன்னார்.

பணக்காரர்களை மீண்டும் அவரிடங்களில் அமர்த்துவது அடிகளின் எண்ணமா என்று கம்யூனிஸ்டுகளால்

கேட்கப்பட்ட பொழுது அவர், " நான் மனமாற்றத்தில் நம்பிக்கை கொள்பவன். தானம் கொடுக்குமுன், அவர் மனதில் நன்மைக்கும் தீமைக்கும் போராட்டம் நடக்கும். அதனுல் மனம் தேற்றம் அடையும். இந்தியாவின் ஆன்ம ஞானமும், மேனுட்டு விஞ்ஞானமும் சேரும் பொழுது நன்மையே விளையும். பலாத்காரமின்மையே எல்லாத் தீமைகளுக்கும் பரிகாரம் " என்று பதிலளித்தார். கவிசர்லூவில் பிரார்த்தனைக்குப் பிறகு பேசும் பொழுது அம்முறையில் வேலை செய்வது கஷ்டமான தென்றும், சர்வோதயத் தொண்டர்கள்தான் அவ்விதம் செய்ய முடியு மென்றும் சொல்லி, "காங்கிரஸால் அவ் விதம் செய்யமுடியாது. அவர்கள் இன்று தொண்டைப் பாராட்டுவதில்லை. சோஷலிஸ்டுகள் நல்லவர்கள் தான்; ஆனுல் அவர்கள் அதிகாரத்தைப் பற்ற முனைகிருர்கள். இந்நிலையில் இத்தொண்டை சர்வோதயத் தொண்டர் களே ஏற்க வேண்டும் " என்று முடித்தார்.

இந்த யாத்திரையில் பூதானம் கேட்பதுடன் அடிகள் நின்றுவிட வில்லை. ஆங்காங்கு கிராமத் தொழில்களை வற்புறுத்தியே சென்ருர். நால்கொண்டா பிரசங்கத்தில் அவர், "நிலத்திற்கு எல்லையுண்டு; ஆனுல் ஜனப் பெருக்கம் விரிந்துகொண்டே போகிறது. நாம் புதி தாகக் கிணறுகளை வெட்டவேண்டும்; புதிதாக கால் வாய்களை அமைக்கவேண்டும். அந்நிலையில் இன்று நூறு ஏகர் புஞ்சை பெற்றவன் இருபது ஏகர் நஞ்சையுடன் திருப்தி யடைந்துவிடுவான். நிலத்தைமட்டும் பெற்று விட்டதினுல் விவசாயியின் பிரச்னை தீர்ந்துவிடாது. கிராமத்தில் கிடைக்கும் மூலப் பண்டங்களை துய்ப்புப் பண்டங்களாகச் செய்து கொண்டால்தான் அவர்கள் உய்யமுடியும் " என்று விளக்கினுர்.

ஐம்பத்தொரு நாட்கள் கால்நடையாகச் சுற்றி ஐம்பத்தொரு கிராமங்களில் தங்கி இருநூறு கிராமங் களைப் பார்த்து 12,201 ஏகர் நிலம் தானமாகப் பெற்ருர்.

வழியில் ஐந்நூறு கிராம வழக்குகளை வேறு தீர்த்தார். நிலமற்றவர்களுக்கு நிலமுதவும் ஓர் ஆதர்சத்தை உண்டாக்குவதே அடிகளின் இலட்சியமாயிற்று. பலாத்காரமற்ற முறையில் வாழ்க்கையையே மாற்ற அவர் முற்பட்டார். முக்காலத்திற்கும் முதல்வனாய இறைவன் கையில் தாம் ஒரு புல்லென்றும், கொடுப்போரிடமும் பெறுவோரிடமும் அவ்விறைவன் நிறைந்து நிற்பதாகவும் அவர் அடிக்கடி கூறிவந்தார்.

## IV

## டில்லி யாத்திரை

விநோபாவடிகள் 1951 ஆம் ஜூன் மாதம் 27-ம் தேதியன்று பவநார் திரும்பினார். ஆச்ரமவாசிகள் பேருவகையுடன் அவரை வரவேற்றார்கள். அங்கு தம் பழைய நியமப்படி தொண்டு புரிந்து வரும் சமயம், அவரது பழைய நண்பரும் தேசீய திட்ட கமிஷன் அங்கத்தினருமான ஸ்ரீ ஆர். கே. படீல் ஐந்து வருஷ தேசீய திட்டத்தைப் பற்றி அடிகள் என்ன நினைக்கிறார் என்பதை அறிய வந்தார். அதுவரை அவர் அதைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லை. கேட்கப்பட்டவுடன், "அரசியல் திட்டத்தில் நீங்கள் மக்கள் அனைவருக்கும் வேலையும் உணவும் கொடுப்பதாகக் கூறியுள்ளீர்கள். ஆயின் இந்த வாக்குறுதியை நீங்கள் முற்றிலும் மறந்து விட்டீர்கள். நீங்களே அனைவருக்கும் வேலை பெற்றுத் தரவேண்டும், அது உங்களால் முடியாதாயின் நீங்கள் இராஜீநாமா செய்துவிட வேண்டும்; நீங்கள் குடும்ப எண்ணிக்கையையும் திட்டமிட்டுக் குறைக்க வேண்டுமென்கிறீர்கள். குழந்தைகளைப் பெறலாகாது எனக் கட்டளையிட நீங்கள் யார்? நீங்கள் என் பணிசெய்பவரா, என் எஜமானர்களா? இங்கிலாந்திலோ ஜப்பானிலோ

இருப்பதைவிட ஓர் ஏகர் நிலத்தை நம்பி வாழ்கின்றவர்களின் எண்ணிக்கை இங்கு குறைவு. ஜனப்பெருக்கம் ஏன் உண்டாகின்றதென்பதைச் சிந்தித்துப் பார்த்தீர்களா? சிங்கத்திற்குக் குட்டிகள் குறைவு, ஆடுகளோ பல ஈனுகின்றன...கர்ப்பத்தடையல்ல செய்யப்பட வேண்டுவது, வாழ்க்கையை நேரிய முறையில் நடத்தவேண்டும். குடிசைத் தொழில்கள் தாமாகத் தலையெடுக்க வேண்டுமென்கிறீர்கள். என் காலை வெட்டிவிட்டு என்னை நிற்கச் சொல்லுவதைப் போல் அல்லவா அது ஆகின்றது? கிராமத் தொழில்கள் தாமாக அழியவில்லை, அவை அழிக்கப்பட்டன. இயைபு இல்லாச் சூழ்நிலையில் காந்தியடிகள் அவ்வளவு செய்திருக்க, இன்று அத்துறையில் எவ்வளவோ செய்யக்கூடுமே!'' என்றார். மேலும், '' நீங்கள் 1951-ல் உணவு சுயபூர்த்தியை அடைந்துவிடுவதாக நிச்சயம் செய்து கொண்டீர்கள்; அது சாத்தியமாகாத பொழுது ஒரு திட்டக் கமிஷனை நியமித்துள்ளீர்கள். அது உணவு சுயதேவைப் பூர்த்தி கூடுவதல்ல என்று சொல்லுகிறது. இந்நிலையில் ஒரு யுத்தம் தோன்றின் நாட்டின் நிலைமை என்னாகும் என்பதைச் சிந்தித்தீர்களா?

'' நீங்கள் முப்பது இலட்சம் டன் உணவு தான்யம் இறக்குமதி செய்வதாகச் சொல்லுகிறீர்கள். அதை வாங்க உங்களிடம் பிதுர்ஆர்ஜித சொத்து இருக்கின்றதா? நீங்கள் என்றைக்கும் பிச்சை யெடுக்கும் திட்டத்தையே போடுகின்றீர்களா? அப்படியாயின் யாரும் அதிகம் உற்பத்தி செய்ய ஊக்கம் கொள்ளமாட்டார்கள்'' என்று அவரிடம் தம் மனத்தைத் திறந்து பேசினார். அவர் கண்களில் நீர் நிறைந்து நின்றது.

அரசாங்கமும், திட்டக் கமிஷனும் கதரை அலட்சியம் செய்தது அவரை மிகவும் வருத்தியது. '' இரண்டு வருஷ காலத்திற்குள் நான் நாட்டு மக்களுக்கெல்லாம் கதராடை உடுத்துவியாவிடில் என்னைத் தூக்கி

லிடுங்கள்...ஆனால் உங்களுக்குக் கதரே வேண்டாமென்றிருந்தால் அது வேறு விஷயம்'' என்று தம் வெறுப்பை வெளியிட்டார். உணவுப் பிரச்னை விஷயத்தில் அவர் மேலும் வெளிப்படையாகவே பேசவேண்டியதாயிற்று. "நீங்கள் உணவு சுயபூர்த்தியைப் பற்றி நிச்சயம் செய்து கொண்டவுடனே அதைத் திட்டமிடவும் அமுலாக்கியிருக்கவும் வேண்டும்...ஆயின் அரசாங்கத்திற்கு டாலர் மயக்கம் ஏற்பட்டிருக்கிறது. எந்தத் திட்டத்தைப் போடுமுன்பும் உணவு சுயபூர்த்தித் திட்டத்தை கமிஷன் போட்டிருக்க வேண்டும். ஆயின் அது அப்படிச் செய்யவில்லை. அந்த திட்ட அறிக்கையில் பண்டித ஜவாஹர்லால் கையெழுத்துச் செய்திருக்கிறார். எவர் சபதம் செய்தாரோ அவரையே சபதத்தை மறுக்கச் செய்துள்ளது கமிஷன். உணவைப் பெருக்கி அனைவருக்கும் உணவை உண்டாக்குங்கள். பண்டித ஜவாஹர்லால் தனிப்பட்ட முறையில் சபதம் செய்திருந்தால் நிலைமை வேறாகும்; அவர் நாட்டின் பிரதம மந்திரியாக அவ்விதம் செய்தார். அது நாடு செய்த சபதமே. என்னவானாலும் அச் சபதத்தை நிறைவேற்ற வேண்டுவது நாட்டின் கடமை'' என்று தம் மனத்தை வெளிப்படுத்திக் கூறினார்.

ஸ்ரீ படேல் அடிகளின் அபிப்பிராயங்களை மேலாவிற்குச்சொல்லவும், பண்டித நெஹ்ரு அவர்கள் திட்டத்தைப் பற்றி விவாதிக்க அடிகளைக் காண விரும்புவதாகச் சொன்னார். அவரை டில்லிக்கு அழைத்தது பூதான வேலைக்கு மேலும் ஊக்கம் அளிப்பதாய் அமைந்தது. செப்டம்பர் மீ 11-ம் தேதி அன்று பிரார்த்தனைக் கூட்டத்தில், "கம்யூனிஸ்டு தொல்லையால் கலவரமடைந்த தெலுங்கானாவில்தான் நிலம் கிடைக்கும், வேறு இடங்களில் கிடைக்காதென்றால் நாம் அமைதியாகப் புரட்சியை உண்டாக்குவதென்பதே இல்லாது போய்விடும். இந்த பூதானத்தின் அடிப்படையை நாம் அறிந்தால்

எளியவர்களுக்குக் கொடுக்கவென நிலம் உடையவர்கள் நிலத்தை தானமாக கொடுக்கவே செய்வார்கள்'' என்று முடித்தார். உடனே எழுபத்தைந்து ஏகர் நிலம் தான மாகக் கொடுக்கப்பட்டது. அன்று அவர் பிறந்த நாள்; எத்தகைய பிறந்த நாள் பரிசு!

தினம் பன்னிரண்டு, பதினறு மைல் நடந்து சென்ருர். செல்டோ பண்ணையாஸ்ரமத்தில் தங்கினர். அங்கு டாக்டர் ஜே. ஸி. குமரப்பா அவர்கள் அவரை வரவேற்ருர். அங்கிருந்து நாகபுரி சென்ருர். அங்கு, "இறைவன் வலியைக் கொடுக்கும்வரை நான் நாட்டைச் சுற்றி எளியவர்களுக்காக நிலதானம் பெறுவேன்'' என்று தம் தீர்மானத்தைச் சொன்னர். நாகபுரியில் தொண்டர்களுடன் பேசும்பொழுது நிலம் பெற்றவர்களை யெல்லாம் தம்முடையதில் ஒரு பகுதியைக் கொடுக்கும்படியாகவும், வாயு, நீர் போன்று இயற்கையின் பகுதியாய அதையும் அனைவரும் சமமாக அடையவேண்டு மென்றும் சொன்னர். அமர்வாரா என்ற இடத்தில், "மக்கள் தங்கள் பிரச்னையைத் தாங்களே தீர்த்துக்கொள்ளப் போகிருர்கள்; நான் அதைச் செய்யப் போவதில்லை. நான் அதற்கு அநுகுணமான சூழ்நிலையை உண்டாக்குகிறேன். ஆரம்பத்தில் எதுவும் சிறிதாகத்தான் இருக்கும். ஆயின் இவ்வியக்கம் பரவும்பொழுது யாரோ கேட்பார்கள், யாரோ கொடுப்பார்கள். நான் ஒருவன் பணக்காரர்களுக்கும் எளியவர்களுக்கும் இடையே எதற்கு?'' என்று தம் பணிவை வெளிப்படுத்தினர். அரசாங்கம் செய்யக் கூடாதா என்று கேட்டதற்கு, "ஜனநாயகத்தில் மக்களின் விருப்பம்தான் நடைபெற வேண்டும். மக்கள் விரும்புவதை அரசாங்கம் செய்ய வேண்டும்'' என்று விளக்கினர். தம் நிலையையும் பொறுப்பையும் அறியும்படி மக்களிடம் சொல்லுவது தான் அவர் வேலை.

முதல் ஏழு நாட்களில் 111 மைல் நடந்து இரண்

டாயிரம் ஏகர் தானமாகப் பெற்ருர். தெலுங்கானுவில் தினசரி வசூல் இருநூருக, இங்கு முன்னூருயிற்று. மிரட்டலும் கலவரமும் இல்லாமலே மக்கள் பூதானம் செய்வார்கள் என்பது தெளிவாயிற்று. அவர் பணக்காரர், எளியவர் இருவரையுமே தானம் கேட்கிருர். எளிய வர்களே மிகுதியாகக் கொடுக்கிருர்கள், விரைந்து கொடுக்கிருர்கள். பட்டணக் கரைகளைவிட கிராமங் களிலேயே தானம் அதிகம் கிடைக்கிறது. எளியவர்கள் கொடுக்கவும், உடையவர்களின் உணர்ச்சி தூண்டப் பட்டு அவர்களும் கொடுக்கிருர்கள். அடிகள் நம்பிக்கை இழப்பதில்லை. "இன்று கொடுக்காதவர்கள் நாளை கொடுப்பார்கள், அவர்கள் கொடுக்காமலிருக்க முடியாது. இந்தியாவில் நான் நிலம் கேட்கையில் எவரும் மறுக்க மாட்டார்கள். இப்பணி எளியவர்களுக்கு மட்டும் தொண்டு அன்று, பணக்காரர்களுக்கும் தொண்டாகும். இவ்வேலை அனைவருக்கும் நன்மை பயப்பது என்பது என் முடிவு" என்கிருர்.

சாகர் மத்திய பிரதேச எல்லையிலுள்ளது. அங்கு தொண்டர்கள் குழாத்தில், "என் வயிறு சிறியதாயினும் தரித்திர நாராயணன் வயிறு பெரியது. யாராவது என்னை எவ்வளவு வேண்டுமென்று வினவினல் ஐந்து கோடி ஏகர் நிலம் என்று சொல்லுவேன். சாகுபடியி லுள்ள நிலத்தைத்தான் நான் கேட்கிறேன். ஒரு குடும்பத்தில் ஐந்து மக்கள் இருப்பின் என்னை ஆருவது மகனுக ஏற்கும்படி சொல்லுகிறேன். நான்கு பேரிருந் தால் ஐந்தாமவனுக என்னை ஏற்கச் சொல்லுகிறேன். அவ்விதம் நான் சாகுபடியிலுள்ள பரப்பில் ஆறிலொரு பங்கோ ஐந்திலொருபங்கோ கேட்கிறேன்" என்று முடித்து மிகவும் பணிவுடன், "நான் உங்கள் ஒவ்வொரு வரையும் உங்களாலானதை தரித்திர நாராயணனுக்குக் கொடுக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேன். இது ஒரு பெரிய வேள்வி. இப்பெரிய வேள்வியில் அனைவரையும்

ஈடுபட அழைக்கிறேன். இது முன்பின் கண்டிராத ஒரு புது யுகத்தைத் தோற்றுவிக்கும். அது இப்பொழுதே ஆரம்பமாவதை நான் பார்க்கிறேன்'' என்று சொல்லி இன்றைய சீர்கெட்ட நிலையைக் கண்டு மனம் தளராதிருக்க, ''இன்றைய பொருளாதாரத்தினுலேதான் இந்த சீர்கெட்ட நிலை தோன்றியுள்ளது. பொருளாதார அமைப்பே தவருயுள்ளது. அதன் வலைகளால் இழுக்கப் பட்டு மக்கள் பிழைபுரிகின்ருர்கள். இந்தப் பொருள் நிலையை மாற்றி அமைத்தால் நம் மக்கள் உயர்நிலை அடைவார்கள் என்பதில் சந்தேகமில்லை. சுரண்டலில்லாத சமுதாயத்தை நாம் நிறுவிய உடனே நம் சீலமும் ஆன்ம அறிவும் தலையெடுத்து நிற்கும். சர்வோதயத்தில் நம்பிக்கையுள்ள நாம் சமுதாயத்தை மாற்றியமைப்பதென உறுதி கொண்டிருக்கிருேம். இந்த இயக்கத்தில் எனக்கு முழு நம்பிக்கையிருக்கிறது. இல்லாவிட்டால் இவ்வளவு வெளிப்படையாக உங்களை நிலம் கொடுக்க வேண்டுமென்று சொல்லமாட்டேன்'' என்று பூதானத்தின் அடிப்படையை விளக்கினுர்.

மத்தியப் பிரதேசத்தில் இருபத்தைந்து நாட்கள் சுற்றி 6700 ஏகர் நிலத்தை 563 பேர்களிடமிருந்து பெற்ருர். பிறகு உத்தரப் பிரதேசத்தில் மூன்று நாட்கள் சுற்றி விந்திய பிரதேசத்தில் நுழைந்தார். பிரபல ஹிந்தி எழுத்தாளரான பனுர்ஸிதாஸ் சதுர்வேதி அடிகளுடன் ஐந்து நாட்களும் இருந்தார். விந்திய மலை மக்கள் விநோபாவடிகளை வரவேற்றுப் பெருமகிழ்ச்சி யடைந்தார்கள். அக்டோபர் 16-ம் தேதி உத்தரப் பிரதேசத்தில் புகுந்து சிர்கிராம் என்ற ஊரில் ஹிந்தி கவிஞரான மைதிலி சரண் குப்தா அவர்களின் விருந்தினராகத் தங்கினுர். அச்சமயம் பிரபல ஹிந்தி கவிகள் அங்கு கூடினுர்கள். அடுத்த நாள் ஜான்ஸியை அடைந்தார். ஜான்ஸி இலட்சுமிபாய் இந்திய சுதந்திர வீரர்களுள் முதலணியைச் சேர்ந்தவர். அங்கு மாணவர்களிடம் பேசும்பொழுது, ''நீங்கள்

அரசியலில் அக்கறை கொள்ளுங்கள்; ஆனால் கட்சிச் சண்டைகளில் கலந்து கொள்ளாதீர்கள். ஆடுகளே மந்தைகளாகக் குவிகின்றன, சிங்கங்கள் அன்று. இன்று எல்லோரும் மாணவர்களை மடக்கப் பார்க்கிறார்கள். நீங்கள் அதற்கு இலக்காகக்கூடாதென்பது என் கருத்து'' என்று உபதேசம் செய்தார். மத்திய பாரதத்தில் புகுந்து குவாலியரை அடைந்தார். அங்கு பூதான இயக்கத்தின் தன்மையை விளக்கி, "நான் இங்கு பிச்சை கேட்க வரவில்லை. உங்களுக்கு சொத்தை உதறித் தள்ளும் பாடத்தைக் கற்பிக்க வந்துள்ளேன். இது என்னுடைய தென்றும், எனக்கு இது உண்டென்றும் சொல்லுவது பிழை. இந்த உணர்ச்சி அற்றவுடன் நிலம் கேட்டதும் கிடைக்கும், ராமராஜ்யம் ஏற்பட்டுவிடும். இதைத்தான் சர்வோதயம் என்கிறேன். உங்களையும் என்னுடன் வர அழைக்கிறேன். இந்தப் புரட்சிகரமான வேலையைச் செய்து சிந்தனையையும் நிலையையும் மாற்ற விரும்புகிறேன்'' என்றார். குவாலியரில் ஜாகீர்தார்களிடம் நிலம் தாய் என்று வேதங்களில் சொல்லப்பட்டிருப்பதாகவும், அதைத் தமதென்று மதிப்பது பிழைபட்டதென்றும் சொன்னார். அவர்கள், "நீங்கள் எங்களுக்கு உதவ வந்துள்ளீர்களென்பதை நாங்கள் அறிகிறோம். இராஜபுத்திரர்களாகிய நாங்கள் எங்கள் நிலங்களைக் கொடுப்பது எங்கள் கடமை. அரசாங்கம் எங்களிடம் அதிகம் விட்டுவைக்காமல் எடுத்துக் கொண்டிருந்தாலும் உள்ளதில் நாங்கள் தாராளமாக உங்கள் பூதானத்திற்குக் கொடுக்கிறோம்'' என்று வாக்குறுதி கொடுத்தார்கள். அங்கிருந்து இராஜஸ்தானத்தில் நுழைந்து டோல்பூர் வழியாக கண்ணன் தவழ்ந்த விரஜ பூமியை அடைந்தார். அங்கிருந்து அலிகாரைச் சேர்ந்தார். அங்கு அவரது நண்பர் டாக்டர் ஸகிர் ஹுசேன் அவரை வரவேற்றார்.

ஆக அவர் நவம்பர் 12-ம் தேதி டில்லியைச் சேர்ந்தார். அந்த அறுபத்திரண்டு நாட்களில் 19,436 ஏகர்

நிலம் தானமாகப் பெறப்பட்டது. இடைக்காலத்தில் தெலுங்கானுவில் மேலும் மூவ்வாயிரம் ஏகர் வசூலிக்கப் பட்டது. அவர் டில்லியை அடைவதற்குள் 35,000 ஏகர் நிலம் பெற்றுவிட்டார். டில்லியை அடைவதற்கு முன்பு டில்லி மக்களுக்குத் தம் வருகையைத் தெரியப்படுத்தி, "பூதான யக்ஞத்தை விளக்கிக் கொண்டு நான் டில்லி வந்து கொண்டிருக்கிறேன். நம் நாட்டிற்கு டில்லி தலைநகரம். நாட்டின் பிரமுகர்களெல்லாம் அங்கு வசிக்கிறார்கள். அதற்கு மேலாக, நாட்டின் தந்தை யாகிய காந்தியடிகளின் சமாதி அங்கு அமைந்துள்ளது. நான் சமாதிக்கு அருகாமையில் தங்குகிறேன். டில்லி நகர வாசிகள் அங்கு எப்பொழுது முள்ளவர்களாயினும் சரி, சிறுபொழுது தங்குபவர்களாயினும் சரி தாராளமாக நிலதானம் கொடுக்க வேண்டுமென்று வேண்டுகிறேன். நிலமற்றவர்கள் நம் குடும்பத்தவரென்றும், அவருக்கும் நிலத்தில் உரிமை யுண்டென்றும் நாம் அறிய வேண்டும். நிலம் டில்லி மாகாணத்தில் இருக்க வேண்டு மென்ப தில்லை; இந்தியாவில் எங்கிருந்தாலும் கொடுக்கலாம். நில மில்லாதவர்கள் அதை விலைக்கு வாங்கியும் தானமா கக் கொடுக்கலாம். நான் பிச்சை கேட்க வரவில்லை யென் றும், நான் உரிமையையே கேட்கிறேன் என்றும், ஒரு புது ஆதர்சத்தை விரிக்கிறேன் என்றும் அறிந்துகொள் ளுங்கள்" என்று முன்கூட்டியே சொல்லியிருந்தார்.

அவர் இராஜகாட்டில் காந்தியடிகளின் சமாதிக்கு அருகாமையில் அமைக்கப் பட்டிருந்த ஒரு பர்ணசாலை யில் தங்கினார். நாட்டின் இராஷ்டிரபதி இராஜன் பாபுவும், நாட்டின் பிரதம மந்திரி பண்டித ஜவாஹரும் அவரை அங்குவந்து அக்குடிலில் சந்தித்து வரவேற்றது, பண் டையில் சக்கரவர்த்திகள் ரிஷிபுங்கவர்களுக்கு வரவேற்புச் செய்வதைப் போல் அமைந்தது. அயல் நாட்டுப் பத்தி ரிகை நிருபர் ஒருவர் இத்தகைய நிகழ்ச்சியும் காட்சியும் இந்தியாவிலேதான் சாத்தியமானவை என்று எழுதினார்.

சமாதிக்கருகாமையில் உட்கார்ந்து கொண்டு அவர் அருளொளி பெற்று வந்தார். முதல்நாள் அடிகள், "அவர் மண்ணுடல் மறைந்தாலும் அவர் ஆவி என்னுடன் இருக்கிறது, நான் பிழைபுரியும் பொழுதெல்லாம் என்னைத் திருத்துகிறது" என்று தம் உணர்ச்சியை எடுத்துரைத்தார். டில்லி மக்களுக்கு முன்பு மகாபலியிடம் நிலம் கேட்ட வாமனனுகத் தம்மைச் சொல்லிக் கொண்டார். தமக்கும் மூன்றடிகள் உண்டென்றும், "முதலடி மக்கள் தம்முடைமையில் சிறிதைக் கொடுக்க வேண்டும், இரண்டாவது அடி அவர்கள் மக்கள் தொண்டில் ஈடுபடவேண்டும், மூன்ருவது அடியாக அவர்கள் எல்லாவற்றையும் துறந்துவிட வேண்டும்" என்று தம் படிகளை விளக்கிவிட்டு, "நாம் எளியவர்களுக்காக தியாகம் செய்ய வேண்டும்; நானே நிலம் கேட்கிறேன். அது தியாகத்திற்கு ஓர் அடையாளம்தான். அனைவரும் தரித்திர நாராயணனுக்குப் பணி செய்ய முற்பட வேண்டும்" என்று தம் காரியத்தை விளக்கினுர். அவர் பணத்தைப் பெற்றுக் கொள்ளவில்லை. ஒரு வியாபாரி ரூபாய் ஆயிரம் கொடுக்க, அடிகள் அது வேண்டாமென்ருர். அன்று கூட்டத்தில் தாம் 35,000 ஏகர் நிலதானம் ஏற்றும் தம் கைகள் சுத்தமாக இருப்பதாகச் சொன்னுர்.

பணம் எவ்வளவோ சிக்கல்களை உண்டாக்கி நிலையைக் குழப்பியுள்ளது என்பது அடிகள் முடிவு. அதை விளக்கி, "ஏன் எனக்குப் பணம் வேண்டாம்? பணமே நம்மை இந்நிலைக்குக் கொணர்ந்துள்ளது. நாட்டின் சீர்கேட்டிற்கு மூலகாரணம் அதுதான். மக்கள் பிறரைப் பணம் கேட்பதைவிடுத்து வேலைசெய்ய வேண்டும். தினசரி வாழ்க்கையில் பணத்திற்கு இடம் இருக்கலாகாது. பணம் பொய்க்கின்றது, நாடோடியைப் போலச் சுற்றுகிறது. ஆயின் எல்லா விவகாரங்களும் வியாபாரமும் அதைக் கொண்டே செய்கிருேம். குடியானவன் ஏகதேசம் வருஷா வருஷம் ஒரே விளைவைப் பெறுகிருன்.

ஆனால் விலைவாசிகள் ஏறவும் இறங்கவும் செய்கின்றன. விலை பண்டங்களுக்கல்ல, பணத்திற்கே. பணத்தின் மதிப்பு மாறிக் கொண்டேயிருக்கிறது. அவ்வளவு நிலையற்ற, மாறுகிற பணத்தைக் கொண்டா எல்லா விவகாரங்களையும் நாம் செய்துகொள்ள வேண்டும்? இதற்கு விடையை நாடுகிறேன், அது கிடைப்பதாயில்லை. பொருளாதார நிபுணர்களும் இதை ஆராய்கிறார்கள்; அவர்களுக்கும் விடை கிடைப்பதாயில்லை'' என்றார். அவருக்கு பணம் மக்களின் வாழ்க்கையை எப்படி இறுகப்பற்றியிருக்கிறது என்பது தெரியாமலில்லை. அவர் பணத்தைப் புரட்டித் தள்ளவே முனைந்து நிற்கிறார். அதை விளக்க அவர், ''பணம் ஈச்வரனைப் போல எங்கும் வியாபித்திருப்பதை உணர்கிறேன். ஆனால் அதை வாழ்க்கையினின்றும் விலக்குவது எளிதல்ல. நான் அதைச் செய்வதையே இலட்சியமாகக் கொண்டுள்ளேன். சுலப வேலையை மேற்கொள்வதில் எனக்கு அவ்வளவு உற்சாகமில்லை. வேலை கடினமாகும் பொழுதே எனக்கும் அக்கறை அதிகமாகிறது. அதில் கஷ்டமுள்ளது என்று தெரிந்தே நான் நிலப் பிரச்னையை ஏற்றுக் கொண்டுள்ளேன். அதேவிதம் தொழிலாளியையும், விவசாயியையும் பணத்தினின்று விடுவிக்கவே நான் முயலுகிறேன். மக்களை பணத்தை நம்பாதிருக்கச் செய்துவிட்டால் அவர்களை பல விலங்குகளிலிருந்து விடுவித்ததாகும். தங்கள் தேவைக்காகும் பண்டங்களை தாங்களே உற்பத்தி செய்துகொண்டு மக்கள் பணத்தினின்றும் விடுதலை பெறவேண்டுமென்று அவர்களை வேண்டுகிறேன்'' என்று சொன்னார்.

நாணயச் செலாவணியைப் பற்றி மேலும், ''நான் பண்டைகாலப் பண்டமாற்றிற்குப் போக வேண்டுமென்று சொல்வதாகக் கொள்கிறார்கள். அது அல்ல என் திட்டம். நான் செலாவணி வேண்டாமென்று சொல்லவில்லை. உலோகக் காசுகளைவிட காகித நோட்டுகளை

ஒப்புக் கொள்வேன். அது பணத்தின் நோட்டாக இருக்கக் கூடாது, பாட்டின் நோட்டாக இருக்க வேண்டும். ஆட்சியாளர் உத்தரவையொட்டி நாசிக்கில் அச்சடிக்கப்படுவதாக இருக்கக் கூடாது; கிராம மக்க ளின் தேவையையொட்டி அவர்கள் உற்பத்தி செய்து கொள்வதாக இருக்க வேண்டும். நோட்டிற்கு சேமிப்பு ஜாமின் எதுவும் வேண்டியதில்லை'' என்று பணத்தைப் பற்றிய தம் கருத்துக்களை விளக்கும் பொழுது பரவல் முறையைக் குறிப்பிட்டார்: ''நான் பரவல் முறையை அத்யாவசியமாகக் கொள்கிறேன். இறைவனே உல கைப் படைக்கும் பொழுது பரவலாகத் தான் பலவற்றை யும் அமைத்தார். அவர் அவ்வாறு கொள்ளவில்லை யாயின் உள்ள அறிவையெல்லாம் டில்லியில் ஒரு பாங் கில் சேகரித்து வைத்து, அதை மோட்டார்கள் மூலமும், விமானங்கள் மூலமும் பரப்ப திட்டம் செய்திருப்பார். அவர் அவ்வாறு செய்திருந்தால் இன்று ஓய்வாக க்ஷீர சாகரத்தில் படுத்திருப்ப தெப்படி?'' என்று தம் கொள் கையைத் தெளிவாக்கினார். மேலும், ''எங்கெல்லாம் பருத்தி விளைகிறதோ அங்கெல்லாம் கிராமத்திலேயே துணி தயார் செய்யப்படலாம். ஆனால் கதர் என்று சொன்னால் பொருளறிஞர்கள் தயங்குகிறார்கள். அவர்கள் எல்லாம் முதலாளிகளிடம் கைக்கூலி பெறு கிறார்களென்று நான் சொல்லுவதில்லை; ஆயின் அவர் கள் பொருள் கொள்கைகள் முதலாளித்துவக் கொள்கை கள். இவ்விஷயத்தில் முதலாளிகளும் கம்யூனிஸ்டுகளும் கருத்தில் ஒன்றுபடுகிறார்கள். அவர்கள் வேற்றுமை உற் பத்தி முறைபற்றியன்று; விநியோக முறையைப் பற்றித் தான். கதரைப் பொறுத்தமட்டில் 'முதலாளித்துவக் கொள்கையே ஆதரிக்கப்படுகிறது'' என்று முடித்தார்.

விடாது மூன்று நாட்களுக்கு அடிகள் திட்டக் கமிஷ னுடன் விவாதித்துக் கொண்டிருந்தார். அதன் தலைவ ரான பண்டித ஜவாஹருடனும் விவாதித்தார். தம் விவா

தங்களில் பேசிய ஒன்றை முக்கியமாகக் குறிப்பிட்டு, "முக்கியப் பிரச்னை உணவுப் பூர்த்தி பெறுவதுதான். நான் முன்பு சொன்ன வாக்கு ஏற்கப்படும் என்றிருந் தேன். இடையே உணவு மந்திரி பல பிரகடனங்களைச் செய்தார். அவர் முதலில் செய்த சங்கல்பத்தை ஒப்புக் கொண்டாலும், அதற்குப் பல விலக்குகளையும் சேர்த்து அது பயனற்றதாகுமாறு செய்தார். அவர் ஷரத்து களும் விலக்குகளும் முற்றிலும் விஷயத்தை மாற்றவே, அதைப் பற்றியே நான் விவாதித்தேன். அவர்கள் ஒரு பதிலைச் சொன்னார்கள்; அது எனக்குத் திருப்தியா யில்லை. நான் மீண்டும் எழுதினேன். நிபுணர்கள் உணவு இறக்குமதியை நிறுத்துவது சாத்தியமன்று என்று முடிவு செய்துவிட்டார்களோ என்று சந்தேகங் கொண்டேன். வியாபார இலாப நோக்குடன் உணவு சுயபூர்த்தியும் கைவிடப்பட்டதோ என்று கலங்கினேன். அவ்விதம் செய்யின் நாட்டின் ஊக்கம் குறைந்துவிடு மென்று சொன்னேன்," என்று தெரிவித்தார். உணவு உற்பத்தியை வற்புறுத்தி அவர், "போனது போகட்டும். மீண்டும் நாம் உணவை இறக்குமதி செய்வதில்லை என்று உறுதி கொள்வோம். அவ்வித உறுதியுடன், பணத்தடைகள் குறுக்கிட இடங்கொடுக்காவிட்டால், உணவுச் சுய பூர்த்தி பெற்றுவிடலாம். செய்யப்படும் சங்கல்பத்திற்கு ஷரத்துகள் இருக்கக்கூடாது. அவ் விதம் செய்யப்படுவதாயின் ஏற்கப்பட்டபாடு பய னுடையதாகும்" என்று முடித்தார்.

அனைவருக்கும் வேலை கொடுக்கப்பட வேண்டுமென் னும் விஷயத்திலும் கமிஷன் அடிகள் அபிப்பிராயத் திற்கு மாறுபட்டிருந்தது. "முதலாவதாக, நான் உணவு இறக்குமதி கூடாதென்றேன். கமிஷன் பல வருஷங் களுக்கு அது அவசியமென்றே திட்டமிட்டுள்ளது. இரண் டாவதாக, நான் அனைவருக்கும் வேலையிருக்க வேண்டு மென்று சொன்னேன். அக்கொள்கையை அவர்கள்

ஒப்புக் கொண்டாலும், உள்ள நிலையில் அதைச் சாதிக்கக் கூடவில்லை என்கிருர்கள். அதைச் செய்யாவிட்டால் எதைத் திட்ட மிடுகிருர்கள்? அப்பொறுப்பை ஏற்றுக் கொண்டால்தான் அவர்கள் கிராமங்களை மேம்படுத்த முடியும்; அவை பூர்த்தி பெற்று நிற்கும்" என்ருர்.

திட்டக் கமிஷன் பெரிய பாசனத் திட்டங்களைப் போட்டது, ஆயின் கிணறு வெட்டுவதை அது வற்புறுத்த வில்லை. அடிகள் கிணறுகள் பயன் தருபவை என்று கருதினர். இவ்விதமாக கமிஷனை அடிகள் சந்தித்தும் திட்டம் மாற்றமடையவில்லை.

அடிகள் விடாமுயற்சியுடன் பணியாற்றி வந்தார். அதுவே சத்தியாக்கிரகியின் முறை. அவர் எதையும் தீர்த்துவிடுவதாகவும் பெருமை கொள்ளவில்லை. அவர், "என் வேலை தூய்மை செய்வது. பிறரை அது மாற்றுகின்றதோ இல்லையோ நான் அதிகமாக இதயசுத்தியைப் பெற்று வருகிறேன். இவ்வேலை வழியாக என் ஆன்ம ஒளியை நான் பெற முயல்கிறேன்......இந்தப் பெரிய நிலப் பிரச்னையை நானே தீர்த்துவிடுவேனென்பதல்ல. நான் இவை யெல்லாம் அமைதியாகச் சீரமைக்கப்பட வேண்டுமென்று விரும்புகிறேன். ஆனல் யார்தான் உலகின் பிரச்னைகளைத் தீர்க்க முடியும்? இராம பிரானும் இருந்தார், கிருஷ்ணவதாரமும் ஆயிற்று. அவர்கள் தங்களாலானதைச் செய்துள்ளார்கள்; ஆனலும் பிரச்னைகளெல்லாம் தீர்ந்துவிட்டனவா? ஒருவன் அவன் வேலையை மட்டும் தான் செய்ய முடியும்" என்று தம் நிலையை விளக்கினர்.

டில்லியில் அடிகள் • பதினறு நாட்கள் தங்கினர். மக்கள் திரளாக வந்து தரிசனம் பெற்ருர்கள். இராஷ்டிரபதியிலிருந்து சாதாரண மனிதன் வரை தன்னலாகும் நிலத்தைத் தானமாகக் கொடுத்தார்கள். அடிகள் அது வரை தாம் பெற்ற அநுபவத்தைக் கொண்டும், திட்டக் கமிஷனின் நோக்கத்தை அறிந்தும், பூதான இயக்கமே

நாட்டின் சீரமைப்பிற்கு முதற்படி வேலை என்ற உறுதி பெற்றார். இதுவரை செய்தது போலவே கால்நடையாகச் சுற்றி இயக்கத்தை நடத்துவதெனத் துணிந்தார். உத்தரப் பிரதேசத்தில் யாத்திரை செய்வதென்றும், தம் கணக்குப்படி வரும் ஒரு கோடி ஏகரில் முதற்படியாக ஐந்து இலட்சம் ஏகர் வசூலிப்பதென்றும் தீர்மானம் செய்துகொண்டு உத்தரப் பிரதேச யாத்திரையை ஆரம் பித்தார்.

## V

## உத்தரப் பிரதேச யாத்திரை

நவம்பர் மாதம் 1-ம் தேதி (வட) மதுரையில் நிர் மாண ஊழியர்கள் கூட்டம் கூடிற்று. அந்த மகாநாட்டில் உத்தரப் பிரதேசத்தில் ஐந்து இலட்சம் ஏகர் வசூலிப் பதென்ற முடிவு செய்யப்பட்டது. அவர்களிடம், "உல கின் விடுதலைப் போராட்ட சரிதத்தில் நம் சாத்விகப் போராட்டம் தனிப்பட்டது. நாம் விடுதலைபெற்றது நம் நாட்டின் பண்பாட்டிற்குப் பெருமை தருவது. நம் பண்பாடு சீலத்தில் நிலைத்தது. அதை நம்பியே நான் ஐந்துகோடி ஏகர் வசூலிப்பதென நிச்சயம் செய் கிறேன். இதை நானே செய்துவிட முடியாது. இறைவனருளுடன் நாம் சீக்கிரமாகவோ தாமதமாகவோ இதைச் செய்தாகவேண்டும். இதைச் செய்யப் பாடும் அக்கறையும் வேண்டும். நம் தேசீய இயக்கத்திற்கு இது ஒரு நெருக்கடியான காலம். சாத்விகமாக இதை முடிக்காவிட்டால் மகாத்மா காந்தியின் நிர்மாண திட்ட மெல்லாம் பயனற்றதாகப் போய்விடும். பூதானம் பெற்றுவிட்டால், நாம் பிறவற்றையும் சாதித்துவிடு வோம். இந்நிலையில் எல்லா சர்வோதய ஊழியர்களும் இந்த ஒரு வேலையிலேயே அக்கறை கொள்ள வேண்டும். நீங்கள் மனப்பூர்வமாக இதில் இறங்கி வேலைசெய்து

இதை வெற்றிகரமாக முடிக்கவேண்டும்'' என்று இயக்கத்தின் விரிவையும் அவ்வேலையின் அவசியத்தையும் விளக்கினார். பிறவேலைகளைவிட்டு இவ்வொருவேலையை மேற்கொள்ள வேண்டியதின் அவசியத்தைக் கூறினார்.

மீரட் நகரத்தில் ஆசாரியர் கிருபளானி ஸ்தாபித்த காந்தி ஆச்ரமம் உள்ளது. அது 1922 முதல் அரிய கதர்வேலை செய்துவருகிறது. அவ்வாச்ரமத்தின் நிர்வாகிகளான பாபா ராகவதாஸ், ஸ்ரீ கரண்பாய் இருவரும் அம் மகாண பூதானவேலையின் பெரும் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்கள். மீரட் ஜில்லாவைக் கடக்கும் சமயம், மூடுபனியில் ஒரு சைகிள் பழகுபவன் நடந்து வந்து கொண்டிருந்த அடிகளின் மேல் மோதி அவரைக் கீழே தள்ளினான். காடூலியை அடைந்தவுடன் அடிகளது காயம் பெரிதென்பது தெரியவந்தது. அடிபட்டு நோயுற்றதனால் அடிகள் தம் பிரயாணத்தை நிறுத்தவில்லை. டிஸம்பர் மீ 2-ம் தேதியன்று அவர் தேவபந்து என்ற முஸ்லிம் கல்வி க்ஷேத்திரத்தை அடைந்தார். அங்கு கற்றவர்களும் முதியோர்களுமாய உலேமாக்கள் அவரது அரபிமொழி அறிவையும் இஸ்லாம் தர்ம அறிவையும் பாராட்டி அவருக்கு விசேஷ வரவேற்பு அளித்தார்கள். 8-ம் தேதி யன்று கால்ஸி ஆச்ரமத்தை அடைந்தார். அது சரித்திரப் பிரசித்தி பெற்ற இடம். அங்கு தர்ம தேவ சாஸ்திரியும் அவர் மனைவியும் நீண்டகாலமாக மலைவாசிகளுக்குத் தொண்டு புரிந்து வருகிறார்கள். அவ்விடத்தில் அடிகள் தம்மை அச்வமேத யாகத்திற்குமுன் விடப்படும் குதிரையுடன் உவமித்துக் கொண்டார். ''அரசர்கள் செய்யும் யஞ்யங்கள் வேறு; மக்கள் செய்யும் இந்தப் பிரஜாசூய யஞ்யத்தில் அனைவரும் ஈடுபட வேண்டும்'' என்றார். அவ்விடத்தில் நிலம் பெறுபவர்களுக்கு கிணறுகள் வெட்டவும், காளைமாடுகள் வாங்கவும், கவலை ஏற்றங்கள் அமைக்கவும் கலப்பைகள் வாங்கவும் பணம் கேட்டார்.

1951 டிஸம்பர் முதல் மூன்று மாதம் பொதுத் தேர்தல் காலம். தேர்தல் மும்முரமாயிருந்தபொழுது அடிகள் ரோஹில்கண்டு பிரதேசத்தில் சுற்றிக் கொண் டிருந்தார். சிலர் தேர்தல் வேகம் குறையும் வரை பூதான வேலையை நிறுத்தி வைக்க அடிகளை வேண்டினர்கள். அடிகள் கங்கா நதி தேர்தலுக்காக நிற்காமல் ஓடுவதைப் போல தாமும் தம் வேலையை விடாது செய்யவேண்டி யது அவசியமென்று சொன்னர். அவர், "நான் இறை வனின் தொண்டன். அவர் விரும்பும்வரை வேலை செய்து கொண்டிருப்பேன். அவருக்கு எதிராகச் செல்வ தல்ல என் பணி. அவர் விரும்பின் என் திட்டத்தை மட்டுமல்ல என்னையும் அகற்றி விடுவார்" என்று பதிலளித்தார்.

தேர்தலால் அடிகளுக்கு ஆதரவு குறைந்துவிட வில்லை. பிரார்த்தனைக் கூட்டங்களுக்கு மக்கள் திரள் திரளாக வந்தனர். அவர் தேர்தலைப் போராட்டமாக அன்றி விளையாட்டாகக் கொள்ள அபேட்சகர்களையும் மக்களையும் வேண்டிக் கொண்டார். அனைவரும் ஒப்பும் பஞ்சாயத்து முடிவையன்றி பெரும்பான்மையோரின் முடிவை அவர் ஏற்றுக் கொள்வதில்லை. தேர்தல் முடிந் ததும் அடிகள், "தேர்தல்கள் முடிந்தன. இனி நாமெல் லோரும் எளியவர்களுக்குத் தொண்டாற்ற முற்படுவோ மாக. நாம் அரசியலில் வேறுபட்டு நின்றலும் பூதான வேலையில் ஒன்ருக நிற்போமாக. அவ்விதம் செய்து நாம் ஒன்றுகூடித் தொண்டாற்ற வல்லவர்கள் என்பதை விளக்குவோமாக. மக்களுக்கு இஷ்டப்பட்டவர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளட்டும். நான் இதையே இடம் தோறும் விளக்கி வருகிறேன். அனைவரும் கூடினல் பூதான இயக்கம் வெற்றி பெறும்" என்று தேர்தலைப் பற்றிச் சொன்னர்.

உத்தரப் பிரதேசத்தில் 90 நாட்கள் யாத்திரையில் அடி கள் 28,303 ஏகர் பெற்ருர். 1747 பேர்கள் தானம் கொடுத்

தார்கள். தினம் சராசரி 311 ஏகர் தானம் பெறப்பட்டது. தினசரி வசூல் மேன்மேலும் உயர்ந்து கொண்டே போயிற்று. அந்த யாத்திரையில் நடந்த மூன்று விசேஷங்களைக் குறிப்பிடுவது பயனுடையதாகும். மோர்காபாக் ஜில்லாவின் சௌதாபூர் என்ற இடத்தில் ராமசரண் என்ற ஒரு குருடன் ஒரு நண்பன் துணைவர அடிகளின் முகாமை இரவு ஒரு மணிக்கு அடைந்தான். வந்த காரணம் விசாரிக்கப்பட, அவன், "எளியவர்களுக்காக நிலம் கேட்கும் ஒரு பாபா (பெரியவர்) இங்கு வந்திருப்பதாகக் கேள்விப்பட்டேன். என்னிடமுள்ள பன்னிரண்டு பீகா நிலத்தையும் தானமாக அவரிடம் கொடுக்க நான் வந்திருக்கிறேன்" என்று பதிலளித்தான். தொண்டர் ஒருவர் தானபத்திரத்தை எழுத, ராமசரணின் கைரேகை அதில் வாங்கப்பட்டது. அவன் உடனே தன்னிடத்திற்குத் திரும்பிவிட்டான். காலையில் இந்த சமாசாரத்தைக் கேள்விப்பட்டதும் அடிகள், "அவர்கள் ராமசரண் குருடன் என்று சொல்லுகிறார்கள். உண்மையில் நாம்தான் குருடர்கள். ராமசரண் உருவில் இராமனின் பாதங்களே இவ்வியக்கத்தை ஆசீர்வதிக்க வந்தன என்று நான் கொள்கிறேன்" என்றார்.

காலாதூங்கி என்ற கிராமத்தில் ஒரு கிழவி 'யாரோ ஒரு பாபா எளியவர்களுக்காக நிலம் கேட்க வருகிறார்' என்று அறிந்து இரவு பதினொரு மணிக்கு அடிகளிடம் வந்தாள். எல்லோரும் தூங்கிவிட்டார்கள். காலை மூன்று மணிக்கு தாமோதர தாஸ் மூந்தடா அவர்கள் காலை மணி அடித்துக் காலைக் கடனைக் கழிக்க வெளியே வந்தார். வாயிற்படியில் ஒரு கிழவி உட்கார்ந்திருப்பதைக் கண்டார். அவளுக்கு மலைச் சரிவிலும் நிலம் உண்டு, அடிவாரத்திலும் உண்டு. நல்ல அடிவார நிலத்திற்கு தான பத்திரம் எழுதிக் கொடுத்துவிட்டு அவள் வீடு திரும்பினாள்.

கோரக்பூர் ஜில்லாவில் ஒரு கிராமத்தில் அடிகளுக்கு விசேஷ வரவேற்பு அளிக்கப்பட்டது. பெண்கள் பஜனை செய்துகொண்டு அவருக்கு ஆரத்தி எடுத்தார்கள். ஒரு கிழவி தயக்கத்துடன் அடிகளின் முன்பு பணிந்தாள். "எனக்கு பன்னிரண்டு பீகா நிலமும் ஐந்து மக்களும் உள்ளார்கள். அதில் இரண்டு பீகா நிலத்தை தாங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும்" என்று பிரார்த்தித்தாள். அந்த தானத்தை ஏற்றுக் கொண்டு அன்று பிரார்த்தனைக் கூட்ட இறுதியில், தமக்கு அந்த இரண்டு பீகா நிலம் இரண்டு இலட்சம் பீகாவுக்கு மேல் மதிப் புடைய தென்றும், அது தம் வேலைக்கு அத்தாயின் ஆசீர்வாத மென்றும் சொன்னார் அடிகள்.

பல்லியா ஜில்லாவில் கம்யூனிஸ்டுகளும் அடிகளுக்கு வரவேற்பு அளித்தார்கள். ஆயின் அப்பகுதியில் நிர்மாண ஊழியர் எவரும் காணப்படவில்லை. அடிகள் நிர்மாண ஊழியர் இன்மையே கம்யூனிஸம் அங்கு தழைத்ததற்குக் காரணம் என்று விளக்கினார். சரியான தொண்டர்கள் மக்களுக்குச் சேவை செய்வார்களாயின் கம்யூனிஸ்டுகள் அங்கு தோன்றுவானேன் என்பது அவரது கேள்வி. ஸாம்யயோக தத்துவத்தை அடிகள் மக்களுக்கு விவரிக்கலானார். வரவர தினசரி நிலதானத்தின் அளவு அதிகமாகிக் கொண்டு வந்தது. முகமதாபாத், காஸிப்பூர் ஜில்லாக்களைச் சுற்றிக்கொண்டு அடிகள் காசியை அடைந்தார்.

அனிபெஸன்டு அம்மையாரின் பள்ளிக்கூடச் சிறுவர்களும் சிறுமிகளும் அவருக்கு வரவேற்பு அளித்தார்கள். அங்கிருந்து அவர் காசி வித்யாபீடம் சென்றார். வழியில் தத்வதரிசியும் ரிஷிபுங்கவருமான பாபு பகவான் தாஸ் (சென்னை கவர்னர் ஸ்ரீ ஸ்ரீ பிரகாசாவின் தந்தையார்) அவர்களின் சேவாச்ரமம் உள்ளது. அங்கு அடிகள் அந்தப் பெரியாருடன் சிறிது நேரம் தங்கி அளவளாவினார்.

அங்கிருந்து அவ்வருஷம் சர்வோதய சம்மேளனம் கூடும் சேவாபுரியை 12-ம் தேதியன்று அடைந்தார்.

## சேவாபுரி சர்வோதய மகாநாடு

ஏப்ரல் 13, 14, 15, 16-ம் தேதிகளில் சேவாபுரியில் மகாநாடு கூடியது. ஸ்ரீ கிருஷ்ணதாஸ் ஜாஜு அவர்கள் தலைமை வகித்தார். அங்குள்ள காந்தி ஆச்ரமத்தை ஸ்ரீ தீரேந்திர மஜும்தாரும் கரண் பாயும் நிர்வகித்து வருகிறார்கள். அதற்குள் நாட்டில் 1,02,361 ஏகர் நிலம் தானம் பெறப்பட்டது. 4,936 நபர்கள் தானம்கொடுத்திருந்தார்கள்.

மகாநாடு ஆசாரிய கிருபளானியால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அவர் நாட்டில் புரட்சியை உண்டாக்க அரசியலை உதறித் தள்ளுவது சாத்தியமல்ல வென்று சொன்னார். விநோபாவடிகள் காந்தியடிகளின் மறைவிற்குப் பிறகு எப்படி பொதுமக்களுடன் தொடர்பு பெறுவது என்பதைக் குறித்து, அஹிம்ஸையை சாதனமாக்குவதென்பதை விளக்கி, "என் முன் இந்த மூன்று திட்டங்களே காணப்படுகின்றன. சர்வோதய மேளாக்களில் (மறைவு நாள் கொண்டாடப்படும் பொழுது) ஒவ்வொருவரும் ஒரு சிட்டம் நூல் கொடுக்க வேண்டும். ஒவ்வொருவரும் ஒரே சிட்டம் கொடுத்தால் போதும். அப்பொழுது ஒவ்வொரு சிட்டமும் சர்வோதயத்திற்குக் கொடுக்கும் ஒரு வாக்காகும்" என்றார். இரண்டாவதாக, காந்தியடிகளின் நிர்மாண ஸ்தாபனங்கள் பணத்தைக் கைவிட்டு வேலை செய்ய வேண்டுமென்பதை, "அப்பொழுதே நம் வேலை புத்துயிர் பெறும், கிராமங்கள் தலையெடுக்கும். அதனால் அரசாங்கமும் சீர்ப்படும். நம்முடைய எல்லா நிர்மாணஸ்தாபனங்களும் பணத்தை நம்பியிருத்தலை விட வேண்டும். ஆதர்ச கிராமங்களை அமைக்கும் வேலையில் முழுதும் ஈடுபடவேண்டும்" என்று தம்

திட்டத்தைச் சொன்னூர். இயந்திரங்களால் உற்பத்தி செய்யப்படும் சில பண்டங்களை பகிஷ்கரிக்கவும் அவர் வேண்டிக் கொண்டார். தொண்டர்களே உதாரணங் களாகும் விதம் தம்மை மாற்றி யமைத்துக் கொள்ள வேண்டுமென்பது அவர் ஆசை.

மூன்ருவதாக, அவர் அடிப்படை வேலையாகிய பூதா னத்தை விளக்கிப்பேசும் பொழுது, "நம்பிக்கை மலையி னும் வலியது. அது கயிற்ருல் தொங்கவிடப்பட்டுள்ள திரையல்ல. நம்பிக்கை ஒன்று நிற்கிறது, அல்லது இல்லாது போகிறது. அரை உயிருடன் இருக்கக் கூடாதது போல் அரை நம்பிக்கை யென்பதுமில்லை. சிரத்தை இருந்தால் தானே செய்கை அதையொட்டி நடக்கிறது. அதனுல் நிச்சயம் ஏற்படுகிறது. ஒருவனுக்கு நிச்சயம் கிட்டுவதற்கு முன் அவன் வேலையைச் செய்து கொண்டிருக்கவேண்டும். அநு பவம் சரி சொல்வது நிச்சயமாகிறது. சீலத்தின் அடிப் படையிலேயே இவ்வேலையை நாம் செய்ய வேண்டு மாகையால், நம் வேலையில் நமக்கு நிச்சயம் இருக்க வேண்டும். என் மனதில் எழுந்த சங்கற்பங்கள் எல்லாம் நிறைவேறியுள்ளன. என்னிடத்திலுள்ள இறைவன் அனைவர் உள்ளத்திலும் இருக்கின்ருன் என்ற நம்பிக்கையுடனேயே நான் மக்களை அணுகுகிறேன். அவர்களிடம் என் காரியத்தை விளக்க வேண்டும்; ஒரு தரமல்ல, பலதரமும் அதைச் செய்ய வேண்டும். சங்கராசாரியாரும் அறிவையே துணைகொண்டு நின்ருர். நாம் விஷயங்களைப் பிறருக்கு விளக்கவேண்டும், அவர் கள் மனதைத் திருப்ப வேண்டும்" என்று சொன்னூர்.

சர்வோதய இலட்சியத்தை விளக்கி, "இங்கு கூடி எந்த இலட்சியத்தை நாம் அடைய விரும்புகிறோ மென்ப தைப் பற்றியும் சொல்லுகிறேன். நாம் ஒரு ஆதர்ச சமுதாயத்தை நிறுவ விரும்புகிருேம். தனி நபரின் சித்தசுத்திக்கும், ஆத்மாநுபூதிக்கும் இவ்வளவு பெருங்

கூட்டம் கூட்டப்பட வேண்டியதில்லை. அதை அழகாக ஆசாரிய கிருபளானி அவர்கள் விளக்கினார்கள். அவர் பிரச்னையைப் பகுதிகளாக பிரித்துவைத்து விளக்கினார். பிரிந்திருப்பவைகளைப் பொருத்துவதும் தேவையே. நாம் கொழுக்கட்டையை விரும்புகிறோம்; வெல்லம் மாவு நெய் என்பவைகளால் ஆவது அது. ஆயின் அவைகளைத் தனித்தனியாக உண்ண எவரும் விரும்புவதில்லை. அதே விதம் புரட்சியை உண்டாக்கவும், எளியவர்களுடைய இன்னல்களைப் போக்கவும், ஆத்ம சுத்திபெறவும் இவ்வேலையை நாம் மேற்கொள்ளுகிறோம். இந்த மகாநாட்டில் கூடியுள்ள தொண்டர்கள் பூதானத்தில் இந்தப் பல பயன்களும் உள்ளன, அதுவே எல்லா நிர்மாணவேலைக்கும் இடம் தரும் என்றறிகிறார்களென்று நான் நினைக்கிறேன்" என்று முடித்தார்.

### சேவாபுரிக்குப்பின்

சேவாபுரி மகாநாட்டிற்கு முன்பே விநோபாவடிகள் அப்பிரதேசத்தில் முப்பத்தைந்து ஜில்லாக்களைச் சுற்றி விட்டார். அதற்குப் பிறகு எஞ்சியுள்ள பதினைந்து ஜில்லாக்களையும் சுற்றலானார். அவர் அயோத்தியை அடைந்தார். அது இராமபிரான் அவதரித்த இடமாயிற்றே! அக்பர் பூர் ஆச்ரமத்தினின்றும் ஒரு வேண்டுகோள் விடுத்தார்: "சில நண்பர்கள் யோசனையின் பேரில் நான் உத்தரப்பிரதேசத்தில் பூதான யாத்திரையை ஆரம்பித்தேன். முதற்படியாக இம்மாகாணத்தில் ஐந்து இலட்சம் ஏகர் தானமாகப் பெறுவது என்று தீர்மானித்தோம். இதுவரை ஒரு இலட்சம் ஏகர் கிடைத்துள்ளது. இது எல்லாம் இறைவன் திருவுள்ளம். அவன் இதை நற்பணியாகவே கொள்கிறான். என் நண்பர்களும் இவ்வியக்கத்தை ஆதரிக்கிறார்கள். சர்வோதய மகாநாட்டில் கூடிய தொண்டர்கள் இருபத்தைந்து இலட்சம்

ஏகர் வசூலிப்பதென முடிவு செய்துள்ளார்கள். இந்த இருபத்தைந்து இலட்சம் ஏகர்களை விநியோகிப்பதால் இந்நாட்டில் நிலமற்றவர் பிரச்னை தீர்ந்துவிடும் என்று நான் கொள்ளவில்லை. குறைந்தது ஐந்துகோடி ஏகர் நிலம் வேண்டும். நாம் முதற்படியாக இருப்பத்தைந்து இலட்சம் ஏகர் வசூலித்து இந்தியாவின் ஐந்து இலட்சம் கிராமங்களிலும் இந்த அஹிம்ஸா போதத்தைப் பரப்புவோமானால் நிலப்பிரச்னை தீர வழி செய்ததாகும். இந்த பிரஜா சூய யக்ஞத்தில் பங்கெடுத்துக் கொள்ளவும், பொருளாதாரப் பிரச்னைகளைத் தீர்க்கவும் அஹிம்சையையே சாதனமாகக் கொள்ளவும் வேண்டுகின்றேன். இந்த வேலை சரியானது, இது நம் பண் பண்பாட்டுடன் முறையாகப் பொருந்துவது, பொருளாதார சமூகப் புரட்சிக்கு வழிசெய்வது, உலகில் அமைதியை நிறுவ உதவுவது.

"நாட்டிற்கு ஒரு திட்டத்தைச் சமர்ப்பிக்க நான் ஒரு தலைவனல்ல என்பது எனக்குத் தெரியும். வாழ்க்கையில் பெரும்பயனையடைய எளியவர்களின் தொண்டு ஒரு சாதனமெனக் கொள்பவன் நான். காந்தியடிகள் இன்று உயிருடன் இருந்தால் நான் உங்கள் முன் நிற்கமாட்டேன். நான் தெருக்களிலும், விவசாயப் பாட்டை ஏற்றும், பணத்தினின்று விடுபடும் முயற்சியில் ஈடுபட்டும் இருப்பேன்; மாறுபட்ட சந்தர்ப்பத்தால் நான் வெளியே வந்துள்ளேன்; ஒரு புது வேலையையும் தொடங்கியுள்ளேன். இது பணிவோ, செருக்கோ யாதானாலும் அதை இறைவனுக்கே அர்ப்பணம் செய்கிறேன். என்னுடன் துணைநிற்க என் சகோதர சகோதரிகளை வேண்டுகிறேன்" என்று மன்றுடினர்.

பைஸாபாத்தில் மே மாதம் முதல் தேதியன்று தொழிலாளர் நாளைக் கொண்டாடும் சமயம், "என் இயக்கம் ஒரு தொழிலாளர் இயக்கம். நானே ஒரு தொழிலாளி. என் வாழ்க்கையின் பெரும் பகுதியையும் பாட்

டாளியாகவே கழித்துள்ளேன். வாழ்க்கைக்கு அத்தியாவசியமானாலும் மிகக் கேவலமானதாகக் கருதப்படும் சுத்திவேலை, நெசவு, தச்சு, பயிரிடல் இவைகளைச் செய்து வந்திருக்கிறேன். இந்த வேலை நிலப்பிரச்னையைத் தீர்க்கும், உணவைப் பெருக்கும், நியாயத்தை நிலைநாட்டும், கிராமங்களைச் சீரமைக்கும், அதிகாரிகளை ஒழுங்குள்ளவர்களாக்கும், சமயாசாரங்களை நிலைநாட்டும், மனிதனின் அன்பையும் ஈகையையும் தூண்டும்'' என்று பூதான இயக்கத்தின் விரிவை எடுத்துரைத்தார்.

புத்த ஜயந்தியன்று லக்நௌ நகரத்தில் அடிகள் இருந்தார். அன்று பிரார்த்தனைக் கூட்டத்தில், ''புத்த பகவானின் போதனைகளை மக்கள் இன்று ஆர்வத்துடன் ஏற்க முனைகிறார்கள். அவர் போதித்தவைகளை அவர் காலத்திலும் இன்று வரையிலும் நாம் சரியாகப் பாராட்டவில்லை. ஆயினும் அவர் போதனை அழிந்துவிடவில்லை. முளைக்கும் பருவம் வரை மண்ணில் பதுங்கிக் கிடக்கும் விதை போல அது இருக்கின்றது. இரண்டாயிரத்து ஐந்நூறு வருஷங்களுக்குப் பிறகு அது முளைக்க ஆரம்பிக்கிறது.

''புத்தபகவானுக்குப் பிறகும் காந்தியடிகள் தோன்றுவதற்கு முன்பும் பல பெரியார்கள், கோபத்தைப் பொறுமையாலும், பயத்தை பயமின்மையாலும், பகையை அன்பாலும் வென்றுவிடலாம் என்பதை விளக்கியுள்ளார்கள். ஆயின் அவை தனிப்பட்ட உதாரணங்களாக நின்றன, பெரிய அளவில் பரிசீலக்கப் படவில்லை.

''விஞ்ஞான அறிவோ பேரளவில் வளர்ந்துவிட்டது. விஞ்ஞானம் பெற்றவர்கள் பலநாடுகளைத் தமதாக்கினார்கள். ஆங்கிலேயர் இந்தியாவைப் பிடித்துக்கொண்டு அதன் மக்களை நிராயுதபாணிகளாக்கினார்கள். ஆயுதங்களைக் கொண்டே ஒரு நாடு விடுதலையடைய வேண்டுவதாயின் இந்தியா என்றென்றுக்கும் அடிமைப்பட்டிருக்க

வேண்டியது தான். ஆயுதங்கள் இல்லாவிட்டாலும் நாட்டிற்கு விடுதலை பெறும் வழி யொன்றை வகுக்க வேண்டியது அவசியமாயிற்று. தனி நபரின் அநுபவம் சமூக அளவிற்குப் பெருக்கப்படவே இந்தியா விடுதலை யடைந்தது. இது அஹிம்சையின் முதல் பெரு வெற்றி தான்!

"இந்தியா அஹிம்சையால் மட்டும் விடுதலை யடைந்துவிட்டது என்று நான் சொல்லவில்லை. கீதையில் சொல்லியிருப்பதைப் போல ஐந்து பகுதிகள் கூடினல் தான் வெற்றி கிட்டும். நாட்டின் விடுதலைக்கு அஹிம்ஸை சாதனம் பேரளவிற்கு உதவி புரிந்ததென்றே நான் சொல்லுகிறேன். நாம் இப்பொழுது சுதந்திரர்கள். நாம் சமுதாயத்தை எந்த வழியிலும் சீரமைக்கலாம். நம்நாடு பெரியது. நம் பொறுப்பும் பெரியது. பொரு ளாதார சமூகச் சீரமைப்பை எவ்வழியில் செய்வதென் பதை நாம் தீர்மானிக்கவேண்டும்.

"நாம் நற்பயனைக் கோரி தீய சாதனங்களை மேற் கொண்டால், நம் பிரச்னைகளுக்கு முடிவே உண்டாகாது. ஆயின் அஹிம்ஸா சாதனத்தைக் கொண்டால் முறை யாக நம் பிரச்னைகளும் தீரும், உலகெங்கும் அவ்வழி ஏற்றுக்கொள்ளவும் படும். ஆகையால் தான் நான் நிலப் பிரச்னையை அமைதியாகத் தீர்க்க வேண்டுமென்கிறேன். அது சிறிய பிரச்னையல்ல. மக்களை தங்களிடமுள்ள நிலத்தைக் கொடுக்க வேண்டுகிறேன். பிராமணனுகிய நான் ஏற்கவும் தகுதி பெற்றுள்ளவனுயினும் நான் பிச்சையாகக் கேட்கவில்லை. எனக்காக என்ருல் நான் பிச்சையெடுக்க வேண்டும். எளியவர்களின் பிரதிநிதி யாக நான் நிலம் கேட்கிறேன். மக்களுக்கு தங்களிடம் அதிகமாக உள்ளதை விட்டுவிட வேண்டியதின் அவசி யத்தைப் போதிக்கிறேன். இறைவன் புத்தரைக் கொண்டு தொடங்குவித்த இந்த நல்ல காரியத்தை

என்னை முடித்துவைக்கக் கட்டளை யிடுகின்றா ரென்று கொள்கிறேன்.

"நான் செய்யும் வேலை தர்ம சக்கர பிரவர்த்தனம் தான். தர்ம சக்கரம் சுழன்று வருவது தான். அரணியத்தில் சிங்கம் கர்ஜிப்பதைப் போன்று நான் உரத்துச் சொல்லுவதைக் கேளுங்கள். ஏற்கனவே நிலம் என்னிடம் வந்துவிட்டது. நிலம் நிலமற்றவர்களுக்குக் கொடுக்கப்பட்டுவிட்டது. இந்த மாற்றத்தை எப்படிச் செய்யப் போகின்றீர்கள்? இது தான் உங்கள் வேலை.

"பொருளை, உடைமையைச் சமமாக்கிப் பெற வேண்டு மென்பதே இன்றைய கோஷம். அது அப்படியே ஆகும். நிலம் மீண்டும் பிரிக்கப்படும். அதை அமைதியாகச் செய்ய முடியும் என்பது என் துணிவு. அதனாலேதான் நான் உறுதியுடன் பேசுகின்றேன். நீங்கள் தானமாக அதைக் கொடுக்க வேண்டிய நற்காலமிது. உலகில் பிற நாடுகள் ஒன்றையொன்று அழித்துக் கொண்டிருக்கும்பொழுது, ஒன்றையொன்று சூறையாடிக் கொண்டிருக்கும் பொழுது நாம் ஒரு புது யுகத்தை ஆரம்பித்து ஈகையை உயர்நிலையில் அமர்த்துகிறோம். நாம் பொறுமையுடனும் திடத்துடனும் இவ்வேலையைச் செய்துவந்தால், இந்தத் தத்துவம் உலகெலாம் பரவ வழியாகும். ஆயின் புத்தபகவானின் சீடர்கள் கொண்ட பக்தி, சிரத்தை, நம்பிக்கை இவைகளை நாம் பெற்றிருக்க வேண்டும். நாமும் அவர்கள் பெற்ற சிரத்தையைப் பெற்று தர்ம சக்கரம் மீண்டும் சுழலும் விதம் செய்ய வேண்டும்" என்று போதித்தார். உண்மைச் சமயவழி நேர்மையான வாழ்வே யன்றோ?

கான்பூர் நகரை அவர் அடைந்த அன்றே அந்த ஜில்லாக் கணக்குப்படி பெறவேண்டிய தானம் 13,000 ஏகரும் அவரிடம் தானமாகக் கொடுக்கப்பட்டது. உடனே அடிகள் கான்பூர் ஜில்லாவின் கணக்கு ஒரு இலட்சம் என்றார். அவர் மேலும் இரண்டாயிரம் ஜதை

மாடுகள் நிலம் பெறுபவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டுமென்றார். அந்த ஜில்லாவில் புக்ரயான் என்ற ஊரில் அடிகள் நிலவிநியோகம் செய்தார். அங்கு, "சந்தோஷம் நிறைந்த ஒன்றைச் செய்ய இங்கு கூடு கிறோம். பூதானத்தில் பெற்ற நிலத்தை நிலமற்றவர் களுக்கு வழங்கப் போகிறோம். அன்புடனும் நியாயத் துடனும் அது செய்யப்பட வேண்டும். இனியும் தேவை யானால் அதிக நிலம் தானமாகக் கிடைக்கவேண் டும்." என்று கூறி நிலவிநியோகம் செய்தார். அங்கு கிடைத்தது பத்து பீகாக்கள். எட்டுக் குடும்பங்களுக்கு அவைகளை விநியோகிக்க வேண்டும். அனைவருக்கும் நிலம் கிடைக்கும்படி அதிக நிலத்தைத் தானம் செய்யும் படி அடிகள் கோரினார். முன்பு கொடுத்தவர்கள் தானத்தை அதிகப்படுத்தினார்கள். முன்பு கொடாத வர்களும் கொடுத்தார்கள். நாற்பத்து மூன்று பீகாக்கள் கிடைத்தன.

அன்று விழாவை முடிக்கும் சமயம், "நிலம் பெற்ற வர்களும் பாக்கியசாலிகள், நிலம் கொடுத்தவர்கள் இரு மடங்கு பாக்கியசாலிகள். நிலமற்றவர்கள் பூதானமில்லா விட்டாலும் வேறு வழிகளில் நிலம் பெறப் போகின் றார்கள். ஆயின் அனைவர் உள்ளத்திலும் உறையும் இராமபிரானின் திருவருள் இருந்தவாறென்னே! நம் முறையின் பெருஞ்சிறப்பு இதுதான். நான் நிலம் கொடுப் பவர்களை நிலம் பெறுபவர்களும் கிராமக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களென்று கொண்டு அவர்களுக்கு உதவும்படி வேண்டுகிறேன். இது பாபமும் இழிவும் நிறைந்த கலியுகமென்று சொல்லுகிறார்கள்; ஆனால் நான் நாம் செய்வதைப் போல யுகம் அமையும் என்று கொள்கி றேன். என்றும் உள்ளது ஒன்றுதான் என்ற உண்மை இன்று நமக்கு விளக்கமாகின்றது. நான் நம்பிக்கை யுடனும் பற்றின்றியும் இவ்வேலையை மேற்கொண் டேன். எனக்குப் பற்றிருந்தால் நான் முன்பே ஏக்க

மடைந்திருப்பேன்; நானும் அரசாங்கச் சட்டங்களை நம்பியவனுயிருப்பேன். இறைவனருளால் நான் அவ் விதம் இல்லை. நான் நிலம் கேட்கிறேன், பெறுகி றேன், அதைக் கொடுக்கிறேன்.'' என்று தம் மகிழ்ச்சி யையும் இறைவன் அருளையும் வெளியிட்டார்.

ஜெலான் ஜில்லாவிற்கு வந்தார். அங்கு மாங்கு ரோட் என்ற கிராமத்தார்கள் 101 ஏகரைக் கொடுத்தார் கள். அதைப் பெற்றுக்கொண்டு அடிகள் எல்லா நிலமும் கோபாலனது என்று சொன்னுர். அவ்வார்த்தை அக் கிராமத்தாரின் மனதில் பதிந்தது. அவர்கள் தலைவர் திவான் சத்ருக்ன சிங்கு சென்ற முப்பதாண்டுகளாக தேசத்திற்காக அரும்பாடு பட்டவர். அவர் நிலம் முழுவ தையும் அடிகளுக்குத் தானமாகத் தரப் போவதாகவும் அவர்களனைவரையும் அவ்விதமே செய்யவும் கோரினுர். அக்கிராமத்திலுள்ள 105 குடும்பத்தார்களில் 65 குடும் பங்கள் நிலம் பெற்றிருந்தன. நாற்பது நிலமில்லாதிருந் தன. ஒருவர் நீங்கலாக பிறரனைவரும் தங்கள் நிலங் களுக்கு தானபத்திரங்களை எழுதி அடிகளிடம் மேமீ 24-ம் தேதியன்று சமர்ப்பித்தார்கள். அடிகள் பெருமகிழ்ச்சி யுடன் அதை ஏற்றுக் கொண்டார். அடிகளே அக்கிராமம் சர்வோதய கிராமமாக வேண்டிய யோசனைகளைக் கூறிக் கொண்டிருக்கின்றுர். அது முதலாவது ஆதர்ச சர்வோதய கிராம ராஜ்யமாக அமையும் என்று நம்பு வோமாக!

ஹிந்தி மொழியில் ராமகாதையை எழுதியவர் துளசி தாசர். அவர் பிறந்த ஊராகிய பந்தாவில் அந்த ஜில் லாவின் தொண்டர்கள் 20,000 ஏகரை தானமாகக் கொடுத்து அணித்தே 80,000 வசூலித்துக் கொடுக்கவும் ஒப்புக் கொண்டார்கள். அந்நகரிலே பச்சமாரி சோஷ லிஸ்டு கன்வென்ஷனிலிருந்து திரும்பிய ஜயபிரகாசர் வந்து அடிகளைச் சந்தித்தார். அன்று மாலை அடிகள் பிரார்த்தனைக் கூட்டத்தில், ''1948 ஹூ ஜனவரி மீ 30-ம்

தேதிக்குப் பிறகு நம்மைத் தியாகத்திற்குத் தூண்டிய ஒளி நம்மைவிட்டு நல்லகாலமாகப் போய்விட்டது என்று கொள்பவருண்டு. ஆனால் பிரச்னைகளை அஹிம்சை முறையில் தீர்த்துக் கொள்ள முடியும் என்பது இப்பொழுது உணரப்படுகிறது. பூதான இயக்க ரூபமாக காந்தீயமும் சோஷலிஸமும் கூடி யமுனையும் கங்கையும் கூடி கங்கையாக ஓடுவதைப் போல இந்நாட்டின் நன்மையை ஆக்கவல்லன '' என்று ஜயபிரகாசரை அழைத்தார்.

அலஹாபாத்து ஜில்லாவில் நுழையும் அடிகளை புருஷோத்தம் தாஸ் டண்டன் அவர்கள் வரவேற்றார். '' இந்த தபஸ்வி விநோபா—தியாகமே உருவானவர்—ஆரம்பித்துள்ள இந்த இயக்கம் ஒரு புது யுகத்தை ஆக்க வல்லது. ஒரு புதுவகை இரப்பவராக இவர் வந்துள்ளார். இவரைச் சுற்றியுள்ள சூழ்நிலை புனிதம் நிறைந்ததாயும் புரட்சிகரமாயும் அமைந்துளது '' என்று புகழ்ந்தார். அன்று அடிகள், '' நான் தேனீயைப் போல யாருக்கும் நோவில்லாமல் தானம் கேட்கிறேன். ஒருவனுக்கு உண்மையாக நன்மையாவது பிறனுக்குத் தீயதாக இருக்க நியாயமில்லை. ஒருவனது நலம் பிறனுக்கும் நலமேயாக வேண்டும். நான் இவ்வளவு நிலத்தை மட்டும் பெற்றால் போதாது, இவ்வளவு இருதயங்களையும் பெற வேண்டும். நிலம் தானமாகக் கொடுப்பவன் தன் நிலத்தை மட்டுமல்லாது தன் இதயத்தையும் கொடுத்து இந்த அறவேள்வியில் சேருகிறான். இந்த வேலையை முடிக்கும் வரை நான் ஓய்வெடுத்துக் கொள்வதில்லை என்று துணிந்துவிட்டேன் ''. என்று தம் சாம்ய யோகத்தை விளக்கினார். ஜமீன்தார்களின் கூட்டத்தில் அந்த ஜில்லாவில் ஒரு இலட்சம் ஏகர் பெறவேண்டுமென்று சொன்னார். காசியில் மழைகாலத்தைக் கழிக்கத் தங்கினார். அங்கு கங்கையின் புண்யக் கரைகளில் மக்கள் கூச்சமில்லாமல் மலஜலம் கழிப்பதைக் கண்டு மிகவும்

வருத்த முற்றார். அது விஷயத்தை மக்களிடம் வாய் விட்டுச் சொல்லி தினம் பதினைந்து நிமிஷமாவது அத் தகைய சுத்தி வேலையை அனைவரும் மேற்கொள்ள வேண்டுமென்று சொன்னார்.

அடிகள் காசியிலிருக்கும்பொழுது அவர் ஆருயிர்த் தோழர் கிசோரலால் மஷ்ருவாலா காலமானார். "அவர் ஒருவரே முற்றிலும் பூதான வேலையை ஏற்றவர்; அவர் வர்தாவில் இருப்பதே எனக்கு பலம் அளிப்பதா யிருந்தது. அந்த பலத்தை நான் பெற்றே வருவேன். கீதையில் பணியின்மையில் பணியிருப்பது விளக்கப்படு கின்றது. அதற்கு கிசோரலால் அவர்களே உதாரணம். அவரை புத்த பகவான் வகையைச் சார்ந்தவராக நான் கொள்கிறேன்" என்று சொன்னார்.

அவர் பிறந்தநாளன்று ஐந்நூறு தொண்டர்கள் தரிசனம் பெற வந்தார்கள். "பண்டைய ரிஷிகளும் பக வத் கீதையும் மூன்று விஷயங்களைச் சொல்லுகின்றன: வேள்வி (யக்ஞம்), தானம் (கொடை), தவம் (தபஸ்). இவைகளில் நான் யஞ்யத்தையும் தானத்தையும் வற் புறுத்தினேன். ஆயின் நாம் தவத்தையும் வற்புறுத்தா விட்டால், தானமும் இராது, வேள்வியும் நடை பெறாது. ஆகையால் தொண்டர்கள் தவத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும். ஹநுமாருக்கு இராமன் பணி முடியும் வரை ஓய்வில்லை. இதைச் சிந்தித்து நானும் ஒரு முடி வுக்கு வந்தேன். நான் மேற்கொண்டுள்ள இப்பணி முடியும்வரை நான் என் ஆச்ரமத்திற்குத் திரும்புவதில்லை என்ற பிரதிக்ஞை செய்து கொண்டேன். ஆச்ரமம் தவம் நிறைந்த இடம். அங்கே பணவிடுதலைப் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. அந்த ஆச்ரமப்பற்றும் என்னைவிட்டுவிட வேண்டு மென்று தீர்மானித்து விட்டேன்.

"இந்தியப் பண்பாட்டை நாம் பாராட்டுவதும், சர்வோதய இலட்சியத்தைக் கொள்வதும் உண்மை

யாலுல் நாம் இந்த இயக்கத்தில் தீவிரமாக இறங்கிப் பாடுபடவேண்டும். அப்பொழுதே நாம் பிற நிர்மாணத் திட்டங்களைக் கொண்டு செலுத்தலாம். இல்லையேல் அவ் வேலைகள் தேய்ந்தழியும். அதனாலேதான் நான் ஆச்ர மத்தைவிட்டு வெளியேறிச் சுற்றி யலைகிறேன். காந்தி யடிகளின் சீடர்களாகத் தங்களைக் கருதுபவர்கள் நான் செய்தது சரியா என்று பார்க்க வேண்டும். நான் செய்தது சரியானால் என்னுடன் முற்றிலும் கூடியுழைக்க வேண்டும். முன்பெல்லாம் தங்கள் காரியங்களை விட்டு சத்தியாக்கிரக இயக்கத்தில் சேர அவர்கள் வந்ததைப் போன்று வீரரது உணர்ச்சியுடன் இவ்வேலையில் இறங்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்'' என்று முடித்தார்.

உத்தரப்பிரதேசத்தில் அல்மோரா ஜில்லாவைத் தவிர மற்ற ஜில்லாக்களில் அடிகள் சுற்றியிருக்கிறார். 257 இடங் களில் முகாம் செய்திருக்கிறார். 3750 மைல் அலைந்து 2,95,028 ஏகர் நிலம் தானமாகப் பெற்றிருக்கிறார். 231 கிணறுகள், ஒரு குழாய்க் கிணறு, 34 இணைமாடுகள், ஆறு வீடுகள், ஒரு பங்களா, ஒரு சத்திரம் இவைகளை தானமாகப் பெற்றிருக்கிறார். சிமிட்டும் விதையும் செங் கல்லும் கூட தானமாகப் பெற்றுள்ளார். 12,000 பேர்கள் தானபத்திரங்கள் கொடுத்துள்ளார்கள்.

# VI

## பீஹார் சுற்றுப்பிரயாணம்

உத்தரப்பிரதேசத்தைவிட்டு பீஹாரை அடிகள் அடைந்தார். கரமான்ஸா என்ற ஊரே அவர் சேர்ந்த முதலிடம். அங்கு அமோக வரவேற்பு அளிக்கப்பட்டது. அன்று, "இதுவரை நாம் பிறரதைப் பெறுவதில் பழகி வந்தோம். நாம் இப்பொழுது உங்களுக்கு கொடுப்பதும் வாழ்க்கைக்கு அவசியமென்பதைச் சொல்ல வந்துள்ளேன். தானமில்லாத போகம் ரோகத்திலேயே கொண்டுவிடும். அன்பின் அடிப்படையில் இம்மாறுதலைச் செய்விக்க வந்துள்ளேன்" என்று சொன்னார்.

பீஹார் மாகாணத்தில் நுழைந்தது முதலே பீஹார் நிலப்பிரச்னையைப் பற்றி அடிகள் மிகவும் சிந்தித்து வந்தார். ஆயின் ஆரம்பத்தில் அம்மாகாணத்தில் கிடைத்த ஆதரவு திருப்திகரமாக இல்லை. அவர் பாட்டுவில் நிலப்பிரச்னை தீர்ந்தாலொழிய தாம் அதைவிட்டுப் போவதில்லை என்று சங்கல்பித்தார்.

அக்டோபர் 25-ம்தேதியன்று அம்மாகாண காங்கிரஸ் கமிட்டியார் எல்லா காங்கிரஸ் காரர்களும் தங்கள் நிலத்தில் ஆறிலொருபங்கைக் கொடுக்கவேண்டு மென்று தீர்மானம் செய்தார்கள். காங்கிரஸ் கமிட்டி இயக்கத்தில் அக்கறை கொண்டது இப்பொழுதுதான். எல்லாக் காங்கிரஸ் நிர்வாகிகளும் இவ்வியக்கத்தில் முற்றிலும் ஈடுபட வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டது. ஜனக மகாராஜரும், புத்தரும் மகாவீரரும் வாழ்ந்த கயா ஜில்லாவில் ஒரு இலட்சம் ஏகர் வேண்டுமென்றார். கயாவில் பூதான இயக்கம் வலுவாக்கப்பட்டது. பால்மாவு ஜில்லாவில் ஒரு பெரிய ஜமீன்தார் இயக்கத்திற்கு தன் முழு உதவியையும் அளிக்க முன்வந்தார். டிஸம்பர் 3-ம்தேதி சிங்கபம் ஜில்லாவில் நுழைந்தார். ஏழு நாட்களில் நோயுற்றார். உடல் மெலிந்து விடவே நடக்கக் கூட

வில்லை. 13-ம்தேதி சாந்திலை யடைந்தார். அப்பொழுது மேலும் பிரயாணம் செய்வது சாத்தியமாகவில்லை. மார்ச்சு 7, 8, 9, தேதிகளில் சர்வோதய மகாநாடு கூடும் வரை அங்கேயே இருந்தார்.

## 1952 மே முதல் 1953 ஏப்ரல் 10உ வரை பெறப்பட்ட பூதானம்.

| | ஏக்கர் |
|---|---|
| 1952 ஏப்ரல் முடிய கிடைத்தது மொத்தம்... | 1,02,361 |
| மே ... | 75,155 |
| ஜூன் ... | 1,19,118 |
| ஜூலை ... | 47,854 |
| ஆகஸ்டு ... | 5,554 |
| செப்டம்பர் ... | 27,915 |
| அக்டோபர் ... | 6,980 |
| நவம்பர் ... | 37,721 |
| டிஸம்பர் ... | 40,761 |
| 1953 ஜனவரி ... | 43,265 |
| பிப்ரவரி ... | 1,76,569 |
| மார்ச்சு ... | 4,70,103 |
| மொத்தம் | 11,53,356 |

முதலில் பீஹாருக்கு நான்கு இலட்சமாகக் குறித்திருந்த பங்கை விநோபாவடிகள் முப்பத்திரண்டு இலட்சமாக்கிவிட்டார். பீஹார் மாகாணத்தின் வேலை இயக்கத்தை நிலை நிறுத்துவதாக மாறிவிட்டது. ஜெய பிரகாசரும் பிரஜா கட்சியாரும் பூர்ண ஆதரவு அளித்தார்கள். ராம்காட் இராஜா ஒரு இலட்சம் ஏகர் தானம் கொடுத்தார். பிற ஜமீன்தார்களையும் பூதானம் செய்யத் தாம் வற்புறுத்துவதாகச் சொன்னார்.

சாந்திலில் திரேந்திர மஜூம்தார் தலைமையில் மகாநாடு கூடிற்று. இருபத்தைந்து இலட்சம் ஏக்கர்

வசூலிப்பதுடன், சுரண்டலில்லாத சமத்துவம் வாய்ந்த சமுதாயத்தை நிறுவுவதாகவும் தீர்மானமாயிற்று. மகா நாட்டில் ஜெயபிரகாசர், பொருளாதார சமூக அரசியல் புரட்சியாக பூதான இயக்கம் வளர்ந்துவிடுமென்ற தம் நம்பிக்கையையும், தங்கள் தங்கள் அரசியல் பற்றையும் வேலையையும் விட்டு ஒரு வருஷகாலமாவது எல்லா அரசியல் வாதிகளும் இயக்கத்தில் வேலை செய்யவேண்டு மென்றும் கூறினார்.

அடிகளது சொற்பொழிவு ஒளி வீசுவதாயிருந்தது. அரசாங்கத்தின் தண்ட சக்தியல்லாத மக்களின் லோக சக்தியை வளர்க்கவேண்டு மென்று வற்புறுத்தினார். அமைதியாக மக்களை நம் கொள்கைகளை ஏற்கச் செய்ய வேண்டுமென்றும், அதிகாரக் கட்டுப்பாடின்றியே மக்கள் தம்தம் வேலைகளைச் செய்யவேண்டு மென்றும் சொன்னார். அதிகாரமும் ஆதிக்கமும் யாரிடமும் திரண்டு நிற்கலாகாது என்பது அடிகளது கொள்கை. அவர் கிராமங்களுக்கு பூர்ண சுதந்திரம் வேண்டி னார். தம் இலட்சியத்தை அடைய, (1) நிர்மாண ஊழியர்கள் ஒன்றுகத் திரட்டப்படல், (2) 1957-க்குள் ஐந்து கோடி ஏகர் நிலம் தானமாகப் பெறுதல், (3) சம்பத்து தான யக்ஞம், (4) நூல் சிட்டக் காணிக்கை. என்ற அம்சங்களை விவரித்தார். மேனாட்டு ஜனநாயக முறையை ஏற்கும்பொழுது அதன் தீய பகுதிகளை நாம் விலக்க வேண்டியதின் அவசியத்தைக் குறிப்பிட் டார். சாந்தில் மகாநாட்டின் முடிவுரையாக, "ஒரு வருஷ காலத்திற்கு உங்கள் பொழுதையும் ஆக்கத்தை யும் இந்தப் பூதான வேலைக்குக் கொடுக்கவேண்டும். இதையும் இறைவனுக்கு அர்ப்பணமாக நீங்கள் செய்ய வேண்டும். நான் சொல்லுவது புதிதன்று. பக்தி முழு சிரத்தையையும் எதிர் பார்ப்பது. நாம் அன்பையும் ஒற்றுமையையும் சமுதாயத்தில் பரப்பவிரும்புகின் ளோம். இவ்வளவு பெரிய காரியத்தை ஏற்றுக்கொள்ளும்

பொழுது மற்ற சில்லரை வேலைகளை நாம் விடவேண்டியதுதான்" என்று உருக்கமாகப் பேசினுர்.

ராங்கா ராஜா ஒரு தொண்டரிடம் 2500 ஏகரும், மற்ருெருவரிடம் 11,000 ஏகரும் தானமாகக் கொடுத்தார். அடிகள் ஏன் இந்த வித்தியாசம் என்று கேட்டதற்கு இராஜா, அவரவர்கள் கேட்டதை அவரவர்களுக்குக் கொடுத்தேன் என்று பதில் சொன்னுர். அடிகள் உடனே எனக்கு எவ்வளவு கொடுக்கப் போகிறீர் என்று கேட்டார். இராஜா அடிகள் கேட்பதைக் கொடுப்பதாகச் சொன்னுர். அடிகள் அவரிடமுள்ள நிலம் எவ்வளவு என்று விசாரித்தார். ஜமீன் நிலம் ஒரு இலட்சம் ஏகர் என்றும், சொந்த நிலம் பத்தாயிரம் ஏகர் என்றும் அதில் ஏற்கனவே குடிகளுக்கு மூவ்வாயிரம் கொடுக்கப்பட்டிருப்பதாயும் சொன்னுர். அடிகள், "உம் பொறுப்பையும் நாமே கவனிக்க வேண்டுவதாகிறது. நான் சாதாரணமாக ஆறிலொரு பங்கு கேட்கிறேன். ஆகையால் உங்கள் ஜமீன் நிலம் இலட்சத்தையும் சொந்த நிலத்தில் ஆறிலொரு பங்கையும் கொடுங்கள்" என்ருர். இராஜா சம்மதித்தார். அடிகள் அதைப் பூர்ண தானமாக ஏற்றுக் கொண்டார்.

ஜூன் பதினுறன்று விஷ்ணுபூரை அடைந்ததும் சில மண்வெட்டிகளைக் கொண்டு வரச் சொன்னுர். அரை மைல் நடந்து சென்று பதினேழு நிமிஷம் மண் வெட்டியைக் கொண்டு மண்ணை வெட்டினுர். அவ்விதம் ஆரம்பமாயது சிரமதானம்—பாட்டளிப்பு. ஆகஸ்டு ஒன்பதாம் தேதி ஹூலிலிபாக் என்ற இடத்தில், "நீங்கள் குறுகிய நோக்கை விடுங்கள். நிலத்தைத் துண்டாடுவது என் வேலை யல்ல. பிரிந்து நிற்கும் இதயங்களை ஒன்று படுத்தவே நான் வந்துள்ளேன். நாம் துணிகளைத் தெய்க்கிறேம். தையல்காரன் துணியை முதலில் கத்தரித்துப் பிறகு உடையைத் தயாரிக்கிருன். நம் நாடு கிழிந்த கந்தையாகிவிட்டது. நிலம் துண்டுகளாகப்

பிளக்கப்பட்டுள்ளது. நிலமற்றவர்களுக்கு விநியோகித்தல் அவசியமாயின் நிலத்தைத் துண்டாடவும் வேண்டியதுதான். ஆயின் இது நாட்டை ஒன்றுபடுத்தவே" என்று தம் வேலையை விளக்கினார்.

வைத்தியநாதர் ஆலயத்தில் நடந்த சம்பவத்திற்கு நாடே வெட்கப்பட்டுத் தலை குனிந்தது. அடிகள் அதை மகாதேவரின் பிரசாதமாகவே கொண்டார். தர்பாங்கா மகாராஜா ஒரு இலட்சத்துப் பதினெட்டாயிரம் ஏகருக்கு தான பத்திரத்தை சமர்ப்பித்தார். தாம் மேலும் கொடுப்பதாகவும் பிறரையும் கொடுக்கச் சொல்லுவதாகவும் வாக்களித்தார். நிலமற்றவர்களை ஒன்றுபட்டு நிற்கவும், தீய பழக்கங்களினின்று தம்மை விடுவித்துக் கொள்ளவும், அமைதியாக நிலக்காரர்களிட மிருந்து நிலம் பெறவும் கேட்டுக் கொண்டார்.

பூதானத் தொண்டர்களுக்கு விருப்பு வெறுப்பின்றி நிலக்காரர்களை அணுகவும் எல்லோரையும் நல்லவரென்று கொண்டு செல்லவும், பதட்டமாகவோ பொறுமையின்றியோ யாதொன்றும் சொல்லாதிருக்கவும் தொண்டாற்றும் முறைகளைக் கைக்கொள்ளவும் சொன்னார். உயர்ந்தவர் போலன்று, உடன் பிறந்தார்போன்றும் உற்ருர் போன்றும் நிலக்கார்களை அணுகி அன்பின் போதத்தை அவர்களுக்கு விளக்கி நிலம் பெற வேண்டுமென்பதை வற்புறுத்தினார்.

கிஸான்கஞ்சு என்ற இடத்தில், "இன்றுள்ள வறுமையும் தொல்லையும் மனிதனாலாக்கப்பட்டவை. அவைகளை மனிதரே போக்கிவிடலாம். மேல்பூச்சு வேலைகள் பயனற்றவை. அடிப்படையான மாறுதலை உண்டாக்க வேண்டும். புரட்சியென்ருல் மனித சுபாவத்திற்கு மாருகச் செல்வதல்ல.

"நாம் இயற்கையை எதிர்த்து எதையும் செய்ய விரும்பவில்லை. நம் வேலை மனிதனின் சுபாவத்தின் அடிப்படையில் அமைவது. நீர்ப்போக்கை ஒட்டியன்றி

எதிர்த்துச் செல்வதல்ல நம் வழி. நம் உயர்ந்த தன்மை களைப் பயன்படுத்துவதே அடிப்படை. உலகநாதனின் விருப்பப்படியே நாம் செல்பவர்களாகின்றோம். இதை விடச் சுலபமான வேலை எது?'' என்று கேட்டார்.

பாட்னுவில் பேசுகையில் இறைவனின் திருவிளை யாடலை விளக்க, ''உலகம் முழுதிலுமாக நிலப் பிரச்னை எப்படியோ ஒரு வழியில் தீர்க்கப்பட்டு விடும். எனக்கு எவ்வளவு நிலம் கிடைக்கிறது என்பதைப் பற்றி அக்கறையில்லை. மக்களின் மனதில் எவ்வளவு நல்ல சிந்தனைகள் படிகின்றன என்பதே என் கவலை. ஐந்தாறு மாதங்களுக்கு முன்பு நம் பிரதம மந்திரி இந்தியா வுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே நல்லுறவு ஏற் படுவதாகச் சொன்னர். ஆனல் இப்பொழுது அவரே நிலைமை மாறிவருவதாக உணர்கிறர். இதற்கு அர்த்த மென்ன? மனிதன் அறிவையொட்டி நிகழ்ச்சிகள் நடை பெறுவதில்லை, இறைவனின் திருவுள்ளப்படியே நடை பெறுகின்றன. பூகம்பம், மகாயுத்தம் இவையெல்லாம் இயற்கையின் உற்பத்தி சக்தியின் வெளித் தோற்றங்கள் தாம். அவைகள் மனிதன் விருப்பப்படி நடப்பதில்லை. மனித அறிவு பயனற்றதாக, மனிதன் பொம்மை போன்று ஆட்டிவைக்கப்படுகிறன். ஆயின் சிருஷ்டி சென்றுகொண்டே இருக்கிறது.

''விஞ்ஞானம் வேகத்தைக் கொடுக்கும். விஞ்ஞானம் ஒன்றை ஊக்கும் வலியற்றது. ஆத்ம ஞானமே ஊக்கும் திறன் பெற்றது. மோட்டார் வண்டியிலோ கப்பலிலோ பல விசைக் கருவிகள் உள்ளன. ஞானமும் விஞ்ஞான மும் இணைந்து சென்றல் மனிதன் நல்ல வழியில் செல் வான், சமுதாய முறையும் சீர்பெறும்'' என்று தெளிவு படுத்தினர். அறிவு மட்டும் போதியதல்ல, அடக்கமும் வேண்டும்.

பாட்னு, கயா ஜில்லாக்களிலேயே மாறி மாறிச் சுற் றிக்கொண்டு வந்தார். 1954 ஜனவரி 30-ம் தேதியன்று

கயா ஜில்லாவில் நுழைந்து அந்த ஜில்லாவின் நிலப் பிரச்னேயைத் தீர்த்தாலன்றி தாம் அதை விட்டு நகருவதில்லை என்னும் சங்கற்பம் செய்து கொண்டார். காந்தியடிகளின் ஆருவது சிராத்த நாளன்று மிகவும் உருக்கமாகப் பேசினர்: "நான் ஒன்றும் கூட்டிச் சொல்வதற்கில்லை. சொற்களால் விளக்குவதும் எளிதல்ல. இந்த ஜில்லாவில் வசூலிக்கவேண்டிய நிலத்தைப் பெற்ருலன்றி வெளியேறுவதில்லை என்னும் பிரதிக்ஞை செய்து கொள்கிறேன். இவ்வியக்கத்தில் அக்கறை கொள்கிறவர்கள் இந்த ஜில்லாவைப் பார்த்துக் கொண்டிருக்கிருர்கள். இந்தப் பொறுப்பைத் தொண்டர்கள் உணர்தல் வேண்டும். அவர்கள் முனைந்தால் இது ஒரு மாத வேலை. நான் கேலியாக இங்கு இவ் வேலை செய்துகொண்டே இறப்பதில் பழுதில்லை என்று சொன்னேன். இங்கு என் ஈமக் கிரியைகள் நடைபெறுவது சிறந்தது. எனக்கு சிராத்தம், என் சங்கல்பம் நிறைவேறுவதுதான். எனக்கு அமைதியென்றும், கலவரம் என்றும் வேறுபாடுகள் இல்லை. எனக்கு எப்பொழுதும் எங்கும் அமைதிதான். இந்த என்னுடைய வேலை நடைபெறட்டும், நடைபெருது நின்றுபோகட்டும் —இரண்டும் எனக்கு ஒன்றே. இப்பெருவேள்வியில் அனைவரும் பாடுபட்டேயாகவேண்டும். இந்த வேள்விக்கு நெய் வேண்டியதில்லை, நம்முடைய பற்று, ஆசை இவைகளேயே நாம் அவிசாகச் சொரிய வேண்டும். நான் அன்பையே போதிக்கிறேன். இன்று புனித நாள். ஏகாதசி சந்திரன் ஆகாயத்தில் பிரகாசிக்கிருன். அவனை சாட்சியாக வைத்து நான் சொல்லுகிறேன். இந்த கிராமத்தில் ஆறிலொரு பங்கு கொடுக்காத துரதிருஷ்டசாலி யாரும் இருக்கக்கூடாது" என்று தம் சொற்பொழிவை முடித்தார். கயா ஜில்லாவில் தீவிர வேலை மேற்கொள்ளப் பட்டது. அவ்வாண்டு சர்வோதய மகாநாட்டையும் புத்த கயாவிலேயே நடத்த முடிவு செய்யப்படவே, பூதானச்

சேகரிப்பு, மகாநாட்டு ஏற்பாடுகள் இவையிரண்டும் ஜில்லாவாசிகளின் முக்கிய வேலையாயின. மகாநாடு ஏப்ரல் மாதம் 18-ம் தேதி கூடிற்று. நாட்டின் மூலை முடுக்குகளிலிருந்தெல்லாம் பூதானத் தொண்டர்கள் குழுமியிருந்தார்கள். பிரதம மந்திரி பண்டித ஜவாஹரும், ராஷ்டிரபதி ராஜன் பாபுவும் மகாநாட்டிற்கு விஜயம் செய்திருந்தார்கள். நாட்டில் முப்பத்து நான்கு இலட்சம் ஏகர்களுக்குமேல் பூதானம் சேகரிக்கப்பட்டு விட்டது. பீஹாரிலே அதன் கணக்குப்படி சேர வேண்டியதில் பெரும்பகுதி வசூலாகிவிட்டது.

இன்று பூதான இயக்கத்தை அறியாதவரில்லை; அதை ஆதரிக்காதவர்களு மில்லையென்றே சொல்லலாம். எதிர்ப்பு என்பதோ சிறிதுமில்லை; ஆயின் இந்த தான இயக்கம் எதைச் சாதித்துவிடப் போகிறதென்று கேட்பவர் இன்றும் சிலர் உள்ளார்கள். பூதானத் தொண்டர்களின் எண்ணிக்கை விரிந்துகொண்டே போகிறது. ஆடவரும் பெண்டிரும், குழந்தைகளும் கூட தங்களால் ஆவதைச் செய்ய முன்வருகிருர்கள். மாகாணங்கள்தோறும் தீவிர வேலை நடைபெற்று வருகிறது. ஜில்லா, தாலுக்கா, கிராம பூதானத் தொண்டர் குழுக்கள் நிறுவப்பட்டு வருகின்றன. நிலப் பற்று மிகுந்த இந்நாட்டில் பரம்பரையாகத் தமதென வந்த நிலத்தின் பகுதிகளை, சில செண்டு பரப்புள்ளவை களையும் இலட்சக்கணக்கில் ஏகர் பரப்புள்ளவைகளையும் தானம் கொடுத்தல் சகஜமாகிவிட்டது. விவசாயத்தைத் தம் தொழிலாகக் கொள்ளாதவர்கள் தம்முடைய முழு நிலத்தையும் கொடுத்துள்ளார்கள். அதேபோன்று நில தானம் வேண்டாமென்று சொன்ன தொழிலாளரும் உள்ளார்கள்.

தானம் கேட்பதும் பெறுவதும் இலேசான காரிய மல்ல வென்பது உண்மை. ஆயின் சாதாரணமாக நம்ப முடியாத வழிகளில் நிலம் தானமாகக் கிடைத்திருப்பது,

இவ்வியக்கம் மனிதத் தன்மையின் அடிப்படையில் நிற்பதை விளக்குவதாக உள்ளது. ஆடவரினும் பெண்டிர் எளிதாக சகோதரி உறவுடன் தானங்கள் பெற்றுள்ளார்கள். பரம லோபிகளும் மனங்கசிந்து தானங்கள் செய்துள்ளார்கள்.

ஒரு சகோதரி மிகவும் கண்டிப்பான ஒரு ஜமீன் தாரை அணுகினர். அவரைப் பிற ஆடவர் நெருங்க தைரியம் கொள்ளவில்லை. கதவைத் திறவாமலேயே யாரென்று கேட்கப்பட்டவுடன் உடன்பிறந்த சகோதரி சகோதரனைப் பார்க்க வந்திருப்பதாக அவர் சொன்னர். அந்த ஜமீன்தார் கதவைத் திறந்து அவரை உள்ளே அழைத்து, தேயிலைப் பானம் கொடுக்க வந்தார். அந்தச் சகோதரி தம் காரியத்தைச் சொன்னர். ஆறிலொரு பங்கைக் கொடுக்க வேண்டுமென்றும் கேட்டார். சரி என்று அவர் உடனே கொடுத்துவிட்டார். சிற்றுண்டியும் வழங்கினர். சகோதரி அவரை மற்ருெரு உபகாரமும் செய்யக் கோரினர். அவரைத் தம்முடன் பிறரிடம் வர அழைத்தார். தம் கெட்டபெயர் தொண்டரின் காரியத் தைக் கெடுத்துவிடுமேயென்று ஜமீன்தார் விடையளித் தார். சகோதரி மன்ருடியவுடன் அவரும் பிறரிடம் சென்ருர். ஏராளமாக நிலமும் பெறப்பட்டது.

ஓர் ஊரில் வக்கீல் நிலக்காரரர் ஒருவர் இருந்தார். அவருக்கு ஆறிலொன்றைக் கொடுக்க விருப்பமில்லை. அவர் மனைவி அவருடன், “கங்கா நதியே நம் வீட்டிற்கு வரும்பொழுதும் நாம் அதில் ஸ்நானம் செய்யாமலா இருப்பது? உங்களுக்கு நிலவழக்குகள் தொல்லைதான். இவர் கேட்பதைக் கொடுத்துவிட்டால்தான் என்ன?” என்று மன்ருடவும் அவர் அப்படியே கொடுத்துவிட்டார்.

ஓர் ஊரில் கூட்டத்திற்குப் பிறகு ஓர் அம்மாள் எழுந்து தம் இரண்டு ஏகர் நிலத்தையும் தானம் கொடுப்பதாகச் சொன்னர். தொண்டர் உள்ளதையெல் லாம் கொடுத்துவிட்டு நிலமற்றவராவது சரியல்ல

வென்று சொல்ல, தமக்கு அதைப்பற்றி அக்கறை யில்லை யென்றும் பால், தயிர் விற்று தாம் பிழைத்துக் கொள்வதாகவும் இறைவன் தம்மைக் காப்பாற்றுவா ரென்றும் சொல்லி தம் தானத்தை வற்புறுத்தினர்.

ஓர் ஊரில் பரமலோபி என்று பெயர் பெற்ற ஒருவ ரும் பூதானக் கூட்டத்திற்கு வந்திருந்தார். சொற்பொழி வுக்குப் பிறகு எவரும் எழுந்து தானம் எதையும் அறிவிக்கவில்லை. இறுதியில் ஒரு வாணிபர் எழுந்து தம் தானத்தை வெளியிட்டார். அவர் எண்ணெய்ச் செலவுக்கு பயந்து தம் மனைவியின் தலையை முண்டனம் செய்தவ ரென்று ஊரார் சொல்லுவார்கள். ஒரு வாழை இலையை கடவுள் பூஜைக் கென்றாலும் கொடாதவர். அவர் தானம் கொடுப்பதைப் பார்த்த ஒருவர், அந்த லோபி கொடுக்கும்பொழுது எவர்தான் கொடாமலிருக்க முடியு மென்று சொன்னர். அனைவரும் தானபத்திரங்கள் வழங்கினர்கள்.

இரண்டு வருஷங்களுக்கு மேலாக பீஹார்ரில் அடிகள் சுற்றுவதும், இயக்கம் அங்கு தீவிரமாக நடப்பதும் எவ்வளவோ புதிய நியாயங்களையும் உணர்ச்சிகளையும் தோற்றுவித்திருக்கின்றன. நிலப்பித்து அகன்று நிலம் பிழைப்பிற்குச் சாதனம் என்ற எண்ணம் உண்டாகி வருகிறது. சட்டங்களும் திட்டங்களும் தீர்க்க முடி யாத நிலப் பிரச்னையைத் தீர்க்கவல்லது இது என் பது அறியப்படுகிறது. எதற்கும் மேலாக, அன்பும் அறனுமே மனித சமுதாயத்தை உய்விக்கக் கூடியவை என்பது உணரப்படுகிறது.

அரசியல் கட்சிகள் பலவும் படிப்படியாக இவ்வியக் கத்தின் தத்துவத்தை அறியவும் இதில் ஈடுபடவும் செய் கின்றன. பிரஜா சோஷலிஸ்டு கட்சியார் முதன் முதலாக இவ்வியக்கத்தில் அக்கறை கொண்டார்கள். காங்கிரஸ் கட்சியும் இன்று இவ்வியக்கத்தில் ஈடுபடு கிறது. அரசியல் வாதிகள் அரசியலுக்கு ஒரு தெய்வீ

கத்தை ஏற்றுகின்றவர்களாயினும், அரசியலின் இடையீடின்றி பெரிய பொருளாதார-சமுதாயச் சீரமைப்பு கூடுமென்பதை வரவர அறிந்து வருகிறார்கள். ஆசார்ய கிருபளானி இவ்வியக்கத்தை ஆசீர்வதித்துள்ளார். பண்டித நேரு அவர்களும் இயக்கத்தை ஆமோதிக்கிறார். இயக்கத்தை முதலில் எதிர்த்த கம்யூனிஸ்டுகள் இதில் நம்பிக்கையுடன் கலந்து கொள்ளாவிட்டாலும் எதிர்ப்பதை நிறுத்திக் கொண்டுள்ளார்கள். இன்று அரசியல் தீவிரவாதிகளும் பூதான இயக்கத்தில் கலந்து கொள்வதைப் பெருமையாகக் கொள்கிறார்கள். ஸ்ரீ ஜயப்பிரகாசர் போன்றோர் அரசியல் வீண்பாட்டினும் இவ்வுண்மைத் தொண்டே நாட்டிற்கு நன்மை பயப்பதெனக் கொண்டு அரசியலைத் துறந்து விட்டார்கள். தங்கள் ஆயுள் முழுவதையும் இவ்வரும் பணிக்கு அர்ப்பணித்த தொண்டர்களின் எண்ணிக்கை தினமும் பெருகிவருகிறது.

## VII
## பீஹாருக்குப் பிறகு

பெருவாரியாக பீஹாரில் தம் வேலையை முடித்துக் கொண்டு, இனி இயக்கம் தாமில்லாமலே இனிது முடிவுறும் என்ற நம்பிக்கையுடன் அடிகள் வெளிக் கிளம்பினார். அவர் கணக்குப்படி வசூலாக வேண்டியதில் அரைக்கால் பங்கே பாக்கி நின்றது. இருபத்தேழு மாதங்கள் ஒரு மாகாணத்தில் தங்க அடிகளுக்குப் பொழுதில்லை என்பதை உணர்ந்த தொண்டர்கள் வேலையை திட்டப்படி முடிப்பதாக அடிகளுக்கு உறுதி கூறினார்கள். வங்காளம் வழியாக அடிகள் ஒரிஸ்ஸாவையடைய யாத்திரை திட்டம் போடப்பட்டது. பீஹார் தொண்டர்களைவிட்டுப் பிரியும்பொழுது அடிகளின் மனோ நிலையை அவர் சொற்பொழிவு விளக்குகிறது :

"இருபத்தேழு மாதகாலம் உங்களுடன் வசிக்கவும் பேசவும் எனக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. இந்த இறுதிப் பிரசங்கம் மௌனமாக அமைவதே சிறந்தது. தங்களுடன் இருந்த காலத்தில் மனோ வாக்கு காயங் களால் நான் செய்துள்ள பிழைகளை மன்னிக்கும்படி கேட்டுக்கொள்வது என் கடமை. நான் பீஹாரில் சுற் றும்பொழுது தெய்வீக அன்பைப் பெற்று அநுபவித் தேன். மக்கள் நேர்மையானவர்கள், பெருந்தன்மை யுள்ளவர்கள், மனமார ஈகின்றவர்கள். பிறவிடங்களை விட மாகாண உணர்ச்சி பீஹார் மக்களிடம் குறை வாகவே உள்ளது. எனக்கு அவர்கள் அன்பைக் கொடுத் தார்கள், அன்பில் மிதந்துகொண்டு நான் இன்று விடை பெறுகிறேன். இந்த அன்பை நான் என்றும் மறக்க மாட்டேன். நான் சந்தர்ப்பங்களைப் பாராமலும் பலரை விரட்டியுள்ளேன்; இருந்தாலும் அவர்கள் அதை இனிமையாகவே ஏற்றுக் கொண்டுள்ளார்கள். இந்தப் பெருந்தன்மை மறக்கற் பாலதன்று. பீஹாரில் சுற்றிய தால் அதிக வலிவு பெற்றவனாக உணர்கிறேன்.

"பீஹாரிடம் எனக்கு நம்பிக்கையும், ஆசையும் உண்டு. இவ்வியக்கத்தில் தீட்சை பூண்டுள்ள தொண் டர்கள் பூதான இயக்கத்தின் மூலம் கிராமத் தொழில்களை நிறுவி அமைதியான புரட்சியைச் செய்து முடிப்பார்கள் என்று நம்புகிறேன். இந்த மண்ணிலே கௌதம புத்தர் அவதரித்தார்; மஹாவீரரின் அவதாரமும் இங்கேயே. இங்கே ஜனக மகாராஜன் கர்மயோகத்தின் நிறைவை விளக்கி உள்ளார். காந்தியடிகளின் அன்பைப் பெற்றுள்ளது இது; அவரது சோதனைக் களமும் இதுவே. உயர்ந்தெழும் இமயத்திற்கும் கங்கைப் பேரியாற்றுக்கு மிடையே மக்கள் வாழ்க்கையை நடத்துகின்றனர்கள். இப் புண்ணிய பூமியில் இவ்வளவு காலம் சுற்றும் பாக்கியத்தி னால் என்னை அதிர்ஷ்டசாலியாகக் கொள்கிறேன். இங்கு ஒவ்வொரு அணுவிலும் பரமேச்வரரின் தரிசனம்

பெற்றேன். பார்த்தவர்களிடமெல்லாம் இராமன் அவதரித்திருப்பதைக் காண முயன்றேன்.

"இந்தக் கால்நடை யாத்திரையில் நாம் ஒரு கஷ்டத்தையும் அடையவில்லை. ஆனந்தம், அளவற்ற அமைதி இவைகளையே பெற்ருேம். இறைவனுடைய அருள் பூர்ணமாக நமக்குக் கிடைத்துள்ளது என்ற நம்பிக்கையுடனேயே தினந்தோறும் உறங்கச் சென்ருேம். நாம் ஏதோ கஷ்டங்களை ஏற்ருேம் என்ற எண்ணத்தை உங்கள் மனதினின்று அகற்றிவிடுங்கள். ஆகாயத்தைப் போன்று விரிந்துள்ள பாரத இருதயத்தை நாம் அநுபவித்தோம். நான் உங்களை பக்திபாவத்துடன் வணங்குகின்றேன்" என்று விடை பெற்ருர். இதுவே அடிகளின் நிறைவை விளக்கப் போதியது. உபசார வார்த்தைகளன்று அவருடையவை. ஆன்மீகத் தொடர்புள்ளவை அவை.

வங்காளத்தின் வளம் அதன் தலைநகராகிய கல்கத்தாவில் அமைவதை அடிகள் செவ்வனே அறிந்திருந்தார். அவர் கல்கத்தாவுக்குச் செல்லாமல், ஒருமாத காலத்திற்குள்ளாக அம்மாகாணத்தைக் கடக்க திட்டமிட்டார். அங்கு தானமாக அதிக பூமி சேகரிக்கப்படாவிட்டாலும், அறிவு நிறைந்த வங்காளிகள், இயக்கத்தை அறியவும் அதற்கு முழு ஆதரவு அளிக்கவும் செய்தார்கள். தலைவர் பீ. ஸி. கோஷ் தம் கல்கத்தா குடித்தனத்தைக் கலைத்துவிட்டு தம் கிராமத்தில் குடியேறி சர்வோதய சமுதாயத்தை ஆக்கும் பணியை ஏற்றுக் கொள்ளத் தீர்மானித்தார். பக்தி நிறைந்த வங்காளிகள் அடிகளின் இயக்கத்தின் அடிப்படைகளை தெய்வீகம் நிறைந்ததென ஏற்றுக்கொண்டார்கள். ஹிம்ஸைப் புரட்சிகளில் நாட்டம் கொள்ளும் வங்காளிகள் அன்பின் அடிப்படையிலமைந்த இவ்வியக்கத்தைப் பற்றிக் கொண்டார்கள். நாட்டின் எழுச்சிக்கு வங்காளிகள் அரிய தொண்டு ஆற்றியவர்கள். அவர்கள் இப்புது எழுச்சி

யின் தத்துவத்தையும் வன்மையையும் முழுதும் அறிந்து கொண்டதை அடிகள் மிகவும் பாராட்டி ஒரிஸ்ஸா மாகாணத்திற்கு விரைந்தார்.

ஒரிஸ்ஸாவின் முதன்மந்திரி பழுத்த காந்தீயவாதி, மிகச்சிறந்த நிர்மாணத்தொண்டர், பதவிக்காக வன்றி தொண்டாற்றவே பதவி ஏற்றவர். பிற பகுதிகளில் எவ்வளவு பதவி மோகம்! அரசியல் சதுரங்கமாகவும் சிக்கலாகவும் புரட்சியாகவும் மக்களைத் திகைக்க வைக்க, தொண்டாற்ற வென்றே கட்டாயமாகப் பதவியிலமர்த்தப்பட்டார் முதன் மந்திரி ஸ்ரீ நவகிருஷ்ண சௌத்ரி. ஒரிஸ்ஸா பிற்பட்ட மாகாணம் என்று சொல்லப்படுவதுண்டு. இவ்வளவு தூய்மையும் நேர்மையும் முன்னேற்றத்தின் அறிகுறி அல்ல போலும்! ஒரிஸ்ஸா மகாணத்தில் நுழைந்ததுமே அடிகளுக்கு அமோக வரவேற்பு, அமோக ஆதரவு. அடிகளின் கற்பனைக்கும் அதிகமாக இயக்கத்தை வளர்க்க மக்கள் உறுதி கொண்டு நின்றார்கள். 1955-ம் வருஷ சர்வோதய சம்மேளனம் பூரியில் கூட்டப்பட்டது.

அடிகள் பூரியில் இருக்கும் சமயம் ஒரு சம்பவம் நிகழ்ந்தது. பீஹார் வைத்தியநாதர் கோவில் சம்பவம் போன்றில்லாவிட்டாலும் அது அடிகளுக்கு மிகுந்த மன வேதனை அளித்தது; அவரை இந்து சமயாசாரங்களை ஆழ்ந்து ஆராயத்தூண்டிற்று. அடிகள் ஜெகந்நாதர் ஆலயத்திற்கு தரிசனத்திற்குச் சென்றார். அவருடன் ஒரு பிரஞ்சு மாதும் பக்திபூர்வமாக வந்திருந்தார். பூசாரிகள் பிரஞ்சு மாதை கோயிலுள் விட மறுத்தார்கள். அடிகள் பக்தியொடு வரும்* அம்மாதை உள்ளே விடாததினால் தாமும் உள்ளே போவதில்லையெனத் திரும்பிவிட்டார். அடிகள் இந்து சமயம் செழித்தோங்காது, அதன் சிறப்பு விரியாது, இத்தகைய குறுகிய மனப்பான்மை தடை செய்கின்றதென்பதை மக்களுக்கு விளக்கினார். தாமும் சிந்தனையில் ஆழ்ந்தார்.

பூரியில் சம்மேளனம் இனிது நடந்தேறியது. இயக்கத்தின் வளர்ச்சியையும் மேலும் செய்யப்பட வேண்டுவதையும் விளக்கி, உடனடியாகத் தொண்டர்கள் அனைவரும் தம்தம் அலுவல்களைக் கட்டி வைத்து பூதான வேலையில் முழுதும் ஈடுபடவேண்டுமென்று வேண்டிக் கொண்டார். 1957-ம் ஆண்டு இந்திய சரித்திரத்தில் ஒரு சிறந்த வருஷமாகுமாறு அதற்குள் ஐந்து கோடி ஏகர் நிலம் வசூலித்துவிட வேண்டுமென்று வற்புறுத்தினர். 57-ம் வருஷம் அரிய நிகழ்ச்சிகள் நிகழும் ஆண்டு. இந்திய சமுதாயம் பூதான வேலையை முடித்து சர்வோதய சமுதாயத்தைத் தொடங்க அவ்வாண்டே சிறந்தது. ஆகையால் தானம் பெறுதலும் பெற்ற நிலத்தை விநியோகித்தலும் அந்த ஆண்டிற்குள் முடிந்துவிட வேண்டுமென்று சொன்னர். 57-ம் ஆண்டிற்குப் பிறகு நிலப் பிரச்னையென்பதிருக்கக் கூடாதென்பது அடிகளின் திட்டம். குழுமியிருந்த தொண்டர்களும் தலைவர்களும் அடிகளின் காலவரையறையையும் செயலட்டவணையையும் ஏற்றுக் கொண்டார்கள்.

விநோபாவடிகள் சம்மேளனம் முடிந்ததும் கோராபட் ஜில்லாவை நோக்கி நடந்தார். ஒரிஸ்ஸா சட்ட சபை அங்கத்தினர்களைக் கூட்டி அவர்களுக்கு அரியதொரு பிரசங்கம் செய்தார். வழியில் அடிகளைச் சந்திக்க என்றே அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் கூட்டம் பெர்ஹாம்பூரில் கூட்டப்பட்டது. தமக்கும் காங்கிரஸுக்குமுள்ள தொடர்பை விளக்கி, நாட்டின் விடுதலையைப் பெற்றுக் கொடுத்த காங்கிரஸ் தமக்கு வேண்டிய உதவியைச் செய்யாது விடாது என்ற நம்பிக்கையை வெளியிட்டார். சர்வோதய சமுதாயத்தை ஆக்குவதைவிடச் சிறந்த நிர்மாண வேலை இல்லை யென்பதை தெளிவு படுத்தினர். பூதான இயக்கமும், சர்வோதயத் தொண்டர்களும் அரசியல் கட்சிகளைப் பாராட்டுவதில்லை. ஆயினும் பெரிய ஸ்தாபனமாகிய காங்கிரஸ்

தமக்கு முழு ஆதரவையும் அளிக்க வேண்டுமென்று வேண்டினூர். காங்கிரஸ் தலைவர்களைக் கலந்து கொண்டு தம் நோக்கைத் தெளிவுபடுத்த அது அரிய சந்தர்ப்பத்தை அளித்தது. பூதான இயக்கத்தில் சந்தேகமோ உபேட்சையோ கொண்டவர்களும் தெளிவடைந்தார்கள். காந்தீயத்தின் பிற்படியே பூதான இயக்கம் என்பது தெளிவாயிற்று.

பூரி மகாநாட்டில் சர்வோதயத் தொண்டர்களுக்கு உபதேசம் செய்யும் வகையில் அடிகள் தொண்டர்களை இரண்டு வருஷங்களுக்கு தங்கள் பிற காரியங்களை விட்டு பூதான வேலையை ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார்: "எவர் சர்வோதய நோக்கை ஏற்றுக் கொள்கிருரோ, எவர் சர்வோதய சமுதாயத்தை ஸ்தாபிக்க விரும்புகிருரோ அவரை நாம் இரண்டு வருஷங்களுக்கு தம்முடைய பிற வேலைகளைக் கட்டி வைத்துவிட வேண்டுகின்ருேம். அவர் பூதான வேலையொன்றையே முழுப்பணியாக ஏற்றுக் கொள்ள வேண்டும். இச்சமயம் நாம் நம் பிற வேலைகளை ஒதுக்கி விட்டு பூதான வேலையைச் செய்வது சரியா அல்லவா என்பதை நாமே முடிவு செய்து கொள்ள வேண்டும். நாம் திடசித்தம் பெற்றவர்களாக வேண்டும்; இல்லையேல் திடசித்தம் பெற்றவர்களின் தலைமையை ஏற்றுக்கொள்ள வேண்டும். நமக்கும் திடசித்தமில்லாமல், நாம் தலைவராக ஏற்கின்றவருக்கும் திடசித்தம் இல்லாமற் போனுல் நாம் இறைவனுடைய அடிகளையே துணையாக ஏற்றுக் கொள்ள வேண்டும். அனைவருக்கும் இறைவனது அடிகள் உரியவை; ஆயின் அவர் அருவரானமையால் அவரடிகளைப் பற்றுவது எளிதல்ல. ஆகையால் இரண்டு வருஷங்களுத்கு நாம் ஏதோ வேலை செய்து கொண்டிருந்தால் போதாது, ஒரு நிச்சயமான வேலையை மேற்கொள்ள வேண்டும். இதைச் சிந்தனை செய்யுங்கள்" என்று கேட்டுக் கொண்டார் (26-3-55

சர்வோதயநகர் மாலைப் பிரார்த்தனை சொற்பொழிவு.)
சர்வோதய சம்மேளனத்தின் முதல் நாளன்று பூதான இயக்கத்தைத் தெளிவுபடுத்தும் முறையில் அடிகள், "நான்கு வருஷங்கள் பிரயத்தனப்பட்டு முப்பத்தேழு இலட்சம் ஏகர் நிலம் நாலேகால் இலட்சம் பேர்களிடமிருந்து தானம் பெற்றுள்ளோம். ஆயின் பாபா இவைகளைக் கொண்டு திருப்தி அடையவில்லை. பாபாவுக்கு ஐந்து கோடி ஏகர் நிலம் வேண்டும், மூன்றுகோடி தான பத்திரங்கள் கிடைக்க வேண்டும். இது தர்மசக்ரத்தின் ப்ரவர்த்தனமாகையால் பாபாவுக்கு இவ்வளவு நிலப்பசி எடுத்துள்ளது. ஒரு பிரமாண நிகழ்ச்சியில் ஆரம்பித்து இது ஒரு பெரிய வழிமுறையாக நடைபெறவேண்டும். ஆரம்பமாகிவிட்டது, மக்கள் நிலம் கொடுத்திருக்கிறார்கள். அதுவே இறைவன் ஆணை. அதை அறிந்து கொள்ளுங்கள். அதற்குமேலும் வேலை விரியவேண்டும், நாமும் திடம்பெற வேண்டும். இறைவன் ஒரு சிறிய ஆரம்பக்குறியை நமக்குக் கொடுத்தார். இவ்வேலையை மேற்கொண்டு செலுத்த நமக்குப் பிரேரணை கிடைக்க வேண்டும். பாபாவுக்கு அப்பிரேரணை கிடைத்ததால் நான்கு வருஷங்களாக அவர் சுற்றிக் கொண்டு வருகிறார், ஓயவில்லை. எதுவரை இந்தப் பிரச்னை தீர்க்கப் படவில்லையோ அதுவரை அவர் வாயை மூடமாட்டார், அலைவதை நிறுத்தமாட்டார். வெய்யிலும் மழையும் குறுக்கிட முடியா. அவைகளால் அவர் உற்சாகம் பெருகவே செய்கிறது. நாளுக்கு நாள் வயது முதிர்கிறது, ஆயின் அவர் சிந்தனையை அது தொடுவதில்லை. ஒரு தர்மப் (ஈச்வர) பிரேரணை கிடைத்திருப்பதால் அதைப் பூர்த்தி செய்யவேண்டி மரணத்தை• ஏற்கவும் திடம் உண்டாகிறது. ஆகையாலேயே நாம் உத்கலில் நிலப்பிரச்னை அமைதியாகத் தீர்ந்துவிடும் என்ற நம்பிக்கை கொள்கிறோம். கிராமங்கள் தோறும் மக்கள் நிலமற்றவர்களுக்கு நிலம் கொடுப்பதுடன் தக்ஷிணையாக

ஆரம்ப முதலையும் கொடுக்க வேண்டும். உத்கலில் 70-80 கிராமங்கள் முழுதுமாக தானம் கொடுக்கப்பட்டுள்ளன. அங்கு கிராம இராஜ்யங்கள் நிறுவப்படும். இவ்வேலையை ஏற்றுக் கொள்ள மக்கள் முன் வர வேண்டும். நூற்றுக்கணக்கில் தொண்டர்கள் தேவைப்படுவார்கள். இந்த எண்ணத்துடன் நீங்கள் மக்களை அணுகினால், அற்புத தரிசனம் பெற்று மகிழ்வீர்கள்" என்றார். நிலதானத்தை வெற்றிகரமாகக் கொண்டு செலுத்தும் தொண்டர்களிடம் அவர்களை ஜீவன் தானம் செய்யக் கோரி, "இப்புனித நகரின் மக்களாகிய நீங்கள் இப்புனித வேள்விக்கு உங்கள் ஆயுளைக் கொடுப்பீர்கள் என்று நான் நம்புகின்றேன். இவ்வேள்வியில் சேருவோர் பூதானப் பணியை ஏற்றுக் கொள்ளவேண்டும். பூதான யஞ்யத்தில் நாம் நிலத்தைக் கேட்கிறோம், சம்பத்தைக் கேட்கிறோம், ஆனால் இந்தப் புனித நகரத்தில் உங்களை ஜீவனை தானம் கொடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்" என்றார்.

1935-ல் ஒரிஸ்ஸா மகாணம் வேருகப் பிரியும் வரை கோராபட் சென்னை மாகாணத்திலிருந்தது. அது மலை நாட்டெல்லை; மக்கள் முன்னேற்றம் அடையாதவர்கள் என்று சொல்லப்படுவதுண்டு. அங்குள்ள மலைவாசிகள் நாகரிகமும் வெளிப்பகட்டும் தெரியாதவர்கள் என்பது உண்மை. இயற்கையில், மாசற்ற சூழ்நிலையில் வதியும் அவர்கள் இயற்கையான தூய்மையுடனும், கம்பீரத்துடனும், நேர்மையுடனும் வாழ்பவர்கள். வறுமை, நோய், அரசாங்க அதிகாரம் இவை பெரிதும் பீடித்தும் மனிதப் பண்பு தேயாமல் வர்ழ்கிறவர்கள். ஒரிஸ்ஸா மகாணத்து முதன் மந்திரியின் தமையனாரும் அவர் தர்ம பத்தினியாரும் நீண்டகாலமாக அம்மக்களுக்குப் பணியாற்றி வருகிறார்கள். கூட்டம் சேர்க்கும் மனப்பான்மையுடனேயாயினும் கிறிஸ்துவப் பாதிரிமார் அங்கு மக்களுக்குச் செய்து வரும் சேவையைப்

பாராட்டுவது அவசியமாகும். கோப பந்து சௌத்ரி அவர்கள் விநோபாவடிகளை அங்கு வரவழைத்தார். அடிகளும் செயற்கைத் திரிபுகள் பெறாத அக்காட்டு மக்களைக் காண விரைந்து வந்தார். ஓதி யுணர்ந்தும் பிறர்க்கு உரைத்தும் தாமடங்காப் பேதையர்களாக நாகரிகம் பெற்றோர் இருக்க, எழுத்தறிவில்லாத, நாகரிகமடையாத அக்காட்டு மக்கள் எளிதாக மனித தர்மத்தை அறியவும் பற்றவும் செய்தார்கள். அடிகள் இந்தப் பூதான இயக்கம் தாம் ஆரம்பித்த தன்று, இறைவன் பிரேரணையால் தோன்றியது, நடைபெறுவது என்பதை மனதில் பதித்தவர். எனினும் ஏட்டுப் படிப்பாளர் தங்கள் சிந்தனைத்திறன், நாவன்மை இவைகளைக் கொண்டு அடிகளைக் கலக்கியே வந்தார்கள். அக்கலக்கம் காரணமற்றது, பூதான இயக்கம் இயற்கையுடனும் மனித சுபாவத்துடனும் எளிதில் பொருந்துவது என்பதைக் காட்டுவாசிகளாகிய கோராபட் மக்கள் அடிகளுக்குத் தெளிவுபடுத்தும் முறையில் நடந்துகொண்டு இயக்கத்தின் போக்கையே பேரளவில் மாற்றியமைக்க உதவி விட்டார்கள். அறிவும் ஆற்றலும் பெற்றோர் மறைந்து ஒதுங்க, அவையற்ற இவர்கள், இந்நாட்டிற்கும் உலகிற்கும் ஒரு எளிய சீரமைப்பு முறையைக் காட்டிவிட்டார்கள். உலக வழக்கில் ஐந்து வற்புறுத்திக் கேட்டால் இரண்டு கிடைப்பதும் அதைக் கொண்டு மகிழ்வதும் உண்டு. ஆயின் அடிகள் ஆறிலொரு பங்கைக் கேட்க அவர்கள், கேட்டதைவிட ஆறு பங்கிற்கதிகமாகக் கொடுத்தார்கள். அடிகள் நிலம் கேட்க அவர்கள் தம் நிலத்தையும் தம்மையும் முழுதுமாக அடிகளுக்கு ஈந்தார்கள். ஏதோ ஆறிலொரு பங்கைக்கொண்டு உள்ள திரிசமங்களை மாற்றி சர்வோதய சமுதாயத்தை அமைக்க அடிகள் திட்டமிட்டிருக்கவும் கோராபட் வாசிகள் பழைய தடங்கல்களின்றி முற்றும் புதிதான ஒரு சமுதாயத்தை நிறுவ வேண்டிய சௌகரியம் செய்து கொடுத்துவிட்டார்கள்.

கிராமம் முழுதும் கிராமத்தார் அனைவரும் பழைய சிக்கல்களின்றி புது உலகைச் சிருஷ்டிக்கும் பெரும் பணியை அடிகளுக்கு அளித்துள்ளார்கள்.

ஆறிலொரு பங்கு நிலம் தானம் பெறுவதும், அதை நிலமற்றோருக்கு விநியோகம் செய்வதும் ஒரு பழைய வீட்டைச் சீரமைப்பது போன்றது. ஆயின் சொத்துரிமை, பணக்காரன் எளியவன் என்ற சிக்கல்கள், வரம்புகளில்லாமல் இயற்கை நிலையில் அங்குள்ள மக்களை ஒரு புதுமுறையில் அமைப்பது, அஸ்திவாரத்திலிருந்து ஒரு புது வீட்டைக் கட்டுவதைப் போல எளிதாகிறது. வீட்டை வனப்பும் வசதியும் உள்ளதாய் அமைக்கத் தடைகளில்லை. கோராபட் வாசிகள் தங்கள் உடைமையையும் தங்களையும் வினோபாவடிகளிடம் ஒப்படைத்து ஒரு புது சத்திய யுகத்தை ஆரம்பித்துவிட்டார்கள் என்றால் மிகையாகாது. எழுநூறு எண்ணூறு கிராமங்கள் முழு கிராமங்களாக தானம் கிடைத்துள்ளது.

அடிகள் இந்த இயற்கை வனப்பைக் கண்டு அதில் தாம் முன்பு திட்டமிட்டதற்கும் அதிகமாகத் தங்கினார். முழுக் கிராம தானம் எவ்வளவு பெரிய பொறுப்பைத் தந்துள்ளது என்பதை அடிகள் செவ்வனே உணர்ந்துள்ளார். கிராமதானம் பூதானத்திற்கு ஒரு புதுப் போக்கைக் கொடுப்பதையும் அடிகள் ஏற்றுக் கொண்டு தம் வேலையைப் பரந்த அளவிலும் குறுகிய காலவரையறையிலும் செய்து முடிக்க ஆர்வங்கொண்டுள்ளார். அங்கிருந்து ஆந்திர மகாணத்தில் நுழைந்து கோதாவரி, கிருஷ்ணா முகத்துவாரத்தின் வளமுள்ள பகுதிகளில் சுற்றினார். ஆந்திர நாட்டில் இயக்கம் மந்த கதியில் நடைபெறுவது அடிகளுக்குச் சற்று அதிருப்தி அளித்ததாயினும் அடிகள் அயரவில்லை. ஆந்திரத்திற்கு தன் பொறுப்பைக் கழிக்க திடமில்லை, கடமையை ஏலாக் கோழைத்தனமும் இல்லை.

அடிகள் அக்ரயபுரத்தில் பேசும்பொழுது, "பாபாவைக் கண்டு நிலப்பிரபுக்கள் பயப்படுகின்றனர். அவரிடம் எந்த அதிகாரமும் இல்லை. அவர் எந்தவிதமான சட்டத்தின் மூலமோ பலாத்காரத்தின் மூலமோ உங்கள் நிலத்தைப் பங்கிட வரவில்லை. அவர் அன்பின் மூலம் தியாக வாழ்வு வாழும் வழியைச் சொல்ல வந்திருக்கிறார். அந்திம காலத்தில் நாம் பிரம்ம நிர்வாணமடையவேண்டும். சுகபோகங்களில் ஆழ்ந்துள்ளவர்கள் பிரம்ம நிர்வாணம் அடைவது இயலாது. தியாக வாழ்வு வாழ்ந்து மரணத்தின் முன் நாம் சாந்தியாக, ஆனந்தமாக இருக்க வேண்டும். பிறக்கும் போது நாம் அழுதோம், பிறர் சந்தோஷப்பட்டனர். இறக்கும் போது நாம் ஆனந்தமாக இறக்க வேண்டும், பிறர் அழ வேண்டும். புலி-சிங்கத்தின் அந்திமகாலம் போல நம்முடையது இருக்கக் கூடாது. அவை செத்துப்பட்டால் மான் முதலிய மிருகங்கள் சந்தோஷமடையும். நாம் இறந்தது கண்டு பிறர் ஆனந்தமடையக் கூடாது. வேலை செய்பவனுக்கு இரவில் இளைப்பாற உரிமையுண்டு. அதே போன்று வாழ்வெல்லாம் தியாக வாழ்வு வாழ்ந்தவனுக்கு மரணத்தில் சாந்தியெய்த உரிமையுண்டு" என்று சொன்னார்.

விசாகப்பட்டணம், இராஜமகேந்திரவரம், முதலிய பட்டணங்கள் வழியாக அடிகள் டிசம்பர் மாதம் 16-ந் தேதி யன்று விஜயவாடாவை அடைந்தார். அதுசமயம் அங்கு சர்வசேவா சங்கம் கூடிற்று. நாட்டின் எல்லா பாகங்களிலிருந்தும் தலைவர்களும் ஊழியர்களும் வந்து குவிந்தார்கள். காங்கிரஸ் தலைவர் தேபர், திட்ட மந்திரி நந்தா முதலிய பல அரசியல் வாதிகளும் வந்திருந்தார்கள். கூட்டம் சிற்றளவில் ஒரு சம்மேளனமே ஆகிவிட்டது. பூதான ஊழியர் கூட்டம், சம்பத்து தான ஊழியர் கூட்டம் இவ்விரண்டும் நடந்தன. பூதான இயக்கத்தில் பல கட்சியினரும் சேர்ந்துள்ளார்கள்; அவர்கள் நாளை

தேர்தல்களில் எந்த அளவிற்குப் பங்கு எடுத்துக் கொள் வது என்பது விவாதிக்கப்பட்டது. விநோபாவடிகள் எளி தாக இப்பல பிரச்னைகளையும் அலசித் தெளிவுபடுத்தினர். தேர்தல்களும் இன்றைய பெரும்பான்மைக் கொள்கையு மில்லாத சமுதாய அமைப்பே சர்வோதய மென்பது அனைவருக்கும் தெளிவாயிற்று. அனைவரும் ஒருங்கு கூடிச் செய்யும் முடிவே இறைவனின் முடிவு என்று ஆகிறது. அடிகளின் தெளிவுரைக்குப் பிறகு தேர்தல் களில் பூதான ஊழியருக்கு வேலையில்லை என்பது தெளிவாயிற்று.

அடிகள் பூதான இயக்கம் ஆரம்பமாய போச்சம் பள்ளிக்குச் சென்றுவர உத்தேசித்து விஜயவாடாவி லிருந்து மேற்கு நோக்கித் தெலுங்கானா எல்லையில் பிர வேசித்தார். அவர் போச்சம் பள்ளி சென்று அங்கிருந்து தெற்கே திரும்பித் தமிழ்நாட்டை மே மாதத்தில் அடைவ தெனப் பிரயாண திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. ஏற் கனவே ஆந்திர நாட்டில் சிவராம பள்ளியில் ஒரு சர்வோ தய சம்மேளனம் நடைபெற்றுள்ளதால் இவ்வருஷம் சர்வோதய சம்மேளனத்தை தமிழ் நாட்டில் நடத்துவ தென திட்டமிடப் பட்டுள்ளது.

பாபா ஆந்திர நாட்டில் சற்றுக் கடுமையாகவே யாயினும் உண்மையைத் தெளிவாக விளக்கியுள்ளார். இடித்துரைக்கும் துணையின்மையாலேயே நம்நாடு இக் கோலத்திற்கு வந்துள்ளது என்பதை நாம் உணரும் பொழுது அடிகளின் கடுஞ்சொற்களும் நமக்கு வேண்டு பவையே என்பது விளங்கும். புகையிலைச் சாகுபடியைக் குறித்து, '' இங்கு நல்ல நிலங்களுள்ளன. கோதாவரி ஜல மும் உள்ளது. • இவற்றை நல்லவழியில் உபயோகிக் காமல் புகையிலை உற்பத்தி செய்து நம் உடலைக் கெடுத் துக் கொள்ளலாமா ? இவ்வாறு நாம் செய்வதை யாரும் தடுக்கமாட்டார்கள். கடிவாளத்தைப் பிடிக்காமல் குதிரை முன்னேறுவதைப் போல நாம் புலன்கள் வழிச் சென்றால்

அது நம்மைப் படுகுழியிலும் தள்ளிவிடும்'' என்று சொன்னார். ஓரிடத்தில் அடிகளுக்கு வாழைப்பழம் கொண்டுவரப்பட, அடிகள், "பாபாவுக்கு வாழைப் பழங்கள் வேண்டுவதில்லை, அவை விளையும் மண்தான் வேண்டும். கோராபட் ஜில்லாவில் ஏராளமாக கிராம தானம் கிடைத்தது. காரணம், அங்கு பலர் தொண்டு செய்தனர். இங்கு கொடுக்கப்படும் சிறு துண்டுகளின் தானத்தால் பூமிப் புரட்சி உண்டாகுமா? முதலாளி-தொழிலாளி பேதம் போக வேண்டும். கிராமதானம் அதற்கு அஸ்திவாரம். அதன் மேலேயே சர்வோதய சமுதாயத்தின் கட்டிடத்தை எழுப்பலாம்; கிராமத் தொழில்கள் சுவர்கள். சமத்துவம்தான் கூரை. சுதந் திரக் கொடியை அதற்குமேல் ஏற்றவேண்டும்'' என்றார்.

## VIII

## சம்பத்து–ச்ரம–ஜீவன் தானங்கள்

இந்தப் பூதான இயக்கம் நிலப்பிரச்னையை மட்டும் தீர்த்து நிலமற்றவர்களுக்கு நிலம் வழங்குவதுடன் நின்றுவிடவில்லை. மனிதனை அவன் சகோதரனுக்கும் சமுதாயத்திற்கும் உள்ள தொடர்பை நன்கு அறியவும், அவன் அவர்களுக்குச் செய்யவேண்டிய கடமைகளை விளக்கி அவனை அன்பைப் பற்றி அறத்தொடு பொருந்த ஈகையை ஏற்கத் தூண்டவும் செய்வதே பூதான இயக் கத்தின் விரிவான வேலை. ஆகையால் நிலமல்லாத பிற சொத்துப் படைத்தோருக்கும் ஏனையோருக்கும் இவ் வியக்கத்தில் பங்கில்லை என்பதல்ல. நிலம் நேர் சாதனமா கையால் நில தானம் முதலாவதாக வற்புறுத்தப்படுகின் றது. வளம்பெற்ற அனைவரும் தம் வளத்தை அது அற்ற தம் சகோதரர்களுடன் பகிர்ந்து கொள்ளவேண்டு மென்றே பூதான இயக்கம் சொல்லுகிறது. நிலம் பெறு

பவர்களுக்கு அவரவர்கள் நிலங்களில்அமர எருவிற் கென்றும், விதைக்கென்றும் பிறவற்றிற்கென்றும் பணம் உதவ அடிகள் பணமும் பெறலானுர். நிலச்சொத்தல்லாத பிற சொத்துக்களையும் பெற சம்பத்து தானத்தை ஆரம் பித்தார். அவரவர் தம் தம் வருவாயில் ஆறிலொரு பங்கை தானமாக ஒதுக்கிவைத்து அடிகள் குறிப்பிடும் வகைகளில் அத்தொகையைச் செலவு செய்து கணக்கை அடிகளுக்கு அனுப்புவதே சம்பத்து தானமுறை. அடி கள் பிறர் பொருளைத் தாம் பெறவும் அதைச் செலவு செய்யவும் அதற்குக் கணக்கு வைத்துக் கொள்ளவும் விரும்பவில்லை. தர்மத்திற்குப் பெருஞ் சொத்துகளைத் திரட்டின் அவை நன்மையினும் அதிகமாக தீமை பயப் பதை அடிகள் உணர்ந்து தாம் பிறர் பொருளைத் திரட்ட விரும்பவில்லை. கொடுப்பவர்கள் ஒன்றைக் கொடுத்த வுடன் பொறுப்பினின்று விடுபடாமல் அதைச் சரியாக விநியோகிக்க வேண்டிய பொறுப்பையும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பது அடிகளது திட்டம். அடிகள் மனிதன் நேர்மையில் பற்றுக்கொள்பவன் என்ற நம்பிக்கையுடன் அவனவன் தன் பணத்தைத் தானே தர்மம் செய்ய வேண்டுமென்கிறுர்.

சம்பத்து தானம் ஒரே அடியாகக் கொடுக்கப்படுவ தன்று. ஐந்து வருஷங்களுக்காவது ஒரு குறிப்பிட்ட தொகையை முறையாகக் கொடுக்க வேண்டும்; அதைத் தம் திட்டப்படிச் செலவு செய்யவும் வேண்டுமென்பது அடிகளின் நிபந்தனை. தங்கள் நிலத்தை மட்டும் தங்க ளிடமிருந்து பிடுங்க வந்தவராக வினேபாவைக் கொண் டவர்கள் அடிகள் சம்பத்தில் ஆறிலொரு பங்கைக் கேட்கவே, தங்கள் சந்தேகத்தை விட்டொழித்தார்கள்; தங்களை நலிவிக்க வன்று, உலகை உய்விக்க அடிகள் பெரியதோர் இயக்கத்தை ஆரம்பித்துள்ளரர் என்பதைக் கண்டார்கள். மாதச் சம்பளம், தொழில் வருமானம், முதலியவைகளைப் பெறுகின்றவர்கள் இந்த அறவேள்வி

யில் சரியான பங்கு எடுத்துக்கொள்ள சம்பத்து தானம் இடம் உண்டாக்கியுள்ளது. பத்தைந்திலிருந்து ஆயிரக் கணக்கில் மாத தானம் கொடுக்க பலர் முன்வந்துள் ளார்கள். நிலதானம் வேரூன்று மளவுக்கு சம்பத்து தானம் வளர்ந்தே செல்லும் என்று எதிர்பார்ப்பது பொருத்தமுடையதாகும். தனக்குக் கிட்டுவதை பிற ருடன் பகிர்ந்து உண்ணுவதை அன்றே வள்ளுவர் வற் புறுத்தி அப்படிச் செய்வோருக்கு வாழ்க்கை வழியஞ்சல் என்றும் இல்லை என்றுர். இல்வாழ்வானுக்கு தென்புலத் தார் தெய்வம் விருந்து ஒக்கல் தான் என்னும் எல்லோ ரையும் ஓம்புதல் அவர் விதித்த கடமையன்ருே? இன்று அடிகள் கால மாறுபாடுகளுக்கேற்ப பழைய விதியையே திருத்தி வற்புறுத்துகின்றுர். தனித்துத் தாமே துய்ப்போ மெனில் தப்புவன பலவென்பதை அறியாதார் யார்? சிறப்புடனும் மகிழ்ச்சியுடனும் உடையதைப் பிறருடன் பகிர்ந்து துய்ப்பது பெருமகிழ்ச்சியை அளிக்கும் என் பதை நம் முன்னேர்கள் எவ்வளவோ வற்புறுத்தி வந்துள்ளார்கள். இன்றையப் பொருளாதாரச் சூழ்நிலை யில்—மேனுடுகளுடன் உண்டாய தொடர்பு காரணமாக —நாம் நம் பழைய ஆதர்சங்களையும் முறைகளையும் விட்டு அல்லற்படுகிறேம்.

பொதுநலத்தைப் பேண தன் சொத்தைக் கொடுப் பதுபோல் தன் பாட்டையும் அறிவையும் கொடுக்க வேண்டுமென்பது அடிகளின் விரும்பம். ச்ரமதானம், புத்தி தானம் எனப்படுபவை இவை. இன்று எவ் வேலையும் ஊதியத்திற்காகச் செய்யப்படுகிறது. எவ் வேலையில் ஊதியம் அதிகம் கிடைக்குமோ அதையே அனைவரும் விரும்பி ஏற்றுக் கொள்ளுகிறுர்கள். தன் னலமன்றி பிறர் நலத்தைப் பேணி வேலைசெய்ய வேண்டு மென்பது அடிகளின் நோக்கம். அறிவும் அப்படியே. அறிவுள்ளவன் தன்னறிவைப் பிறர் நலம் பெருக உபயோகிப்பதே முறை என்பது அடிகளின் சித்தாந்

தம். அறிவும் பாடும் விரிந்து செல்லும்பொழுது சிற்றளவே தனிமனிதனுக்குத் தேவைகளைப் பெறவும் அமைதியாக வாழவும் போதும். அவன் பாட்டாலும் அறிவாலும் தனக்கென வளத்தையும் சௌகரியங்களையும் திரட்டுவதினும், பிறருக்கென அவைகளைச் செலவழிப்பதில் உண்மைப் பயன் அதிகம் என்பது அவரது துணிபு. இன்றுவரை உலக சமுதாயத்திற்குப் பெருந்தொண்டாற்றியவர்களெல்லாம் அவ்விதம் துணிந்தே அரிய பணியை ஏற்று வந்துள்ளார்கள். உலகின் சிறப்பே அவர்கள் தொண்டின் சிறப்பாகும். பிறர் பணியில் ஆர்வம் கொள்ளும் அவர்கள் தங்கள் பணியை அறவே மறந்து பிறர் பணியில் முழுதும் இறங்கி விடுகிறார்கள். தமக்கென முயலா நோன்றாள் பிறர்க்கென முயலுநர் உண்மையான் இவ்வுலகம் இன்றும் இயங்குகின்றது. அத்தகைய அரும் பணி பெருகு மளவுக்கு உலகின் சிறப்பும் பெருகும்.

இந்த புத்தி-ச்ரம-தானங்கள் பிணைந்து பெருகி ஜீவன்தானமாகப் பேருரு எடுத்துள்ளது. புத்த கயா மகாநாட்டில் ஸ்ரீ ஜயபிரகாசர் தம் ஆயுட்காலம் முழுவதையும் பூதான இயக்கத்திற்கும், சர்வோதய சமுதாயம் அமைக்கவும் ஈந்து பிறரையும் அவ்விதம் செய்ய வேண்டிக் கொண்டார். தொண்டிலேயே ஊறிக் கிடக்கும் விநோபாவடிகளும் தாமும் தம் ஜீவனை தானமாகக் கொடுத்து ஜயபிரகாசரின் தலைமையை ஏற்றுக் கொண்டார். தங்கள் வாழ்நாளையும் தங்கள் எல்லா க்ஷேமலாபங்களையும் இயக்கத்தில் ஈடுபடுத்தப் பல தொண்டர்கள் முன் வந்துள்ளார்கள்.

பேரியாற்று நீர்வழிப்படும் புணைபோல் ஆருயிர் இழுக்கப்பட்டுச் செல்வது பெரும்பாலரின் விதி. தம் வாழ்க்கையையும் அதன் பயனையும் ஆழ்ந்தறியும் சக்தியுள்ளவர்கள் தம் வாழ்நாள் வீணாகாமல் அதைப் பெரிய தொண்டுகளில் கழிக்க விரதம் பூணுகிறார்கள். இத்

தகைய கடிய விரதம் இன்றன்று, என்றும் நம் நாட்டில் நிலைபெற்றுள்ள ஒன்று. ஆயின் அதை ஏற்பவர் மிகச் சிலரே. இன்று பூதானமும் சர்வோதய அமைப்பும் அத்தகைய கடிய விரதத்தை நாடி நிற்கின்றன. அதற்குத் தயாராகவுள்ள தொண்டர் நூற்றுக் கணக்கிலுள்ளார்கள், ஆயிரக்கணக்கில் பெருகவும் செய்வார்கள். பண்டையில் புத்த பகவான் அழைப்பிற்கு இணங்கி எவ்வளவு பேர் குறுகிய வாழ்க்கையை நீத்துப் பெருவாழ்க்கையை ஏற்றுக் கொண்டார்கள்! இன்றும் அவ்விதம் பலர் செய்யாமலிருக்கக் காரணமில்லை. நம் நாட்டு மக்களின் இரத்தத்திலேயே துறவும் தொண்டும் கலந்து நிற்கின்றன!

## IX
## நில விநியோகம்

அடிகளோ அவர் தொண்டர்களோ நிலத்தையோ பிறவற்றையோ தமக்கென்று தானமாகக் கொடுக்குமாறு கேட்பதில்லை. தாம் தானமாகப் பெற்று ஒன்றுகூட்டி இல்லாதவர்களுக்கு அவைகளைப் பகிர்ந்துகொடுக்கவே தானம் வாங்குகிறார்கள். பணமும் பிறவும் வேறு எங்காவது எடுத்துச் செல்லப்படலாம்; ஆனால் நிலம் உள்ள இடத்திலேயே இருக்க வேண்டியதொன்று. அதை ஆங்காங்குள்ளவர்களுக்கே பிரித்துக் கொடுக்க வேண்டும். விவசாயத் தொழிலையேற்று அதிலேயே நிலைத்திருக்கும் நிலமற்றவர்களுக்கே அவர்கள் தேவையை ஒட்டி நிலம் பிரித்துக் கொடுக்கப்படும்.

விலைமதிப்புள்ள நிலத்தை இவ்விதம் தானமாகப் பெற்று அதில்லாதவர்களுக்குப் பிரித்துக் கொடுப்பது எளிதான வேலையல்ல. தம்முடைய நிலத்தை சிலர் தானமாகக் கொடுக்கும் பொழுதும், அனைவரும் சர்வோதய சமுதாயத்தை அமைக்க முயலும் சமயத்திலும் பிரித்துக்

கொடுக்கும் வேலையிலும் எவ்வளவோ அநீதங்கள் நுழைந்துவிடலாம். அடிகள் நில்விநியோகம் மிகுந்த நேர்மையுடன் நடைபெற அதில் பேரக்கறை கொள் கிருர். தொண்டர்களை சாக்கிரதையுடன் வேலையைச் செய்யச் சொல்லுகிருர். நிலமற்றவர்களே நிலத்தைப் பெறவும், அதிலும் உண்மைத்தேவையை யொட்டிப் பெறவும் பல விதிகள் வகுத்துள்ளார்.

நிலமற்றவர்கள் மூன்று வகைகளில் உள்ளார்கள். 1. பிறர்நிலத்தில் பாடுபாடும் விவசாயத் தொழிலாளிகள்; 2. நிலம் கிடைக்காது வேறு தொழில்களுக்குச் சென்றுள்ளவர்கள்; நிலங் கிடைத்தால் விவசாயத்தை ஏற்பவர்கள். 3. மிகச் சிறு பரப்பைப் பெற்றுத் தம் பிழைப்பிற்காக விவசாயத்துடன் வேறு தொழிலை ஏற்றுக் கொண்டுள்ளவர்கள். நில விநியோகத்தில் முதலாவதாக முதல் ரகத்தைச் சேர்ந்தவர்களுக்கு நிலம் கொடுக்கப்பட வேண்டும். இரண்டாவதாக மூன்ருவது ரகத்தாருக்குக் கொடுக்கப்பட வேண்டும். இவ்விரு வகையினருக்கும் முழுதுமாகக் கொடுக்கப்பட்ட பிறகு நிலம் எஞ்சுமாயின் இரண்டாவது வகையினருக்குக் கொடுக்கப்பட வேண்டும்.

தானமாகக் கிடைப்பதையே நாம் பிரித்துக் கொடுக்கக் கூடுமாகையால் முதல் இரகப் பேர்வழிகள் அனைவருக்கும் கொடுக்க நிலம் கிடைக்காத நிலையில் அவர்களில் மிகத் தகுதியுள்ளவர்களைத் தேர்ந்தெடுப்பது மிகவும் கடினமான வேலை. நிலமற்ற அவர்களே தங்களில் தகுதியுள்ளவர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டியதாகும்.

ஒரு கிராமத்தில் நிலம் விநியோகிக்கப்படுவதாயின் ஏழு நாட்களுக்கு முன்பே அங்கும் அருகுள்ள கிராமங்களிலும் அச்செய்தி விளம்பரப்படுத்தப்பட வேண்டும். தொண்டர்கள் நேரில் சென்றும் விநியோகச் செய்தி தெரிவிப்பார்கள். விநியோக நாளுக்கு முதல்நாளும் மீண்டும்

விளம்பரம் செய்யப்படும். அந்த ஏழு நாட்களுக்குள் நிலங்களைத் தாமே சென்று பார்த்து நிலவளத்தைத் தொண்டர்கள் தெரிந்துகொள்வார்கள். பஞ்சாயத்து பிரசிடெண்டுகள், கிராமக் கர்ணம் இவர்களின் உதவியையும் இவ்வேலையில் பெறுவார்கள். ஜில்லா அதிகாரிகளுக்கும் அச்சமாசாரம் தெரியப்படுத்தப்படுகிறது.

விநியோக நாளன்று கிராமத்தார் அனைவரும் குறித்த இடத்தில் கூடுகிறார்கள். நிலம் அளித்தவர்களும் அங்கு வருகிறார்கள். பூதானத் தொண்டர் ஒருவர் இயக்கத்தின் அடிப்படைகளை விளக்கி முறைகளையும் சொல்லுகிறார். பிறகு நிலமற்றவர்கள் எழுந்து நிற்கக் கோரப்படுகிறார்கள். பல தடவைகள் அவ்வாறு கோரப்பட்ட பிறகு அவர்கள் அனைவரும் நிற்கிறார்கள். உள்ளூரார் அனைவரும் அங்கு இருப்பதால் நிலமுள்ளவர்கள் நிலமற்றவரென்று தம்மைச் சொல்லிக்கொள்ள இடமில்லை. கர்ணமும் அங்கிருப்பதால் அதற்கு இடமே இல்லை.

இக்கூட்டத்தில் யாருக்கு நிலம் கொடுப்பதெனத் தீர்மானமானவுடன் அவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வாங்கப்படுகின்றன. அவர்களுக்கு நிலம் வழங்கப்படுவதாக அத்தாட்சிகள் வழங்கப்படுகின்றன. தொண்டர்கள் சாக்கிரதையுடன் தான சாஸனங்களை எழுதி அதில் கர்ணம், பஞ்சாயத்துத் தலைவர் இவர்கள் கையெழுத்துக்களை வாங்கிக் கொள்கிறார்கள். இந்த நடவடிக்கைக்கு ஒரு செலவும் கிடையாது. இம்முறையிலேயே பெரும்பாலும் உத்தரப் பிரதேசத்தில் நிலவிநியோகம் நடைபெறுகிறது. ஐந்துகோடி ஏகரைத் தானம் பெறுவதிலும் அப்பரப்பை நிலமற்ற ஏழைகளுக்குப் பிரித்துக் கொடுப்பது கடினமான வேலை என்பதை விநோபா வடிகள் வற்புறுத்தி வருகிறார். தானம் பெறுவதினும் நிலவிநியோகத்தில் தொண்டர்களிடம் அதிக நேர்மை அமையவேண்டுவது அவசியமாகிறது. உத்தரப் பிர

தேசத்தில் சேர்ந்த ஐந்து இலட்சம் ஏகர் நிலம் இப்பொழுது விநியோகிக்கப்பட்டு வருகிறது. பீஹாரிலும் அப்படியே. தமிழ்நாட்டிலும் முதல் விநியோகத்தை தலைவர் இராஜாஜி அவர்கள் செய்தார். முதன் மந்திரி காமராஜரும் தஞ்சாவூரில் ஸ்ரீ உக்கடைத் தேவர் தானமாகக் கொடுத்த நிலத்தை விநியோகம் செய்தார்.

ஹைதராபாத், உத்தரப்பிரதேசம், மத்தியப் பிரதேசம் இந்த மாகாணங்களில் பூதான, நிலவிநியோகங்களுக்கு அநுகூலமான சட்டங்களும் செய்யப்பட்டுள்ளன. தானம் கொடுப்பதிலும் செலவில்லை, விநியோகம் செய்வதிலும் செலவில்லை. நிலம் பெறுபவர்கள், நிலத்தைப் பராதீனம் செய்யலாகாது; பிறரிடம் உழவடைக் குத்தகைக்கு விடக்கூடாது. இரண்டு வருஷங்களுக்குமேல் தரிசாகவும் போட்டு வைக்கக் கூடாது. நிலவிநியோகக் குழுவினர் இதற்குமேல் விதிக்கும் பிற நிபந்தனைகளுக்கும் நிலம் பெறுபவர்கள் கட்டுப்பட வேண்டும். யுத்த சேவை, தேச சேவை இவைகளுக்காக நிலம் பெற்றவர்கள் அவைகளைத் தங்களுக்கு வருமானம் வரும் வகையில் குத்தகைக்கு விடுவதைப் போல இவர்கள் தங்கள் நிலங்களைக் குத்தகைக்கு விட்டு நிலத்தை வருமானம் தரும் சொத்தாக அல்லாமல், பிழைப்பைப் பெறும் சாதனமாகக் கொள்ள வேண்டும். அதுவே ஆதர்ச நிலவுடமையாகிறது.

மாங்குரோட் என்ற கிராமம் முழுதுமாக அடிகளிடம் சமர்ப்பிக்கப்பட்டதே. அடிகள் அங்குள்ளவர்களில் சிலரை ஒரு கமிட்டியாக நியமித்து நிலவிநியோகம் செய்யச் செய்துள்ளார். அது ஆதர்ச சர்வோதய சமுதாயமாய் அமையவேண்டிய வழியில் தன் அலுவல்களைச் செய்கிறது. மேலும் பல கிராமங்கள் முழுமையும் கொடுக்கப்பட்டுள்ளன. அங்கு கிராம சமுதாயத்தை சர்வோதய முறையில் அமைக்க சாதகமான வழியில் நில விநியோகமும், விவசாயமும் கிராமத்

தொழில்களும் பிறவும் நிறுவப்படுகின்றன. முழுப் பரப்பும் இவ்விதம் சீரமைக்கப்படக் கிடைக்கும்பொழுது வேலை எவ்வளவோ எளிதாகிறது!

# X

## தண்ட சக்தியும் லோக சக்தியும்

அரசியல் விடுதலை பெற்றதும் மக்களுக்கு அரசியலில் அதிக அக்கறை உண்டாவதும், நடக்க வேண்டிய சீரமைப்புகளை அதன் மூலம் செய்து, நாட்டை முன்னேற்ற நம்பிக்கை பிறப்பதும் பொருத்தமானவைதாம். ஆயின் அரசியல் சுதந்திரம் கிட்டியவுடன் சத்திய யுகம் ஆரம்பமாகிவிட்டது என்று சொல்வதற்கில்லை. ஆங்கிலேயர் சுயநலவாதிகள் எனில், இந்தியராய நாமனைவரும் சத்தியசீலர்கள் என்று கொள்வதற்குமில்லை. பொதுவாக அரசியல் விடுதலையைத் தம் விடுதலையாகக் கொண்டு மக்கள் அனைவரும் தம் மேம்பாட்டிற்கு வழிசெய்து கொள்ள அரசியலைப் பற்ற ஆர்வங்கொள்கிறார்கள். ஆட்சி யமைப்பு ஏதோ ரூடியாகச் செல்வதொன்று; அதை முற்றிலும் மாற்றியமைப்பதற்கு எவ்வளவோ காலம் பிடிக்கும். அரசியலை அவரவர் தம்தம் மேன்மைக்கே — பொது நலத்தைக் கருதாது — வழி கோலும் நிலைமை பொதுநலத்தைச் சிதைப்பதற்கே வழிசெய்யும். அரசியலையே எதற்கும் நம்பிக்கொண்டிருக்கும் நிலையும் தனி மனிதனின் நற்குணங்களையும் முயற்சிகளையும் அகற்றிவிடும்.

நம் சமுதாய ஒற்றுமை உணர்ச்சியைக் குலைத்தே ஆங்கிலேயர் நம்மை ஆண்டு கொண்டிருந்தார்கள். அவர்கள் நம்மை விட்டகல நமக்குப் பேரளவில் ஒற்றுமையுணர்ச்சி வேண்டியிருந்தது. ஆயின் ஜனநாயக முறையை நாம் ஏற்றுக் கொண்டு அதன் அடிப்படை

யாய தேர்தல்களையும் ஏற்றுக் கொள்ளும் பொழுது முன்புள்ள வேற்றுமையுணர்ச்சி வளர்ந்ததேயன்றி ஒற்றுமையுணர்ச்சி நிலைபெற வழியில்லை. இந்நாட்டில் சமய-சாதிச் சண்டைகளும் பாகுபாடுகளும்மட்டும் இருந்தன. இப்பொழுது அரசியல் கட்சிவாதங்களும் வர்க்கப் போராட்டங்களும் பழைய பாகுபாடுகளுடன் சேர்ந்து கொண்டு மக்களைத் துண்டாடுவதில் மிகவும் உதவுகின்றன. தேர்தல் பிரசாரம் வேற்றுமையை வளர்க்கும் பிரசாரமாயும், கிளர்ச்சிகளை உண்டாக்கும் வித்தாகவும், பிளவுகளை விரிக்கும் ஆப்புகளாகவும் அமைகின்றது. ஓரளவுக்கு ஒன்றுகூடி நாம் பெற்ற அரசியல் விடுதலையும் அதன் வழி வந்துள்ள அரசியல் வாழ்வும் நம் ஒற்றுமையைக் குலைத்துக் கலவரத்தை விளைப்பதாயின் இது நாம் கவலைப்பட வேண்டிய நிலையே. நாடாளும் மன்றத்திற்கும் கிராமப் பஞ்சாயத்திற்கும் நடக்கும் தேர்தல்கள் சிறிய பெரிய பகுதிகளில் வேண்டப்படாத சிக்கலான சூழ்நிலையை உண்டாக்கிவிடுகின்றன. தேர்தலுக்கு முன்பும் பின்பும் அவ்வவ்விடங்களில் ஒரு கலவரநிலை தோன்றி ஆக்கவேலை எதுவும் செய்யக் கூடாதுபோகின்றது.

அரசனும் பிறரும் ஆதிக்கம் செலுத்தாமல் மக்களே தங்கள் மேன்மையை நிறுவிக்கொள்ள உதவவே ஜனநாயகம் ஏற்கப்படுகின்றது. அப்பொழுது அனைவரும் சேர்ந்து சமுதாய ஆட்சியை நடத்தமுடியாததால் மக்களின் பிரதிநிதிகள், சாசுவதச் சிப்பந்திகளைக் கொண்டு சமுதாய மேம்பாட்டைப் பெற வழி வகுக்கிறார்கள் என்பதே ஜனநாயகத்தின் அடிப்படைக் கொள்கை. அறிவு, திறமை, சீலம், நேர்மை இவைகளைப் பெற்று சிலர் தன்னலங்கருதாது பொது நலத்தை நிலைநிறுத்தப் பாடுபடவேண்டும். அவர்கள் பொதுநலத்தை நிலைநிறுத்துங்கால், பொதுமக்கள் அவர்களுடன் ஒத்துழைக்க வேண்டும். தேர்தல்களிலும்

ஜனநாயக ஆட்சி அமைப்புகளிலும் இப்படியே நடைபெறுகின்றன என்றும், பொதுநலமே வளர்க்கப்படுகிறதென்றும் உறுதியாகச் சொல்வதற்கில்லை. தகுதியற்றோர் இடம் பெறுவதும் சுயநலம் வளர்ப்போர் வலுவடைவதும் பேரளவில் உள்ளதென்பதை மறப்பதற்கில்லை. குறைபாடுகள் பலவுள்ள இந்த அரசியல் முறையை நாடித்தான் மக்கள் வாழவேண்டுமென்பதுமில்லை. அரசியல் மனித சமுதாயத்திற்குத் தொண்டு செய்ய உள்ள ஒரு அமைப்பேயன்றி, அதற்காக மக்களில்லை. மக்களுக்குச் சேவை செய்யுமளவுக்கே அரசியலும் பயன்படும். அதற்கு தெய்வீக சக்தியோ, இன்றியமையாமையோ இல்லை.

மக்கள் பரந்த நிலப்பரப்பில் நிறுவப்படும் அரசியல் ஸ்தாபனத்தை நம்பிச் சிறுசமுதாயத்தின் கூட்டுறவையும், தன்முயற்சியையும் இழக்கவேண்டுவதில்லை. சிற்றெல்லையில் சிறு சமுதாயம் எவ்வளவு பிணைந்தும் அக்கறையுடனும் உழைக்கின்றதோ அவ்வளவிற்கு அரசியலால் முடியாது. ஜனநாயக தத்துவமும் சிறுபரப்பில் ஆதர்ச நிலையில் அமையும். ஆதர்ச ஜனநாயகமுறை ஆதன்ஸ் நகரில்தான் நிலைபெற்றிருந்ததென்பது சரித்திரம். சிறு பகுதி மக்கள் ஒற்றுமையும் அக்கறையும் கொண்டு தம் மேம்பாட்டைப் பெறுவதைப் போல பெரும் பகுதிகளில் கூடுவதில்லை.

அரசியலிற்கு உள்ள ஆக்கமும் வலிவும் மக்களின் ஆக்கம் வலிவு இவைகளின் திரட்சி தான். ஆகையால் மக்கள் தம் சக்திகளை அரசியல் வழி ஒன்றிலேயே பேரளவில் தொகுக்க வேண்டுமென்பது சாத்தியமுமல்ல, முறையுமல்ல. மனிதனுக்கு பல்வேறு அக்கறைகளுள்ளன. அவ்வவ்வழியின் கூட்டுறவும் பாடும் அமைவது பொருத்தமானதே. அரசியல் இன்று பிறரைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் பெற்று அதனாலேயே வலிவுள்ளதாகத் தோற்றமளிக்கிறது. மனிதன் பயஉணர்ச்சி

மட்டும் நிறைந்தவனன்று. பயத்திற்குக் கீழ்ப்படிதல் அவசியமேயாயினும் மனிதத்தன்மையை பயம் குறுக்கி விடும் என்பதைப் பார்க்கும் பொழுது பயத்தினும் வேறு சாதனம் கொண்டு மனிதனைப் பிணைக்க உள்ள வழிகளை நாடவேண்டும். மனிதன் பயத்தைப் பெற்றிருப்பதைப் போன்று, அதற்கு அதிகமாகவே அன்பைப் பெற்றிருக்கிருன்; சமூகத்துடன் சேர்ந்து இணைந்து வாழும் தன்மையும், பிறருடன் கூடிமுயலும் தன்மையும் பெற்றிருக்கிருன். இந்த உணர்ச்சிகளைக் கொண்டு அவனைப் பிணைத்து அவனை ஆக்க வேலைக்கும் நிறைவிற்கும், அமைதிக்கும் இட்டுச் செல்வதை ஏன் செய்யக்கூடாதென்ற கேள்வியும் எழுகிறது.

விநோபாவடிகள் புறக் கட்டுப்பாடு, தண்டனைக்குப் பயம் என்ற இவைகளால் மனிதனைத் திரட்டுவதைவிடப் பிற உணர்ச்சிகளால் அவனைப் பிணைப்பது சிறந்தது என்கிருர். அவர் அரசியல், அதன் அமைப்புகள், இவைகளின் குறைபாடுகளை ஆய்ந்தறிந்து, அரசியலின் தண்ட நீதியிடம் மக்களை ஒப்படைப்பதினும் அவர்களை ஒன்றுகூட்டி அவர்களிடையே லோக சக்தியை உண்டாக்குவதே சிறந்த தென்கிருர். அதனுல் பிறருக்குத் தீமையில்லை, அம்மக்களுக்கு நன்மை உண்டாம். இந்த லோக சக்தி முதலில் சிறு பகுதிகளில் நிலைபெறுதல் வேண்டும். அச்சக்தி ஆக்கவேலையை ஏற்று அப்பகுதி மக்களுக்கு நன்மைபுரிய வேண்டும். அவ்வழியே எல்லை விரிவடைதலில் பிழையில்லை. ஆயின் எல்லை விரிவடைய கூட்டுறவும் அன்புமன்றி பயமும் கட்டுப்பாடும் வேண்டியவையல்ல. அடிகள் கிராமங்கள் சுதந்திரப் பரப்புகளாகவும் கிராம ராஜ்யங்களாகவும் வேண்டுமென்று சொல்வது இந்த அடிப்படையிலேயே. தனி கிராம மக்கள் அனைவரும் திரண்டு, எவரது வாழ்க்கையும் பழுதுபாடாத வகையில் தம் தேவைகளை உற்பத்தி செய்துகொண்டு, அவைகளை

விநியோகம் செய்து அனைவரும் அமைதியாகவும் அழகாகவும் வாழ்வதே அடிகள் குறிக்கும் கிராம ராஜ்ய வாழ்க்கை. மக்கள் தன்னடக்கமும் பொறுப்பும் பெற்று வாழும் பொழுது அவர்களை மேய்க்கவும் விரட்டவும் புற அதிகாரம் வேண்டுவதில்லை. பகையன்று, அன்பு அனைவரையும் பிணைக்கும் பொழுது அரசியலிலுள்ள நிபந்தனைகளும் கட்டுப்பாடுகளும் பாதுகாப்புகளும் வேண்டியதில்லை.

அரசியலே மனிதவாழ்க்கை என்று விரிந்து செல்லும் பிழைபட்ட கொள்கையை அகற்றவும் பூதானம் முயலுகிறது. அரசாங்கம், உடையோர் இல்லார்களுக்கு நியாயம் வகுக்க பலாத்காரச் சாதனங்களைக் கையாளுவதிலும், சிறு பகுதியில் பல தலைமுறைகாலமாக உடன்வாழ்ந்தவர்கள் அன்பின் வழி ஒருவருக்கொருவர் நியாயம் வழங்கிக் கொள்வது எளிதென்பது உண்மை. சட்டங்களும் வியாக்கியானங்களும் எவ்வளவோ திரிபுகளை உண்டாக்கி உண்மையைப் பொய்யாக்குவதையும், பொய்யை மெய்யாக்குவதையும், உட்பொருளை முற்றுமாக மாற்றிவிடுவதையும் நாம் கண்டுகொண்டேயிருக்கிறோம். அவ்வாறன்றி எளிய முறையில் எவரும் புறக்கணிக்கப்படாதபடி உயர்ந்துள்ள ஒரு சமுதாய அமைப்பையே நாம் கோரி நிற்கும் பொழுது அடிகளின் சிந்தனை நமக்கு நல்ல வழியைக் காட்டுவதாய் அமைகின்றது. தனி மனிதன் வாழ்க்கைத் தேவைகளை உண்டாக்குவதும் விநியோகிப்பதும், அவைகளுக்குச் சாதனங்கள் திரட்டுவதும் எல்லாம் சிக்கலற்றவை. ஆயின் இன்று அவை பெரிய சாஸ்திர நுட்பங்களாகவும் விளக்கப்படாச் சிக்கல்களாகவும் தோற்றமளிப்பதை அடிகள் முற்றிலும் வெறுக்கிறார். மனிதப் பாடு, பாட்டின் சாதனங்கள், உற்பத்திப் பண்டங்களை அனைவரும் உய்யுமாறு விநியோகித்தல் இவை சிக்கலின்றி அன்பு அறன் நேர்மை இவைகளைத் துணைக் கொண்டு செய்து

கொள்வதுவே சிறந்த வழி என்பதை அடிகள் விடாது வற்புறுத்திக் கொண்டே செல்வதால் அரசியலாரை அவர்து புரட்சி சிந்திக்கத் தூண்டுகிறது.

## XI

## தமிழரின் பணி

நல்லது ஒன்று செய்யப்பட வேண்டுவது என்று துணிந்த பின்னும் காலந்தாழ்த்துவது மனித சுபாவம். 'அன்றறிவாமென்னுது அறஞ்செய்க' என்று குறளாசிரியரும் விதித்துள்ளார். ஆயின் நல்லதொன்றைச் செய்ய எப்படியோ காலமாகிவிடுகிறது. பூதான இயக்கம் இந்திய நாடு பூராவுக்கும் திட்டம் தான்; அதை அப்படியே நாட்டுமக்கள் அறிந்துள்ளார்கள் என்றும் கொள்ளலாம். ஆனல் விளுேபாவடிகளே மூலேமுடுக்காகச் சுற்றிய உத்தரப் பிரதேசத்திலும் பீஹாரில் போன்று நிலம் கிடைக்கவில்லே. மற்ற மாகாணங்களில் சிறிதளவு நிலம் தானமாகப் பெறப்பட்டுள்ளது. அடிகளின் இயக்கம் நாடு பூராவிற்குமேயாயினும் மற்ற மாகாணங்களில் அவ்வளவு வேலே செய்யப்படாததற்குக் காரணம், அடிகள் ஆங்காங்கு வரும் பொழுது வேலேயைச் செய்து முடித்துவிடலாமென்ற எண்ணமேயாகும். இவ்வெண்ணம் தவறென்பதை அடிகள் பல தடவைகளில் விளக்கி நாடுமுழுதும் உடனடியாக ஒரே தீவிரத்துடன் வேலே செய்யப்பட வேண்டுமென்பதை விளக்கி வந்துள்ளார். அடிகளுக்கு விசேஷச் சிறப்பு இல்லே யென்பதல்ல; ஆயினும் அவரால் ஆரம்பிக்கப்பட்ட இவ்வியக்கத்திற்கு அவரினும் குறைந்த சிறப்பல்ல, உயர்ந்த சிறப்பே உள்ளது. நமக்குள்ள பிரச்னேகள் உலகெங்கும் உள்ளன. அங்கெல்லாம் பகையுணர்ச்சியுடன் அவைகளேப் பரிகரிக்க முயலவும், நாம் அஹிம்ஸா

முறையில் மனிதனிடத்துள்ள அன்பைத் தூண்டி எளிதாக அப்பிரச்னைகளைத் தீர்க்கத் துணிவதுதான் இதன் சிறப்பு. அடிகள் ஞானியும் தவசியுமாவதால் விசேஷ கௌரவத்திற்குப் பாத்திரராயினும், அவர் மேற்கொண்ட காரியம் அதனினும் கௌரவமானதென்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டும். மெலிந்த உடலும் சிதைந்த மெய்நலமும் உள்ள அவர் ஊரூராக நடந்து நம்மிடத்திற்கு என்று வருவார் என்று காத்திருக்க வேண்டிய அவசியமே இல்லை. அன்று என்னுது இன்றே தமிழராகிய நாம் இந்த அறப்பணியை துரிதமாகச் செய்து முடிக்க வேண்டும்.

தானம் நிறைந்த தமிழ்நாடென்று கவியால் பாடப்பட்டது, ஈகை நிறைந்து தனிச் சிறப்புப் பெற்றது தமிழ்நாடு. நாயன்மார்களும் ஆழ்வாராதிகளும் தோன்றி தெய்விகம் கமழச் செய்துள்ளார்கள். கோயில்களும், அன்ன சத்திரங்களும், தருமஸ்தாபனங்களும் நிறைந்து கிடக்கும் தமிழ்நாட்டில், எளியோருக்கு நிலம் வழங்க, அவர்களை என்றென்றைக்குமாக நன்னிலையிலமர்த்த, அவர்களுக்கு என்றுமுதவுமாறு அன்னதானம் செய்யப் பெருமனது படைத்தவர்கள் இல்லையென்பதல்ல. அடிகள் தமிழன் ஒவ்வொருவனையும் தன் கடமையை உணர்ந்து ஈடேற்றச் சொல்லுவதை இங்கு நினைப்பூட்டுதல் அவசியமாகிறது. பெருவளம் படைத்தோரே இத்தானத்திற்கு உரியர்களென்பதல்ல; எவரும் தமதுடைமையில் ஆறிலொரு பங்கை சமுதாயத்திற்கும், அது பெறுத தன் உடன்பிறப்பிற்கும் கொடுப்பதே அடிகள் வேண்டுவது. பெருவளம் படைத்தோர் காலந் தாழ்த்த வேண்டுமென்பதல்ல; ஆயின் அவர் காலந்தாழ்த்தக் கூடும். சிறுவளம் பெற்றோர் அப்படியின்றி உடனடியாகத் தம் கடமையைச் செய்யவேண்டும். அவர்கள் தம் கடமையை ஆற்றும் பொழுது வளம்பெற்றோர் பார்த்துக் கொண்டு வாளா இருப்பது எவ்விதத்தும் கூடுவதல்ல.

சிறுவளத்தோர் தம் கடமையைச் செய்துமுடிக்கவும், அவர்களைத் தொடர்ந்து பெருவளக்கார்கள் வருவார்கள். இவ்விதம் அனைவரும் முனையும் பொழுது இப்பெரு வேள்வி எளிதாக முடிந்துவிடும்.

சர்வோதயத் தொண்டர்களாகத் தம்மைப் பதிவு செய்து கொண்டவர்களின் எண்ணிக்கை தமிழ் நாட்டிலே பிற மாகாணங்களிலும் அதிகம். சர்வோதய இலட்சியத்தை அடையவேண்டின் பூதானமன்றி வேறு சாதனம் ஏது? அனைவரும் உயர்ந்தெழுவதே நம் பிரார்த்தனையாகக் கொண்டால், அதற்கு முதற்படி பூதானம். நிலமற்ற விவசாயிகளுக்கு நிலம் பெற்றுத் தருவது முதல்வேலை. இன்றைய சிக்கலான சூழ்நிலையில் உள்ள உற்பத்திச் சாதனங்களைப் போன்றல்லாது நிலம் நேரிடை உற்பத்திச் சாதனமாக எவ்வளவு பேர்களிடம் அமையுமோ அவ்வளவிற்கே சர்வோதய சமுதாயமும் வலியடையும். உயிரை நிலைக்கச் செய்யும் உணவின் உற்பத்திச் சாதனமாகிய நிலம் நேர் முறையில் அமைக்கப்படும் பொழுது பிற உற்பத்திச் சாதனங்களும் திரிசம மற்று நேரடிச் சாதனங்களாக அமைந்து, அன்பும் கூட்டுறவும் நிறைந்த சர்வோதய சமுதாயம் நிலைபெற வழியாகும்.

தமிழ்நாட்டில் பூதான வேலை சிறப்பாக நிறுவப் பட்டுள்ளது. வினோபாவடிகளுடன் உத்தர பிரதேசத்தில் சில மாதங்கள் யாத்திரை செய்து பூதான இயக்கத்தின் இலட்சியங்களையும் நடைமுறைகளையும் தெரிந்துகொண்டுள்ள ஸ்ரீ ஜகந்நாதன் அவர்கள் தமிழ்நாட்டில் கன்வீனராக பூதான இயக்கத்தை நடத்துகிறார். ஜில்லாக்கள் தோறும் கமிட்டிகள் நிறுவப்பட்டுள்ளன. பழுத்த சமுதாயத் தொண்டர்களும் காங்கிரஸ் வாதிகளும் அக்கறையுடன் இத்தொண்டை ஏற்றுக் கொண்டுள்ளார்கள். கால்நடை யாத்திரைகள் நடத்தப்படுகின்றன. வடநாட்டுத் தலைவர்களான ஸ்ரீமான்கள் சங்கரராவ் தேவ்,

ஜயப்பிரகாச நாரயணர், தர்மாதிகாரி, வல்லபஸ்வாமி ஆகியோர் தென்னுட்டில் யாத்திரைகள் செய்துள்ளார் கள். 'சர்வோதயம்', 'கிராம ராஜ்யம்', 'கிராமோதயம்' முதலிய பத்திரிகைகள் பூதான இயக்கத்தை பிரசாரம் செய்கின்றன. தினசரிப் பத்திரிகைகளும் ஓரளவிற்கு ஆதரவு கொடுத்தே நிற்கின்றன. மக்கள் அனைவரும் இயக்கம் யாதென்பதை ஓரளவிற்குத் தெரிந்துகொண்டு விட்டார்கள். தம் கடமையை ஆற்றுபவர்களும் நாளுக்கு நாள் எண்ணிக்கையில் பெருகி வருகிருர்கள். சேதுபதி இராஜா, ஸ்ரீமான் சங்கர ரெட்டிபோன்ருேரும் தஞ்சாவூர் ஸ்ரீ சாம்பசிவ அய்யர், உக்கடைத் தேவர், நாடிமுத்துப் பிள்ளை போன்ருேரும் பெருவாரியான நிலம் கொடுத் துள்ளார்கள். மனமுவந்து தம் பணியாற்ற எவ்வளவோ பேர் தம் சிறு உடமையிலும் ஒரு பகுதியைக் கொடுத் துதவியுள்ளார்கள். ஆயினும் முதற்கணக்குப்படிச் சேர வேண்டிய அளவு நிலமே இன்னும் தானமாகக் கிடைக்க வில்லை என்று குறிக்க வருத்த முண்டாகிறது. தாக்க நிற்கும் ஆடு பின்பெயர்வதைப் போல நாம் ஆர்வத் துடன் முன்னேறி, இருபத்தைந்து இலட்சமன்று, ஐந்து கோடி ஏக்கரில் நமக்காகும் பங்கையும் பெற்றுவிட ஊக்கம் கொள்ளவேண்டும்.

செல்வம் நிலையற்றது, நாமே அதைத் துய்ப்பதென் பதும் கூடுவதில்லை. அது அதிகமாயின் உடையவனுக்கு நன்மையினும் தீமையை அதிகமாகப் பயப்பது. இவ் வுண்மை உலகம் தோன்றியது முதல் வெள்ளிடை மலை யாய உண்மை. ஆசையும் வஞ்சனையும் பிறரதை வௌவுவதும், அதைப் பற்றுள்ளத்துடன் காப்பாற்று வதும், பிறகு அப்படிக் காப்பாற்றப்பட்ட பொருளை அது வந்த வழியே பிறர் பற்றுவதும் இவையெல்லாம் மனித சமுதாயத்திற்குத் துன்பத்தையன்றி நன்மையை அளித்துவிடவில்லை. பகையை மூட்டி வஞ்சனையாக அல்லாமல் வலியப்பற்றி உள்ளதை அனைவருக்கும்

வகுக்க எண்ணுபவரும் சித்தாந்தங்களுமுள்ளன. அவர்கள் அழக் கொண்டவைகள் அழப்போம் என்னும் உண்மையை உணர்வதில்லை. பகையும் பலாத்காரமும் இன்றி அன்புடனும் நேர்மையுடனும் மனிதன் நடந்து கொள்ள இன்றும் தகுதியுள்ளவன் என்ற நம்பிக்கை இன்றேல் சமுதாய வாழ்க்கையில் எப்படி எவ்வளவிற்கு யார் தான் நம்பிக்கை கொள்ள முடியும்? இதுகாறும் மனிதனைப் பேயாக அன்று, மனிதனாகக் கொண்டே உலகம் சென்றுள்ளது, பிழைபட்டிருப்பினும் திருத்திக் கொண்டுள்ளது. மனிதனைப் பேயாகக் கொண்டு முற்றும் திரித்துவிட்டால் என்னிலைமை உண்டாமென்பது இன்று விளங்கவில்லை. இந்த நேர்வழி இயக்கம் பூதான இயக்கம். இதில் நம் நாடு வெற்றி பெறும்பொழுது உலகமும், உலகிலுள்ள வளமும் அனைவருக்கும் உதவுவதாய் அமைந்து மனித சமுதாயமே மேம்பட வழியுள்ளது என்பதைப் பிறரும் ஒப்புக் கொள்ளுகிறார்கள். நாட்டின் பண்பாட்டிற்கு ஏற்ற வழி இது. இவ்வழி நாம் கடமையை ஆற்றின் உலகைப் படைத்துக் காத்தழிக்கும் இறைவன் கருணை நமக்கு அதிகமாகவே கிட்டும்.

தமிழ் நாட்டில் நிலமல்லாத பிற வளங்களுக்கும் செல்வர்களுக்கும் அறிவாளிகளுக்கும் குறைவில்லை. பூதானத்துடன் பொருள் தானம், புத்தி தானம் ச்ரம தானம், இறுதியாகத் தங்கள் வாழ்க்கையையே அர்ப்பணம் செய்து கொள்ள இடமளிக்கும் ஜீவன்தானம் இவை பலவும் பெருக வேண்டும். நில முண்டு, பொருளுண்டு, அறிவுண்டு, ஆற்றலுண்டு, மனிதனுக்கு ஆர்வம் வேண்டும். இவ்வியக்கத்தை வெற்றிகரமாக முடித்து வைக்குமீ ஆர்வத்தை நமக்களிக்க இறைவனை இறைஞ்சுவோமாக!

# அநுபந்தம்

## 1955 டிசம்பர் 20உ வரை நாடு முழுவதிலும் பெற்ற பூதான–நிலவிநியோக விவரங்கள்

| மாகாணம் | கிடைத்த நிலம் (ஏக்கர்) | தானபத்திரங்கள் | விநியோகமானது (ஏக்கர்) | பெற்ற குடும்பம் |
|---|---|---|---|---|
| பீஹார் | 23,69,159 | 2,97,356 | 48,303 | 25,875 |
| உத்தரப் பிரதேசம் | 5,64,031 | 23,143 | 68,303 | 32,842 |
| இராஜஸ்தான் | 3,68,949 | 5,348 | 15,964 | 2,461 |
| உத்கலம் | 2,72,738 | 90,894 | 36,900 | 5,582 |
| மத்தியப் பிரதேசம் | 1,21,557 | 26,009 | 37,930 | 6,582 |
| ஹைதராபாத் | 1,12,360 | 4,785 | 34,052 | 7,450 |
| மத்திய பாரதம் | 51,987 | 5,014 | 311 | — |
| தமிழ் நாடு | 44,696 | 11,751 | 774 | 266 |
| சௌராஷ்டிரம் | 28,154 | — | 4,294 | — |
| குஜராத் | 39,240 | 8,877 | 6,400 | 2,351 |
| மகாராஷ்டிரம் | 29,473 | 6,596 | 1,710 | 358 |
| கேரளம் | 28;163 | — | 19 | 9 |
| ஆந்திரம் | 22,372 | — | — | — |
| பஞ்சாபு-பெப்சு | 14,638 | 3,355 | 826 | 205 |
| வங்காளம் | 11,041 | 6,262 | 1,646 | 1,395 |
| டில்லி | 9,245 | 249 | 90 | 25 |
| மைசூர் | 8,789 | 3,427 | — | — |
| விந்தியப் பிரதேசம் | 7,753 | 1,559 | — | 293 |
| கர்நாடகம் | 3,492 | 674 | 458 | 128 |
| ஹிமாலயப் பிரதேசம் | 2,025 | 66 | — | — |
| அஸ்ஸாம் | 1,950 | — | — | — |
| பம்பாய் | 123 | 6 | — | — |
| மொத்தம் | 41,11,928 | 4,95,372 | 2,58,883 | 85,772 |

CONNEMARA PUBLIC LIBRARY
2 - AUG 1956
MADRAS

# எமது காந்தீய–சர்வோதய இலக்கியம்

## மகாத்மா காந்தி எழுதியவை

| | விலை ரூ. | அ. |
|---|---|---|
| சர்வோதயம்—ரஸ்கினின் Unto this Last-இன் சாரம் (3-ஆம் பதிப்பு) ... | 0 | 5 |
| ஆசிரம வாழ்க்கை ... | 1 | 4 |
| ராம நாமம் (2-ஆம் பதிப்பு) ... | 0 | 12 |
| நீதி தர்மம் (2-ஆம் பதிப்பு) ... | 0 | 4 |
| சமூகத்தில் ஸ்திரீகளின் ஸ்தானம் (3-ஆம் பதிப்பு) ... | 0 | 4 |
| சர்க்காவும் அஹிம்சா சமுதாயமும் ... | 1 | 0 |
| ராட்டை—தத்துவ விளக்கம் ... | 1 | 4 |
| கீதா போதனை ... | 0 | 12 |
| காந்திஜியின் சுயசரிதம் (சுருக்கம்) ... | 2 | 0 |
| காந்தி ஆசிரம பஜனாவளி ... | 0 | 8 |

## அன்னை கஸ்தூரிபாவின் சரித்திரம்

| | | |
|---|---|---|
| எமது பா—முதல் பாகம்—வனமாலா பரீக் ... | 1 | 4 |
| ,, இரண்டாம் பாகம்—சுசீலா நையர் ... | 1 | 4 |

## காந்திஜியைப் பற்றியவை

| | | |
|---|---|---|
| காந்திக் காட்சிகள்—காகா காலேல்கர் ... | 1 | 4 |
| பாபூ—என் தாய்—மனு காந்தி (2-ஆம் பதிப்பு)... | 0 | 12 |
| பாப்பாவின் காந்தி—ஜுகத்ராம்தவே (2-ஆம் பதிப்பு). | 0 | 12 |

## தத்துவ நூல்கள்

| | | |
|---|---|---|
| காந்தியும் மார்க்ஸும்—மஷ்ரூவாலா—விநோபாஜியின் முன்னுரையுடன் ... | 1 | 4 |
| காந்தீய நவநீதம்—மஷ்ரூவாலா (3-ஆம் பதிப்பு) ... | 1 | 8 |
| காந்தீயப் பொருளாதாரம்—ஜே. சி. குமரப்பா ... | 1 | 4 |

---

கிடைக்குமிடம் :

**சர்வோதயப் பிரசுராலயம்**

**சீனிவாசபுரம் : : தஞ்சாவூர்**

# ஆதாரக்கல்விப் பள்ளிகளுக்குப் பயன்படும் எமது நூல்கள்

## கதர் சாஸ்திரம்

| | | விலை ரூ. | அ. |
|---|---|---|---|
| பருத்திப் பிரசினை | ... | 0 | 6 |
| நரம்பு செய்தல் | ... | 0 | 8 |
| பட்டைபோட சுலப வழி | ... | 0 | 4 |
| கிஸான்-பெட்டி-ஈரிழை ராட்டை | ... | 1 | 0 |
| தக்ளியால் நூற்பது எப்படி ? | ... | 0 | 8 |
| நூற்புக் கலையின் நுணுக்கங்கள் (4-ஆம் பதிப்பு) | ... | 1 | 0 |
| கைராட்டை—அதன் சரித்திரமும் புத்துயிரும் (2-ஆம் பதிப்பு) | ... | 1 | 8 |
| கதர் நெசவு | ... | 0 | 8 |
| நூற்புக் கணிதம்—கிருஷ்ணதாஸ் காந்தி முதல் பாகம் (3-ஆம் பதிப்பு) | ... | 0 | 6 |
| இரண்டாம் பாகம் | ... | 0 | 8 |
| மூன்றும் ,, | ... | 0 | 14 |
| நான்காம் ,, | ... | 1 | 0 |

## சம்பூர்ண கிராம சேவை நூல்கள்

| | | | |
|---|---|---|---|
| மலஜல சுத்தி—வல்லபஸ்வாமி | ... | 0 | 8 |
| துப்புரவு விஞ்ஞானம்—தீரேந்திர மஜும்தார் | ... | 0 | 8 |
| சுயம்பூர்ண கிராமம் | ... | 0 | 5 |
| புக்கர் வாஷிங்டன்—வ. வே. சு. ஐயர் | ... | 0 | 8 |
| எமர்சனின் தன்னம்பிக்கை —வ. வே. சு. ஐயர் மொழிபெயர்ப்பு | ... | 0 | 12 |
| கீதைப் பேருரைகள்—விநோபா பாவே (இரண்டாம் பதிப்பு) சாதா பைண்டு | ... | 1 | 0 |
| காலிகோ ,, | ... | 2 | 8 |

கிடைக்குமிடம் :

சர்வோதயப் பிரசுராலயம்

சீனிவாசபுரம் : : தஞ்சாவூர்